Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් ஆக.19-25, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 421

## சந்திரிக்காவின் புதிய நகர்வு




## ஐ.தே.க.வின் கைநழுவிய துருப்புச் சீட்டு



# ஆன்மீகம்

## தியானம் செய்வது எப்படி?



தியானம் (யோகம்) செய்ய வேண்டும் என்ற ஏக்கம் கொண்டவரிடத்தில் எப்படித் தியானம் செய்வது என்ற கேள்வி எழுவது இயற்கையே. எப்படி, எங்கு மனதை நிறுத்த வேண்டும் என வினவுகிறார்கள். மந்திரம் செபிக்க வேண்டுமா என்கிறார்கள், செபமாலையை உருட்ட வேண்டுமா? கற்பனையில் ஏதாவது தேவதையின் உருவத்தை நினைக்க வேண்டுமா? எனக் கேட்கிறார்கள்.

துவாபர யுகத்தில் இருந்து இன்றைய நாள் வரை பலர் பலவிதமான தியான முறைகளை கற்பித்திருக்கின்றனர். அவர்கள் இறைவனை போன்றும் சொற்றொடர்களை ஜெபிக்க வேண்டுமென்றும் ஒரு தேவதையின் உருவத்தை மனக்கண்ணால் காணவேண்டும் என்றும், ஜெபமாலையை உருட்ட வேண்டும் என்றும், மனதை இறைவனல்லாத ஏதாவது ஒரு பௌதிக பொருளின் மேல் நிலைகொள்ள செய்ய வேண்டும் என்றும் பலவிதமாக கற்பித்திருக்கின்றனர். இறைவனை உள்ளபடி உண்மையாகத் தெரிந்து மனம், சொல், செயலில் தூய்மையுடனிருந்து அவரோடு இணைந்து போதலே தியானம் செய்ய மிக்க ஆர்வம் கொண்டவர் கடைப்பிடிக்க வேண்டுவதாகும்.

நெருங்கிய உறவினரின் உருவம் மனக் கண்முன் எப்போதும் இருந்து அவரின் அன்பில் கட்டுண்டு போதலே மூலமந்திரம் ஆகும். அதேபோல இறைவனோடு ஒன்றியிருக்க இறைவனைப்பற்றி சரியாக தெரிந்திருப்பதோடு எண்ணம் சொல் செயலில் தூய்மையுடன் இருத்தல் அவசியம்.

'ஓம் சாந்தி'

பி.கு.விக்கி-கல்முனை.

## இரகசியமும் பரகசியமும் இறைவனுக்குத் தெரியும்!

★ மேலும் (மனிதர்களே) நீங்கள் உங்கள் கூற்றை இரகசியமாக ஆக்குங்கள்; அல்லது அதை (சப்தமிட்டு) பகிரங்கமாக ஆக்குங்கள்; (யாவற்றையும் அல்லாஹ் நன்கறிந்து கொள்வான்; ஏனென்றால்) நிச்சயமாக அவன் நெஞ்சங்களிலுள்ளவற்றை நன்கறியக் கூடியவன்.

★ (யாவற்றையும்) படைத்தவன், அவனோ நுட்பமான (அறிவுடையவனாக, யாவையும் நன்குணர்பவனாக இருக்க (நெஞ்சங்களில் உள்ளவற்றை) அவன் அறிய மாட்டானா?

★ அவன் எத்தகையவனென்றால், உங்களுக்குப் பூமியை (வாழ்வதற்கு) எளிதானதாக அவன் ஆக்கி வைத்தான். ஆகவே, அதன் பல பாகங்களில் சென்று, அவன் (உங்களுக்கு அளித்திருக்கும்) உணவிலிருந்து உண்ணுங்கள், (உங்களுடைய மண்ணறைகளிலிருந்து) உயிர் பெற்றெழுதல் அவன்பாலே இருக்கிறது.

★ வானத்திலிருப்பவன், உங்களை பூமியில் அழுந்தச் செய்துவிடுவான் என்பதிலிருந்து நீங்கள் அச்சமற்றிருக்கின்றீர்களா? (பூமியாகிய) அது அந்நேரத்தில் நடுங்கும்.

அல்குர்-ஆன் 67: 13,14,15,16.

இளம்பிறை.

## சோதனையை சகிக்கிறவன் பாக்கியவான்

இயேசு சொல்லுகிறார் "நான் உன்னை தாயின் வயிற்றில் உருவாகு முன்னே அறிந்தேன்." (எரேமியா 1:5) நீ பயப்பட வேண்டியதில்லை. பல்வேறு விதமான சோதனைகள் உன்னை வாட்டலாம். கர்த்தர்மேல் உறுதியாய் இரு. உலகமும் உலகத்திலுள்ளவர்களும் உனக்கு ஆறுதல் தர முடியாது. உனக்கு ஆறுதல் தர ஒருவர் உண்டானால் அவர் தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. நீ கர்த்தரை விசுவாசித்தால். உன் தகுதிக்குமேல் சக்திக்குமேல் உனக்கு எந்த சோதனையும் வராது கர்த்தர் பார்த்துக் கொள்வார். சோதனை வந்துவிட்டதே என்று பதறி உலகத்தை நம்பி நீ ஓட வேண்டாம். தேவனை அறியாது எதுவும் நேரிடாது என்பதை நீ அறியாததல்ல. சோதனையோடு கூட ஒரு போக்கையும் ஏற்படுத்துவார். சோதனையைப் பொறுமையோடு சகித்தால், நம்மில் உள்ள கறைகளை நீக்கி நம்மைச் சுத்தம் படுத்துவார் அதிக கன-மகிமையை நமக்குத் தருவார்.

அக்ஷாள்-கமலா.

## கவிதைப் போட்டி இல.421



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 25.08.2001

கவிதைப் போட்டி இல.421
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.418


### பரிசுக்குரிய கவிதை

### கவனம்...!

குண்டென்று அறியாமல்
குழந்தை நீ எடுத்துவிட்டாய்
குடித்துவிடும் உன்னுயிரை
குதறிவிடும் உன் உடலை
கொடியவர்கள் கண்டால்
கொண்டு போய்விடும் முகாமில்
கொலையாளி என்று சொல்லி
கொடுமைப்படுத்த உன்னையும்!

ஆர்.ஜி.ஜெயராமன்-கொழும்பு-15.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### வெற்றி

என் உருண்டை ஆனாலும்
ஏழாய் பிய்த்தெடுத்து
உண்டு வாழ்ந்திடுதல் புத்தி ஆகும்.
லட்டு உருண்டை தன்னை
இலாவகமாய் பகிர்ந்து மூவர்
மகிழ்ந்துண்டு வாழ்ந்தால் இது
வெற்றி ஆகும்.

செல்வி த.தமயந்தி-
சாம்பல்தீவு.

### இல்லாதிருக்கட்டும்!

உங்களிடையே பரிமாறப்படும்
பூமியிலாவது அமைதி கொல்லும்
யுத்தமும், மானிடர்களின் ரத்தமும்,
வெடிகுண்டுகளின் சத்தமும்,
நிலவாது இருக்கட்டும்!

பி.ஹ.சு.ஷிப்லி-நிந்தவூர்-18.

### ஒற்றுமைக்கு ஒருகை

தமிழராய் பிறந்தோம்
அமைதியை இழந்தோம்
ஒற்றுமையாய் கைகோர்ப்போம்
உலகையே வென்றெடுப்போம்

அ.தினேஷ்காந்-உடப்பு-01.

### தேவையில்லை

கரமடங்கும் சிறுபொருளே
கைக்குக் கைமாறி-கன
விலையைக் கேட்டுவிட்டால்
கலங்கிடவோ அதன்பின்னே..?
தெரியாத பொருளெதுவும்
தேவையில்லை கரங்களிற்கு!

இ.மஞ்சு-வவுனியா.

### வேண்டுகோள்!

கள்ளமில்லா கண்மணியே...!
கபட கரம் கொடுக்கும் கவளம் கண்டு!
ஆவல் கொண்டு அதனையும் நீயும்..!
அணைத்துக் கொள்ள எண்ணிடாதே..!
புரியாத வயதில் உனக்கு!
தெரியாது இது கைக்குண்டென்று,

ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

### தினம் ஒரு பொதி(ரி)

யானைப் பசிக்கு போட்ட சோளப்பொரி
எதுவோ? நம்
சிறுபான்மையினருக்குப் போட்ட
உருண்டைப்
பொதி இதுவோ?

க.ஆறுமுகராஜா-கம்பளை.

### ஜனநாயகம்?

பிறக்கும் குழந்தைக்கும்
இனவாத...
உணர்வை ஊட்டும்
ஜனநாயகம்...!

எஸ்.பி.பாலமுருகன்-பதுளை.

### உயர்ந்ததே!

தொட்டுப் பார்த்து
சரிபார்க்கும் -இந்த
குட்டிக்கரத்துக்கு,
உணவூட்டும்-அந்த
உள்ளங்கை உயர்ந்ததே'

பெரோஸ்-ஆரையம்பதி

# உங்கள் பக்கம்

## பாரதி அழித்திடுவோம் என்றாரா? அளித்திடுவோம் என்றாரா?

சுப்பிரமணிய பாரதியார் ஓரிடத்தில் "தனியொருவனுக் குணவிலையெனில் தரணியை அழித்திடுவோம்" என்று பாடியுள்ளார். அவ்வாறாக அழித்தலாக இல்லாமல் செய்யாது அளித்திடுவோம்; அதாவது தொடுத்திடுவோம் என்றுதான் பாடியிருப்பார் என்பது எனது கருத் தாகும்.

மக்களும் மண்ணும் வளம் பெற்றுச் சுதந்திர வாழ்வு வாழ வேண்டுமென்று கனவு கண்டவர் தனியொருவன் உணவுக்காகத் தரணியை அழிக்கமுற்படமாட்டார். பதிலுக்குப் பஞ்சம் போக்குவதற்காக விவசாய வளம் பெருக நிலதானம் எனும் தரணியை அளித்திடுவோம். அதாவது கொடுத்திடுவோம் என்றுதான் பாடியிருப்பார். பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதைவிட உழவுத் தொழிலின் உயர்வு காட்ட நிலம் தொட்டு வளம் பெருக்க உதவுதல் உயர்வன்றோ; உணவு கொடுப்பதிலும் உணவை உண்டு பண்ண உதவுதல் உயர்வன்றோ; சோம்பேறிக்கு உண்ண வழிகாட்டவென பூமி அழிக்கப்படுமானால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ முடியுமா? "மீன் கொடுப்பதிலும் மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பது மேல்" அல்லவா?

உணவு இல்லையென்று இருப்பவரை இகழுவாரேயன்றிப் பாரதி தரணியை அழிக்க முன்வரார்; ஏனெனில் பஞ்சத்தில் தோய்ந்தும் சுடர்விட்டு நின்றவன் பாரதி; ஆகவே பாட்டுக்கொரு புலவனாய் பாரதி "அழித்திடுவோம் என்னாது அளித்திடுவோம்; என்று தான் பாடியிருப்பார் என்பதே எனது கருத்தாகும்.

அ.சுப்பிரமணியம்-கோப்பாய்.

## மலையக மாணவரின் கல்வி நிலை!

கல்வியில் படிப்படியாக முன்னேற வேண்டிய மலையகமானது சமீபகாலமாக பல்வேறு பிரச்சனைகளில் சிக்கி திணறி வருகின்றது. ஏற்கனவே பாடசாலைகளில் பாலியல் முறைகேடுகள் நடப்பதாக அவ்வப்போது செய்திகள் வந்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தலவாக்கலையிலிருக்கும் ஒரு பாடசாலையில் மாணவர்கள் இருவர் தற்கொலை செய்ய முயன்று ஒருவர் இறந்துவிட மற்றொருவர் இன்னமும் ஆபத்தான நிலையிலிருப்பதாக அறியமுடிகின்றது.

ஏற்கனவே பல்வேறு வகையான பிரச்சனைகளில் சிக்கி சின்னாப்பின்னமாகியிருக்கும் அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் தங்களின் பிள்ளைகளாவது 'படிக்கட்டும்' என்று பாடசாலைக்கு அனுப்பினால் அங்கும் பிரச்சனைகளாக இருக்கின்றன. தற்போது பரீட்சைக்கு தோற்ற வேண்டிய நிலையில் நிலை குழைந்து போயிருக்கும் இந்த தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமோ என்ற பயம் தேன்றியுள்ளது.

இன்றைய மலையகக் கல்வித் துறையானது அரசியலால் முற்றாக கையகப்படுத்தப்பட்டு விட்டதோ என்ற ஐயம் அநேகருக்கு எழுகின்றது. தலவாக்கலையில் நடந்துள்ள சம்பவங்களைப் பார்க்கும் போது ஆசிரியர்களிடையே அரசியல் பலம் சம்பந்தப்பட்டுள்ளதாக சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. குற்றம் செய்தவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க முடியாதளவுக்கு அதன் செல்வாக்கு வியாபித்திருப்பதாக பொது மக்கள் பேசிக்கொள்கிறார்கள். எவ்வாறாயினும் ஏழ்மை நிலையிலிருக்கும் தன் பெற்றோர்களை காப்பாற்றவும் தங்களின் எதிர்கால நன்மைக்காகவும் பாடசாலைக்குக் கல்வி கற்க வரும் மாணவர்களின் உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையில் அவர்கள் எப்படி கல்வி கற்க முன்வருவார்கள். தற்கொலை செய்யுமளவுக்கு அந்த மாணவர்கள் செய்த குற்றம் என்ன? ஆசிரியர்கள் தங்களின் கடமைகளை சரியாக செய்கிறார்களா? இந்நிலை தொடருமானால் மலையகம் எப்படி விமோசனம் அடையும்? மலையகத்தின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்கள் உடனடியாக இவ்விடயத்தில் தங்கள் கவனத்தைத் திருப்ப வேண்டும். செய்வார்களா?

பாலா.சங்குபிள்ளை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266


# வாசக[ர்] சாலை



தேனிலும் இனிய முரசே! செவிகளுக்கு தெவிட்டாத தேனாக உனது செய்திகள் எனும், பக்கங்கள் வாசகர் இதயங்களில் இடம் பிடித்த காதலியே! சுமக்கும் சுமை, தமிழர்களுக்கு பயனுள்ள, பசி தீர்க்கும் உணவே! உனது பணியினைக் கண்டு தமிழினமே உன்னை வாழ்த்துகின்றதே! உனது 419வது இதழில் சுமந்த சுமைகளுள் 'தலவாக்கலை ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் குறுக்கீடுகள்' என்ற செய்தி, வாசக நெஞ்சங்களுக்கு, குறிப்பாக மலையக நலன் விரும்பிகளுக்கு, பல உண்மைகளை வெட்ட வெளிச்சமாக்கியது.

மேலும் 'சிவாஜி ஒரு சகாப்தம்', 'விமானப் படைக்களத் தாக்குதல்', நான்காவது ஈழப்போரின் ஆரம்பமா? என்ற செய்திகளுடன், முரசு 419ல் மலர்ந்த விளையாட்டுச் செய்தி, சினிமா, சிறுகதை, தொடர்கதை ஹிட்லரின் வரலாறு, ஏனைய அரசியல் கட்டுரைகள் அனைத்தும் இன்ப நதியாய் என் செவிகளுக்கு பாய்ந்து, என் இதயத்தை தொட்டவையே! மென் மேலும் உனது தமிழ்ப்பணி வெற்றி மாலையுடன் வலம் வர வாழ்த்துகின்றான் இந்த 'தமிழ் பித்தன்'.

கா.சுபாஷ்-டிக்கோயா.

## என்னையும் அணைத்திடுவாய்

என் உயிரில் ஆழ்ந்திருக்கும்.

என் முத்தமிழ் முரசே! நாட்கள் தாமதமானாலும் உன் வரவுக்காய் காத்திருப்பேன். வெளிநாடுகளில் முரசுக்காக காத்திருக்கும் ஆயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருத்தி. கவலையும் கண்ணீருமாய் இருக்கும் என்னை மகிழ்வூட்டும் என் இனிய முரசுக்கு எனது பலகோடி வந்தனம். நான் முரசுக்கு எழுதும் முதல் கடிதம் இது. என்னையும் வாசகர் சாலைக்குள் அணைத்திடுவாய் என்று நம்பிக்கையில் இதனை அனுப்புகின்றேன். உன் பணி தொடர்ந்து, நீடிக்க எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

எஸ்.மகேஸ்வரி- ஓமான்.

இனிய முரசே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அத்தனையும் அருமையிலும் அருமை என்றால் மிகையாகாது. கடல் கடந்துவாழும் எங்களுக்கு நீ கொண்டு வரும் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் மிகவும் சுவையானதே. ஒவ்வொரு வாரமும் ஞாயிறை உனக்காக எதிர்பார்க்கும் நாங்கள், உன்னை எப்படிப் பாராட்டினாலும் ஈடாகாது. ஒன்பது வருடம் அல்ல ஒன்பதாயிரம் வருடம் நீ அற்புதமாகவே விளங்க வேண்டும்.

ஈழ மகன், கவீந்திரன்-குவைத்.

## மெருகேறட்டும்

419வது முரசில் தலைப்புச் செய்தி மகுடம் சூட்டியதுபோல் கலக்கலானது. 3 ம் பக்கச் செய்திகள் முக்கியமானது. அதிலும், தலவாக்கலை ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் குறுக்கீடுகள், இது இதர பத்திரிகைகளில் வந்ததைவிட எழுதப் பட்டவிதம் சிறப்பானது. முரசும் பறைந்த முதலில் செய்ய வேண்டியது முற்றிலும் உண்மையே. கதிர்காமர் ஓடி ஓடிக் களைத்துவிட்டது இப்போது ஓரளவு தெரிகிறது. சொல்லிச் சொல்லியே காலங்கடத்துவதைவிட செயலில் செய்தால் மக்கள் தலையில் சுமைகள் ஏறவேண்டியிருக்காதே; 'தகவல் பெட்டி' தந்த தரவுகள் வியக்கத்தக்கது.

மேலும் பல மெருகேற்றம் பரவட்டும் புகழாரம் முரசுக்கு.

கவிக்குயிலன்-சேனையூர்-06.

வாசமுள்ள மலரே,

'ஈழத்தின் இணையற்ற எழுத்துச் சிற்பி' தொடர் மிகவும் பாராட்டுக்குரியது. இத்தொடரை மிகுந்த ஈடுபாட்டோடு வாசிக்கிறேன். இரா. பத்மநாதன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்!

உலகம் உள்ளளவும்
உன்னத இடம் பெற்று
உலகமெலாம் வலம் வந்து
கலகங்களைக் கண்டித்து
உயர்ந்த தினமுரசே!
காத்திருக்கும் வாசகருக்கு
கடிதாய் விரைந்து வந்து
வடிவான வர்ணங்களால்
நாடி எமை தேடி வாங்கவைக்கும்
தினமுரசே,
திகழ்கின்ற புகழோடு
வாழ்க என்றென்றும்!

க.சத்தியராஜி, அளவெட்டி.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

## மாணவர்களுக்கு உதவும் முரசே!

தமிழ்பேசும் மக்களுக்கென தலைசாயாத பிரகாசிக்கும் முரசே!

என் அன்பின் முரசே! நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் சிறப்பானவை. மேலும் நீ சிறுவர்களுக்காக வழங்கும் 'பாப்பா முரசு' சிறுவர்களுக்கு மட்டுமல்ல, எம்மைப் போன்ற உயர்தரம் படிக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் உதவுகின்றது. இதுபோல் உனது சேவையில் தொடர்ந்து எமது கல்விக்கு உதவி புரிவாயென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஆர்.எவ்.முர்ஸிதா பேகம்-இறக்குவானை.

# ஜே.வி.பி.யின் தீர்மானத்தால் எதிர்க்கட்சிகளின் திட்டங்களில் குழப்பம்

## ஐ.தே.க.விடமிருந்த துருப்புச் சீட்டு கைநழுவிப் போகும் நிலை

செப்டம்பர் 7ம் திகதிக்குப்பின்னர் பாராளுமன்றம் மீண்டும் திறக்கப்பட்டால், ஐக்கியதேசியக் கட்சி சமர்ப்பித்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசாங்கம் தோல்வியைத் தழுவலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சில நிபந்தனைகளின் அடிப்படையில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்க பாராளுமன்றத்தில் 10 உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) முன்வந்ததையடுத்து அரசாங்கத்தை உடனடியாக வீழ்த்திவிடலாம் என்ற ஐதேகவின் நம்பிக்கையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

5 ஆணைக்குழுக்களை அமைத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து ஒரு வருடகாலத்திற்கு அரசாங்கத்தை ஆதரிக்க ஜே.வி.பி. சம்மதம் தெரிவித்துள்ளது. இதனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழந்திருந்த அரசாங்கம் மீண்டும் பாராளுமன்றம் கூடும் போது நம்பிக்கையில்லாப் பிரேரணையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுமளவுக்கு பலம் பெற்றுள்ளது.

225 பேரைக்கொண்ட பாராளுமன்றத்தில் ஜே.வி.பி.யையும் சேர்த்து எதிர்கட்சி வரிசையில் 115 பேர் உள்ளனர். நிலையில் ஜே.வி.பி. அரசுக்கு ஆதரவளிக்குமாயின் 109 பேர் கொண்ட ஆளுந்தரப்பு பெரும்பான்மைப் பலத்தைப் பெறும். எதிர்க்கட்சியில் இருக்கும் சில உறுமய உறுப்பினரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது அரசுக்கு ஆதரவாகவே வாக்களிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் செப்டம்பர் 7ம் திகதிக்கு முன்பதாகவே பாராளுமன்றத்தைக் கூட்ட எதிர்க்கட்சிகள் எடுக்கும் முயற்சி பலனற்றுப்போகும் நிலை தோன்றியுள்ளது. ஒத்திவைக்கப்பட்டுள்ள பாராளுமன்றத்தை எதிர்வரும் 20ம் திகதி கூட்டச் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சித்து வருகின்றனர். இதன் முன்னோடி நடவடிக்கையாக 17ம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்ற குழு அறையில் எதிர்க்கட்சிகளின் விசேட கூட்டமொன்றும் நடைபெற இருக்கிறது.

ஜனாதிபதியின் உத்தரவைமீறி பாராளுமன்றத்தைத் திறக்க முயற்சிக்கு எதிரணியிலுள்ள 115 உறுப்பினர்களும் ஆதரவு கிடைக்குமென முன்னதாக தெரிவிக்கப்பட்டிருந்ததபோதும் ஜே.வி.பியின் புதிய நிலைப்பாட்டினால் அதில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. பலாத்காரமாக பாராளுமன்றத்தைக் கூட்டும் முயற்சிக்கு தாம் ஆதரவளிக்கப்போவதில்லை என அந்தக் கட்சி திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்களின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் ஜனாதிபதியின் உத்தரவைமீறி பாராளுமன்றத்தைக் கூட்டலாமென எதிர்க்கட்சி சட்ட ஆலோசகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக செயற்பட ஹிஸ்புல்லாஹ்வுக்கு தடை உத்தரவு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு விதித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிர்வாகம் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் தலைமையில் செயற்பட்டு வருகையில், அண்மையில் ஹிஸ்புல்லா தலைமையில் கூடிய குழுவொன்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ஹிஸ்புல்லாவையும் கட்சியின் செயலாளராக சட்டத்தரணி நிஸாம் காரியப்பரையும் நிர்வாக சபையொன்றையும் தெரிவு செய்தது.

இதனை எதிர்த்து முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தானே எனக் கூறியும், தற்போது தெரிவு செய்யப்பட்ட நிர்வாகச் சபை சட்ட விரோதமானது என அறிவிக்குமாறு கோரியும் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் ரவூப் ஹக்கீம் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுமீதான விசாரணையிலேயே ஹிஸ்புல்லாவுக்கு தடையுத்தரவு விதிக்கப்பட்டது.

## தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிக்குமாறு அமைப்பாளர்களிடம் ரணில் வேண்டுகோள்

பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்துள்ளதால், பாராளுமன்ற அமர்வுகளைத் தவிர்ப்பதிலேயே கவனம் செலுத்தி வருவதாகவும் அக்டோபர் மாதம் 18ம் திகதி வரை இதனை இழுத்தடித்து விட்டு பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி திட்டமிட்டுவருவதாகவும் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தேர்தலை எதிர்கொள்வதற்குரிய சகல ஏற்பாடுகளையும் தொகுதிகளிலிருந்து கொண்டு செய்யுமாறு அமைப்பாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் கடந்தவாரம் நடைபெற்ற அமைப்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியிருக்கிறார்.

மாவட்ட மட்டத்தில் தனித்தனியே அமைப்பாளர்களுடன் கலந்துரையாடிய எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு-கிழக்கு மாகாண அமைப்பாளர்களுடன் உரையாடுகையில், வடக்கு-கிழக்கு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான திட்டமொன்று தம்மிடம் இருப்பதாகவும், தாம் பதவிக்கு வந்து மூன்று மாத காலத்திற்குள்ளாக அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

முடிந்தளவு தத்தமது தொகுதிகளிலிருந்து கொண்டு பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரிய விக்கிரமசிங்க, ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் எமது போராட்டத்தில் மக்களை அணிதிரட்டுமாறும் கேட்டுக் கொண்டார்.

## இன வன்முறைகள் குறித்து ஆராயும் ஆணைக்குழு முன்னிலையில்

## புலம்பெயர்ந்தவர்களும் சாட்சியமளிக்கலாம்

இன வன்முறைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவிற்கு சாட்சியமளிப்பதற்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் முன்வரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள அதேவேளை, ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிப்பதற்கு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிப்பதா என்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன வன்முறைகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட தனி நபரோ அல்லது அமைப்போ இது குறித்து ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க முடியும். மேலும் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வாழ்பவர்களிலிருந்து வாய்மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அல்லது வேறு சாதனங்களைப் பயன்படுத்தியோ வழங்கப்படும் தகவல்களை ஆணைக்குழு பெறுக்கொள்ளும்.

சாட்சியமளிப்பவர்கள் குறித்த தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும் என்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இன வன்முறைகளுக்கு தனியொரு நபரோ அல்லது அமைப்போ நேரடியாகவோ, மறைமுகமாகவோ காரணமாக உள்ளனரா என்பது குறித்தும் இன வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கோ, அல்லது அவர்களினது குடும்ப உறவினர்களுக்கோ எத்தகைய நஷ்டஈடை அளிக்கலாம் என்பது பற்றியும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதை எவ்வாறு தடுக்கலாம் என்பது குறித்தும் மூன்று பேர்கொண்ட இந்த ஆணைக்குழு ஆராயும்.

## இருதரப்பினரதும் 438 சடலங்கள்

## கடந்த ஆண்டு ஐ.சி.ஆர்.சி. ஊடாக கைமாற்றம்!

கடந்த வருடம் புலிகளின் 227 சடலங்களும் படையினரின் 209 சடலங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கைமாற்றப்பட்டதாக அந்தச் சங்கத்தின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்தன தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவில் இடம்பெற்ற தாக்குதலில் பலியான 14 விடுதலைப்புலிகளின் சடலங்களை பொறுப்பேற்று புலிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும்படி படைத்தரப்பினர் தெரிவித்துள்ளதாகவும் அது பற்றி வன்னியில் உள்ள புலிகளின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது, அவர்களிடம் இருந்து பதில் வரவில்லை என்றும் செய்தியாளர் மாநாடொன்றில் அவர் கூறியுள்ளார்.

## வரட்சியினால் அம்பாந்தோட்டை பகுதி கடுமையாகப் பாதிப்பு

## 3 இலட்சம் பேர் பட்டினி அபாயத்தில்!

தென்னிலங்கையின் மொனராகலை அம்பாந்தோட்டைப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் 3 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக 7 இலட்சம் அமெரிக்க டாலர் தேவைப்படுவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைப்பகுதியில் கடந்த 50 வருடத்தின் பின்னர் இவ்வாறானதொரு வரட்சி நிலை தோன்றியுள்ளது. கடந்த 21 மாதங்களாக இப்பகுதியில் போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்காத காரணத்தினாலேயே இவ்வாறான வரட்சி நிலை தோன்றியுள்ளதோடு,இப்பகுதியில் பயிர்செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் உஷ்ண நிலையினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பாடசாலைகளில் மாணவர்களின் வரவும் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் மயங்கி விழுதல், போஷாக்கின்மையால் ஏற்படும் நோய்கள் என்பன அண்மைக் காலமாக கடுமையாக அதிகரித்துள்ளது.

## 'துறைமுகத்தை பாதுகாப்பது எப்படி?'

## இஸ்ரேலிய நிபுணர்கள் பாடம் நடத்துவர்!

கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பைப் பொறுப்பேற்றுள்ள இலங்கைக் கடற்படையினருக்கு விசேட பயிற்சிகள் வழங்க இஸ்ரேலியப் பாதுகாப்புக் குழுவொன்று இலங்கை வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ள பாதுகாப்பு அமைச்சின் அழைப்பின் பேரிலேயே இஸ்ரேலிய நிபுணர் குழு இங்கு வரவுள்ளது.

தற்போது உலகில் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான நடவடிக்கைகளில் இஸ்ரேலியர்களின் உதவி நாடப்பட்டு அந்தந்த நாடுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புதிய முறையில் அணுகிவருகின்றன. இதனடிப்படையிலேயே இஸ்ரேலியர்களின் உதவியை இலங்கையும் நாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்க தாக்குதலின் பின்னர், இலங்கை யுத்தம் நடைபெறும் ஆபத்தான நாடெனச் சில சர்வதேச நாடுகள் பிரகடனப் படுத்தியுள்ளன. வேறு சில நாடுகள் தங்கள் நாட்டவர்களை இலங்கைக்குச் செல்லவேண்டாம் என்றும் எச்சரித்துள்ளன. விமான சேவை நிறுவனங்கள், கப்பல் நிறுவனங்கள் பல இலங்கைக்கு வருவது ஆபத்தைத் தோற்றுவிக்கும் எனக் கூறி இலங்கைக்கான தமது பயணச் சேவைகளை இடைநிறுத்தியுள்ளன.

இதனால் இலங்கையின் உல்லாசப் பயணத்துறை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத் துறையும் பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

## மூன்று புலிகள் பலி

கடந்த 10ம் திகதி வவுனியா-விளக்கு வைத்த குளம் பிரதேசத்தில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் கப்ரன் ஒருவர் உட்பட மூன்று புலிகள் பலியானதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

கப்ரன் சோ.தவச் செல்வன் (தமிழேந்திரன் - மாங்குளம்), த.தருமசீலன் (தமிழரசன்-மன்னார்), இ.ரமேஷ்குமார் (சமுவேந்தன்-மன்னார்) ஆகிய புலிகளே பலியாகியுள்ளனர்.

இந்த மோதல் கடந்த 10ம் திகதி இடம்பெற்றுள்ளது.

## மாணவி கடத்தல்

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவியை இனம் தெரியாத சிலர் கடத்திச் சென்ற சம்பவம் கரணவாய்ப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இச்சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இம்மாணவி கொடிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து கரவெட்டிப்பகுதியில் வாழ்ந்து வருபவர்.

## "யாருக்கும் கப்பம் கொடுக்க வேண்டாம்"

## என்கின்றனர் படையினர்!

சோதனைச் சாவடியிலுள்ள படையினருக்கோ அல்லது அப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள தமிழ் இயக்கங்களுக்கோ கப்பப் பணம் எதையும் செலுத்த வேண்டாம் என்று படையினர் கேட்டுள்ளனர்.

பொதுமக்களிடமிருந்து எவராவது பணம் வசூல் செய்ய முயற்சி செய்தால் அது பற்றி உடனடியாக மட்டக்களப்பு 233வது படைத்தலைமையகத்திற்கு அறியத் தரவேண்டும் என்று படையினர் கேட்டுள்ளனர். இந்த அறிவித்தல் செங்கலடி-பதுளை வீதிச் சோதனைச் சாவடியிலுள்ள அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டுள்ளது.

கப்பப் பணம் பெறும் ஆயுத பாணிகள் பொதுமக்களைப் பல்வேறு வழிகளில் துன்புறுத்துகின்றனர் என்றும் இதுபற்றி உயரிடங்களுக்கு அறிவித்தால் தம் மீது பழிவாங்கப்படும் என்றும் பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

## புலிகளின் முகாம்களை விட்டு தூர விலகி இருக்குமாறு படையினர் துண்டுப் பிரசுரம்

கிழக்கில் படையினரின் பாரிய தாக்குதல் திட்டம் ஒன்றை எதிர்வு கூறும் வகையில் புலிகளின் முகாம்களை விட்டு தூர விலகியிருக்குமாறு கோரும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

புலிகளின் ஆளுகையின் கீழுள்ள மட்டக்களப்பு-பதுளை வீதி, படுவான்கரைப் பகுதி பொதுமக்களுக்கு இந்த எச்சரிக்கை துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; எல்.ரீ.ரீ.ஈ. யினரின் தளங்கள் அமைந்துள்ள பகுதிகளிலிருந்து குறைந்தது 4 கிலோ மீட்டராவது பொது மக்கள் தூர விலகியிருக்க வேண்டும். தமது பாவனைக்குத் தேவையான இரண்டு மாதங்களுக்குரிய உணவுப்பொருட்களைக் கையிருப்பில் வைத்திருங்கள். புலிகளின் முகாம்களுடனோ அல்லது புலி உறுப்பினர்களுடனோ வைத்துள்ள தொடர்புகளைக் கைவிடுங்கள்.

புலிகளது தளங்கள் அவர்களது நடமாட்ட இலக்குகள் பற்றிய முழு விவரங்களும் பொதுமக்கள் மூலமும், ஏற்கனவே சரணடைந்துள்ள புலி உறுப்பினர்கள் மூலமும் கிட்டியுள்ளன.

அதனடிப்படையில் குறித்த இலக்குகள்மீது அதி நவீன போர்க் கருவிகளுடன் ஆகாய மற்றும் தரைத் தாக்குதல்கள் நடத்தப்படும் இவ்வாறு அந்த எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படையினரின் முகாம்களை அண்டி வாழும் பொது மக்களைத் தூர விலகியிருக்குமாறு புலிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மிகக் கண்டிப்பான எச்சரிக்கை விடுத்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் மின் விநியோகம்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான இரு வழிமின் விநியோகத்தில், இங்கினியாகலை ஊடான மின் விநியோக வழியை பாரிய மூன்று மின் கோபுரங்களைச் சேதப்படுத்தியதன் மூலம் புலிகள் தடை செய்திருந்தனர்.

இவற்றை திருத்தியமைப்பதற்கும் புலிகள் இ.மி.சபையைத் தடை செய்திருந்தனர். எனினும் 25 நாட்களின் பின் மீண்டும் மின்விநியோகம் மட்டக்களப்புக்குக் கிடைக்கவும், தம்மால் சேதமாக்கப்பட்ட மின் கோபுரங்களைத் திருத்தவும் புலிகள் அனுமதித்தனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த 11ம் திகதி முதல் மட்டக்களப்பு நகரிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கொக்கட்டிச் சோலை வரையான பெரும்பகுதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

## தொப்பிகல பகுதியில் தொடர்ந்து தாக்குதல்

கடந்த இரு வாரகாலப் பகுதியில் கிழக்கின் காட்டுப் பகுதிகளில் பல தடவை இலங்கை விமானப் படையின் தாக்குதல்கள் நடந்துள்ளன.

பொலன்னறுவை, அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லைப் பகுதியான தொப்பிகல மலைப் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் இலக்குகள்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக படைத்தரப்பு கூறுகிறது.

படையினரின் எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரம் வெளியாவதற்கு முன்னரே புலிகள் பங்கர்கள் அமைத்துள்ளதோடு, பொது மக்களின் போக்குவரத்தைத் தடைசெய்து தாக்குதலுக்குத் தயாரான நிலையிலேயே, படையினர் முந்திக் கொண்டு காட்டுப் பகுதிகள் மீது குண்டுத்தாக்குதல் நடத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் புலிகள் தாக்குதல் திட்டங்களுக்காக தொப்பிகலவில் அணி திரண்டுள்ளனர் என்று படைத்தரப்பு கூறியுள்ளது.

## ஆலய உற்சவத்தில் துப்பாக்கிச் சூடு

## இரண்டு முஸ்லிம்கள் பலி!

ஏறாவூர் கருமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது திருவிழா நிகழ்ச்சிகளைக் காணச் சென்ற இரு முஸ்லிம்கள் மீது புலிகளின் பிஸ்டல் குழுவினர் தாக்குதல் நடத்தியதில் அவ்விருவரும் கொல்லப்பட்டனர்.

ஏறாவூர் 5ம் குறிச்சி கருமாரியம்மன் கோவில் தீ மிதிப்புத் திருவிழாவிற்கான 11ம் திகதி இச்சம்பவம் இடம் பெற்றது.

புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இரு முஸ்லிம் இளைஞர்களில் எம்.சித்தீக் (28) என்பவர் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார். இவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் சேவையை விட்டு விலகியவர். மற்றையவரான எம்.எம்.வாஜித் (30) பல வருடங்களுக்கு முன்னர் ஊர்காவற் படையில் கடமையாற்றி விலகியவர்.

இவர்கள் சுடப்பட்ட வேளையில், பொதுமக்கள் 5 பேரும் பிஸ்டல் சூட்டில் காயமடைந்தனர்.

# முரசம்

## மன்னிக்கப்படக் கூடாது!

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

ஆசிரியர்கள் எனப்படுவோர்
மாணவர்களுக்கு கற்பிப்பவர்கள்
மாத்திரமல்ல,
மாணவர்களால் கற்கப்பட
வேண்டியவர்கள் என
கல்வியியலாளர்கள் கூறுகின்றனர்.

அதாவது மாணவனுக்கு
வழிகாட்டும் முதல் புத்தகம்
ஆசிரியர்கள் என்பதுதான்.
இந்த ஆசிரியர் தொழிலுக்கு
இழுக்கை ஏற்படுத்தும்
செயல்கள் இப்போது
பரவலாக நடக்கின்றன.

மாணவி ஆசிரியரால்
பாலியல் பலாத்காரம் செய்யப்
பட்டதாகக்கூறும்
செய்திகள் தாராளமாக
வெளிவருகின்றன.

இந்த வகை சம்பவங்களின்
வரிசையில் அண்மையில்
தலவாக்கலையில் நடந்த சம்பவம்
கவலைக்குரியது.

தரக்குறைவான
நடத்தை கொண்ட
ஆசிரியர்கள் சிலரின்
நடவடிக்கைகளை
அம்பலப்படுத்திய
மாணவன் இளையகண்ணனுக்கு
அதற்கான 'கூலியாக
தனது உயிரை விடவேண்டிய
நிலை ஏற்பட்டது.

காலாகாலமாகத் தொடரும்
மலையக மக்களின்
துன்பங்களுக்கு மத்தியில் இருக்கும்
ஒரே ஆறுதல்
'நமது பிள்ளைகளாவது
நான்கெழுத்துப் படித்து
நன்றாக வாழ்வார்கள்' என்ற
நம்பிக்கை மட்டும்தான்!

அதனால்தான் தேயிலைக்
கூடைகளுக்குள் தொலைந்துபோன
தமது வாழ்க்கையை தேடிவரும்படி
கூறி சொல்லொணா துன்பங்களுக்கு
மத்தியில் ஒவ்வொரு
பிள்ளையையும் பாடசாலைக்கு
அனுப்புகிறார்கள்.

அங்கே அவர்கள்
மாணவர்களாக மாத்திரம்
வளர்க்கப்பட வேண்டும்
என்பதுதான் பெற்றவர்களின்
எதிர்பார்ப்பு.

ஆனால் அந்த காரியத்தை
பொறுப்பேற்றிருக்கும் சில
ஆசிரியர்கள்
தமது மிருகத்தனத்துக்கு
மாணவிகளை இரையாக்க
முயற்சி செய்வதாக புகார்கள்
தெரிவிக்கப்படுகின்றன.

தலவாக்கலை தமிழ்
மகாவித்தியாலயத்திலும்
இதே போன்ற அசிங்கம்
அரங்கேறியிருக்கிறது.

அதனை தட்டிக் கேட்ட
மாணவர்கள் தற்கொலை
செய்து கொள்ளும் அளவு
கண்டிக்கப்பட்டு
அவமானப்படுத்தப்பட்டுள்ளார்கள்

தவறிழைத்தவர்களுக்கு
எதுவுமில்லை
தட்டிக்கேட்டவர்களின்
முடிவ ரயில் தண்டவாளத்தில்!

உயிரிழந்த மாணவன்
கல்வியில் மிகவும் திறமையானவன்
என்றும் ஒரு மருத்துவராக
வரக்கூடியவனென்றும்
அறிந்தவர்கள் கூறியிருந்தனர்.

அரசியல்வாதிகளின் மரணத்தில்
மட்டுமே 'ஈடுசெய்ய
முடியாத இழப்பை' உணரும்
பலருக்கு இந்த மாணவனின்
முடிவு மலையகத்துக்கு
கிடைக்கவிருந்த ஒரு மருத்துவரின்
இழப்பாகத் தெரியவில்லை.

குறிப்பிட்ட சம்பவத்துடன்
தொடர்புடைய ஆசிரியர்களுக்கு
எதிராக இதுவரையில்
எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட
வில்லை என்ற செய்தி
இன்னும் கவலை தருகிறது.

அந்தத் துரோகிகள்
மன்னிக்கப்பட்டால்,
அவர்களை காப்பாற்றிய
துரோகிகளை மலையகம்
ஒரு நாள் நிச்சயம்
தண்டிக்கும்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

**என்றென்றும்**
**அன்புடன்,**

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சந்திரிக்காவின் புதிய நகர்வு

இன்றோ நாளையோ கவிழலாம் என்றிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் குறைந்தபட்சம் அடுத்த ஒரு வருட காலத்தையாவது கடத்தக் கூடியவாறு ஓரளவுக்கு தன்னை பலப்படுத்திக் கொண்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்டது போலவே ஜே.வி.பி. அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணி ஒரு வருட காலக்கெடுவை அறிவித்திருந்தாலும்கூட அதை முற்றுமுழுதாக நம்பும் நிலையில் அரச தரப்பும் இல்லை என்றே தெரிகிறது. ஜே.வி.பி.யின் ஆதரவை பெற்று அரசாங்கத்தை நடத்த வேண்டுமா என்ற கேள்வி சில அமைச்சர்களிடமிருந்து எழுப்பப்பட்டுள்ளது. இனிமேல் சிறைக்கைதியாகத்தான் அரசாங்கம் இருக்கும் என்று எஸ்.பி.திஸாநாயக கூறியிருந்தார்.

சர்வஜன வாக்கெடுப்பை பின்போட்டதன் மூலம் போட்டியே இல்லாமல் மறைமுகவெற்றியை குடத்துக்கு பெற்றுக்கொடுத்த ஜனாதிபதியின் முன்னிலையில் தற்போது மூன்று தெரிவுகள் இருக்கின்றன.

அதில் முதலாவது செப்டம்பர் 7ம் திகதியின் பின்னர் பாராளுமன்ற கூட்டத்தொடரை மீண்டும் ஒரு தடவை ஒத்திவைத்து அக்டோபருக்குப் பின்னர் தேர்தல் ஒன்றை சந்திப்பது. ஆனால் இத்தகையதொரு முடிவை பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் உள்ள பல்வேறு பிரிவுகள் கடுமையாக எதிர்க்கின்றன. உடனடியாக தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கும் அளவு மக்கள் மத்தியில் தமக்கு செல்வாக்கில்லை என்பது அவர்களது அபிப்பிராயம். அதே நேரம் மறுபுறத்தில் வர்த்தக சமூகத்தினரும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளும் அடிக்கடி தேர்தல் நடத்துவதை விரும்பமாட்டார்கள். இந்த தரப்புகள் ஏற்கனவே தமது அதிருப்தியை அரசாங்க உயர் மட்டத்துக்கு முன்வைத்துள்ளன. திடீர் தேர்தல்களால் நாட்டின் பொருளாதாரம் மேலும் அதல பாதாளத்துக்கே செல்லும் என்பது அவர்களது கருத்து.

இரண்டாவது தெரிவு மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைக்கப்பட்டிருக்கும் நன்நடத்தை கால அரசாங்கம் தொடர்பான கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பது. மூன்றாவது விடயம் ஐ.தே.க. கூறுவது போன்று ஜனாதிபதி அதிகாரங்களை குறைத்துக் கொண்டு அனைத்தையும் ரணிலிடம் ஒப்படைப்பது. இவற்றுள் முதலாவது வழிமுறையும் மூன்றாவது வழிமுறையும் குறைந்த பட்ச சாத்தியக்கூறுகளுடன் பரிசீலனையில் உள்ளது.

இப்போது ஜே.வி.பி.யின் ஆலோசனைதான் முழு அளவில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. கடந்த வாரம் ஜனாதிபதியை சந்தித்த ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அதன்படி ஒரு வருடகாலத்துக்குள் உத்தேச ஆணைக்குழுக்கள் 5யும் அரசாங்கம் நிறுவ வேண்டும். காபெந்து அரசாங்கமொன்றின் கீழ் அடுத்த பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். அமைச்சரவை 20 ஆக குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முக்கியமானவை. இதில் அறைகுறை உடன்பாடு காணப்பட்டு, அடுத்த கட்ட பேச்சுக்கள் தொடரவிருக்கின்றன.


உண்மையில் ஜே.வி.பி.யின் கோரிக்கைகள் நடைமுறைக்கு வருமாயின் அதில் நாட்டுக்கும் மக்களுக்கும் பல இலாபங்கள் இருக்கின்றன. அதே நேரம் அந்த கட்சியின் நன்நடத்தை காலத்துக்குள் இனப்பிரச்சனை தொடர்பாக யுத்தத்தை தவிர வேறெந்த மாற்று வழியும் கையாளப்படக்கூடாதென முறைமுகமாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இது மிகப்பெரும் குறையாகவும் பின்னடைவாகவும் கருதக்கூடிய ஒரு விடயம்.


ஜே.வி.பி.யின் கோரிக்கை கொத்தில் இனப் பிரச்சனை என்ற ஒன்று இந்த நாட்டில் இருப்பதாகக்கூட எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த இடைவெளியால் ஜே.வி.பி.யின் கோரிக்கையில் உள்ள வெறுமை தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்க் கட்சிகளின் தொடர்ச்சியான தவறுக்கு இந்த இடத்தில்தான் முதல் தண்டனை வழங்கப் பட்டுள்ளது. எந்தப் பேயுடன் இணைந்தாவது பொதுஜன ஐக்கிய முன்னணியை கவிழ்த்தே தீருவது என்று தமிழ்க்கட்சிகள் நினைக்கும் போது அதை தடுத்து தமது அதிகாரத்தை காப்பாற்றிக் கொள்ள அரசாங்கமும் ஏதாவது ஒரு பேயின் ஆதரவை நாடும் என்று எதிர்பார்க்கலாம்.

சிறுபான்மை கட்சிகள் சாதுர்யமாக செயற்பட்டிருக்குமாயின் அரச நிருவாகத்தின் முக்கிய முடிவெடுக்கும் பலம் ஜே.வி.பி.யின் கைகளுக்குச் செல்வதை தடுக்க முடியுமாகியிருக்கும். ஆனால் அவை அந்தளவு தூரம் சிந்தித்ததாகத் தெரியவில்லை.






ஜே.வி.பி.யின் ஆதரவை பெற ஐ.தே.க. தன்னாலான சகல முயற்சிகளையும் செய்தது. அது சாத்தியப்பட வில்லை. அந்த முயற்சியில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஓரளவு வெற்றி கண்டது.

தமிழ்க் கட்சிகளின் வேண்டுகோள்களை செவி மடுக்கும் நிலையில் அரசாங்கம் இருந்தபோது சமாதான முயற்சி, எரிக் சொல்ஹெய்ம், என்று ஏதாவது நடந்து கொண்டிருந்தது. ஆனால் இனிமேல் ஜே.வி.பி.யின் தயவில் அரசாங்கம் நீடிக்கும் காலம் வரையிலும் அத் தகைய முயற்சிகளுக்கான சாத்தியம் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. தமிழ்க் கட்சிகளின் கெட்டித்தனம் இப்போது புரிகிறது?

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் நிலமை வேறுவிதமாக போயிருக்கலாம். அதில் தோல்வி நிச்சயம் என்றறிந்த அரசாங்கம் அதனை பின்போட்டு விட்டு மாற்று வழியைத் தேடிய அரசாங்கத்துக்கு ஜே.வி.பி.யின் உதவி கிட்டியிருக்கிறது. அரசாங்கத்தை ஜே.வி.பி.யுடன் கூட்டு வைக்கும் அளவுக்கு தள்ளிவிட்ட பெருமை தமிழ்க்கட்சிகளையே சாரும்.

ரவூப் ஹகீமை வெளியேற்றியது மாவனெல்லை வன்செயல்கள் தொடர்பாக முறையான விசாரணை நடத்தாதது உள்ளிட்ட பல விடயங்களில் முஸ்லிம் காங்கிரஸுக்கு அரசாங்கத்தின் மீது ஆத்திரம் இருக்கவே செய்யும். அதனால் சந்திரிகாவுக்கு பாடம் படிப்பிக்க ரவூப் ஹகீம் முயற்சிப்பார் என்பதை எதிர்பார்க்கலாம்.

பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியை எதிர்ப்பதை அரசியல் உரிமை என்று கூறலாம். ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்காவை எதிர்த்து வாக்களிக்குமாறு மக்களை கோருவதிலும் நியாயங்களைக் காணலாம். ஆனால் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வோடு சம்பந்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பை தமிழ்க் கட்சிகளின் அநேகமானவை எதிர்த்தன.

ஜே.வி.பி.யின் இனவாதம் புதிதாக சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. அதிகார பகிர்வு மட்டுமல்ல நிருவாகப் பரவலாக்கம்கூட தேவையில்லை என்று வாதிடும் சுத்த அடிப்படைவாத கட்சியது. இத்தகையதொரு பிற்போக்கு சக்தி அங்கம் வகிக்கும் அரசாங்கம் அநேகமாக யுத்தத்துக்கே முதலிடம் கொடுக்க வேண்டி வரும்.

ஜே.வி.பி. அங்கம் வகிக்காத ஓர் அரசாங்கத்தை விடவும் அது பங்குதாரராக இருக்கும் அரசினால் சமாதானமுயற்சி குறித்து உரத்த குரலில் பேச முடியாது. ஜே.வி.பி.யின் செல்வாக்கு இல்லாதிருந்தபோது அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தவறிய தமிழர் தரப்பு இனிமேல் என்ன செய்யப் போகின்றன.

இப்போது சிறுபான்மை சமூகம் சார்பாக ஈ.பி.டி.பி.யும், முஸ்லிம் காங்கிரஸின் உடைந்த துண்டொன்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் மாத்திரமே அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் பாராளுமன்றத்தில் உள்ள சிறுபான்மை சமூக உறுப்பினர்களுள் அதிகமானவர்கள் எதிர்க்கட்சியிலேயே இருக்கிறார்கள். இதன் பயனை முற்று முழுதாக அனுபவிக்கப் போவது ஜே.வி.பி.யும் சிஹல உருமயவும்தான். சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்தவுடன் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என்று தமிழ்க்கட்சிகள் கணக்குப் போட்டன. ஆனால் சந்திரிக்காவின் புதிய நகர்வும் ஜே.வி.பி.யின் முடிவும் எதிர்க் கட்சிகளின் சகல செயற்திட்டங்களையும் குழப்பி விட்டுள்ளன.

நெருக்கடியான நிலையில் ஒருவரை ஒருவர் பயன்படுத்தி தமது பயணத்துக்கான பாதையை வகுத்துக்கொள்ளும் நோக்குடன் பொதுஜன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்தாலும்கூட இவை இரண்டும் சேர்ந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதில் பாரிய முரண்பாடுகள் காணப்படுகின்றன.

உலகமயமாக்கல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்தும் பொதுஜன ஐக்கிய முன்னணி போன்ற வலதுசாரி கட்சிகளுடன் சோசலிசவாதிகள் என தம்மை அழைக்கும் ஜே.வி.பி.யினர் எவ்வாறு ஒத்துப்போவார்கள் என்ற பிரச்சனையுமிருக்கிறது.

இதனை ஐ.தே.க.உணர்ந்துள்ளதாகத் தெரிகிறது. அந்த கட்சிக்குள் உள்ள சிலர் ஜே.வி.பி.யின் தயவில் அரசு நிலைப்பதை தவிர்க்கும் பொருட்டு குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்தை ஆதரிக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் அது சாத்தியமாகுமென பெரும்பாலும் எதிர்பார்க்கமுடியாது. இந்தச் சந்தர்ப்பத்தை விட்டுக் கொடுக்க ஐ.தே.க. தலைமை விரும்பப் போவதில்லை.

ஜே.வி.பி.யுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி சமாளித்துப் போகும் என எதிர்பார்க்கவும் முடியும். அரசியல் என்பது சாத்தியப்படக்கூடியதை யதார்த்தமாக மாற்றிக்கொண்டு செயற்படுவதுதான். சில நிகழ்வுகளை அவதானிக்குமிடத்து ஜே.வி.பி.யும் பொதுஜன ஐக்கியமுன்னணியும் இணைவது அப்படியொன்றும் அதிசயமல்ல.

**எம்.பி.எம். பர்ஸான்**

விநாயகமூர்த்தியும் சம்பிகரணவகவும் ஒரே மேடையில் பேசும் அரசியலில், தினேஷ்குணவர்தனவும், ரவூப் ஹகீமும் ஒரு அமைச்சரவையில் அங்கம் வகித்த நாட்டில் யாருடன் யாருக்கும் கூட்டணி சாத்தியமில்லை எனக்கூற முடியாது.

எது எப்படியிருந்தாலும் இலங்கை தேசம் முன்னெப்போதும் இல்லாத அளவு மோசமானதொரு அரசியல் சமூக, பொருளாதார நெருக்கடியை நோக்கி சென்று கொண்டிருப்பதை மட்டும் தெளிவாக அவதானிக்க முடிகிறது.

நாட்டின் பொருளாதாரம் மோசமான பாதிப்பை ஏற்கனவே எதிர்கொண்டுள்ளது. இதன் உப விளைவாக சமூக கட்டமைப்பில் ஆபத்தான சிதைவு தோன்றியிருக்கிறது. சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் மீளமைக்க முடியாத சிக்கலில் அகப்பட்டுள்ளது.

# தலைநகரில் காத்திருக்கும் அபாயம்

கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மீதான தாக்குதலின் பின்னர் தலைநகரில் புலிகளின் அடுத்த இலக்கு கொழும்புத் துறைமுகமாக இருக்கலாம் என்ற பயம் அரசாங்கவட்டாரங்களில் வெகுவாகக் காணப்படுகின்றது. விமான நிலையத் தாக்குதலினால் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பாதுகாப்பு தொடர்பில் பலத்த கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. இதனையடுத்து என்ன விலை கொடுத்தும் துறைமுகத்தையேனும் பாதுகாக்க வேண்டும் என்று துடியாய்த் துடிக்கும் பாதுகாப்புத் தரப்பினர் அதற்காகவேண்டி பெருந்தொகை செலவில் பாரிய ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

விமான நிலையம் தாக்குதலுக்கு உள்ளானதோடு இலங்கைக்கு வரும் கப்பல்களுக்கு காப்பறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

காப்புறுதித்துறையின் தாயகமாகக் கருதப்படும் இலண்டனில் இயங்கும் பல முன்னணி காப்புறுதி நிறுவனங்கள் முழு இலங்கையையும் யுத்தப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளன. இதனால் இலங்கைக்கு வரும் விமானங்கள், கப்பல்கள் அனைத்துக்கும் மேலதிகக் காப்புறுதி கட்டணம் ஒன்றை அறவிட லொயிட்ஸ் உட்பட பல நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இதன் காரணமாக இலங்கைத் துறைமுகங்களை நோக்கி வந்த பல வெளிநாட்டு கப்பல்கள் ஏற்கனவே அருகாமையில் உள்ள துறை முகங்களை நாடிச் சென்றுள்ளன. இதனால் தினசரி அரசாங்கத்துக்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்படுவது ஒரு புறமிருக்க, இந்த நாட்டின் மிக முக்கிய வருமான மார்க்கங்களில் ஒன்றான துறைமுக சேவை கடுமையான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கோதுமை தானியம் ஏற்றப்பட்ட ஜப்பான் நாட்டு கப்பல் ஒன்று இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்துவிட்டு, திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்காது திரும்பிச் சென்றுள்ளது. இந்தக் கப்பல் அங்கு தரித்திருந்தால் இலங்கைக்கு மொத்தமாக 2 கோடி ரூபா வரையிலான கொடுப்பனவொன்றை செலுத்த வேண்டும். புதிய காப்புறுதி விதிமுறைகளின்படி குறிப்பிட்ட கப்பல் நிறுவனம் இலங்கை துறைமுகத்தில் தரிக்குமாயின் அதற்குக் கிடைக்கும் போக்குவரத்து கூலியைவிட ஒரு இலட்சம் டாலர் பணத்தை கூடுதலாக செலுத்த வேண்டி வரும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகையதொரு நிலையில் இலங்கைக்கு வெளிநாட்டு கப்பல்களின் வருகை கடுமையாக வீழ்ச்சியடையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இத்தகைய பாரிய வருவாய் இழப்புக்கு பயப்படும் அரசாங்கம் கொழும்புத் துறைமுகம் பாதுகாப்பான இடம் என்ற அபிப்பிராயத்தை மீண்டும் கட்டியெழுப்ப மிகவும் சிரமப்படுகின்றது. ஆனால் அது இலகுவான காரியமல்ல. காப்புறுதி நிறுவனங்களால் யுத்தப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்ட ஒரு நாட்டுக்கு வர வேண்டிய தேவை வெளிநாட்டு கப்பல்களுக்குக் கிடையாது.



கொழும்புத்துறைமுகத்தின் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நவீன இலட்ரோனிக் உபகரணங்கள் பொறுத்தப்படவுள்ளன. துறைமுகம் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வெவ்வேறு பொறுப்பதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அனைத்துக்குமான கட்டளை அதிகாரியாக கடற்படைத் தளபதி வைஸ் எட்மிரல் தயா சந்தகிரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு அரசாங்கம் பரவலான பிரசாரம் ஒன்றையும் பெற்றுக்கொடுத்தது. கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி.சில்வா தலைமையில் துறைமுக பாதுகாப்பு தொடர்பான விசேட மாநாடொன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அன்றைய தினமே அரசாங்கம் வெளியிட்டது.

பொதுவாக இவ்வாறான தீமானங்களை இரகசியமாக வைப்பதுதான் வழக்கம். ஆனால் என்ன வகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்ற விவரங்களை எல்லாம் அரச வானொலி செய்தியறிக்கையில் அதுவும் குறிப்பாக ஆங்கில செய்தியறிக்கையில் விலாவாரியாக விவரிக்கப்பட்டது. சர்வதேச கப்பல் நிறுவனங்களின் இலங்கை முகவர்களது காதில் விழக்கூடிய வகையில் அரசாங்கம் அவ்வாறு செய்திருக்கக் கூடும். என்றாலும் அந்த அபிப்பிராய மாற்றம் அத்தனை இலகுவில் நிகழும் என்று எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறிருக்க, தப்பித் தவறி தலைநகரில் மற்றொரு பாரிய தாக்குதலோ அல்லது துறைமுகத்துக்குள் ஒரு சிறிய தாக்குதலோ நடந்தால்கூட இலங்கையின் துறைமுக சேவைகளுக்கு மரண அடி விழுவதாகவே அமையும். அதனால் எப்படியாவது அதை தடுத்தாக வேண்டும் என்று பாதுகாப்புத் தரப்பினர் முழுக்கவனத்தையும் செலுத்தியுள்ளனர்.

பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகளில் உள்ள ஓட்டைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட ஓர் இலக்கு தாக்கியழிக்கப்பட்ட பின்னரே வெளிவருவதுண்டு. கட்டுநாயக்க விமான நிலையம் கூட பெரும்பாதுகாப்புடன் இருப்பதாகத்தான் கூறப்பட்டு வந்தது. ஆனால் அங்கு நடந்த தாக்குதலின் பின்னர் தான் யார் யார் என்ன செய்தார்கள் என்றும் எந்தெந்த இடங்களில் பலவீனம் காணப்பட்டது என்பதும் தெரிய வந்தது. துறைமுகத்தின் பாதுகாப்பு நடவடிக்கையின் நிலையும் இப்படியேதான் இருக்குமென்றால் விரைவில் மற்றொரு அழிவை எதிர்பார்க்க முடியும்.

தலை நகரில் வந்து விசாலமான இலக்கொன்றை தாக்கி நிர்மூலமாக்குவதென்பது நினைத்தவுடன் செய்யக் கூடிய காரியமல்ல. அதற்கென நீண்ட கால இரகசிய திட்டமொன்றின் ஒவ்வொரு அங்கமும் கச்சிதமாக அரங்கேற வேண்டும். அதனால் புலிகள் இன்றோ நாளையோ துறைமுகத்தைத் தாக்குவார்கள் என்று எதிர்பார்ப்பது சாத்தியமில்லை. ஆனால் விமான நிலையத்தை தாக்கி விட்டார்கள். அடுத்தது துறைமுகம்தான் என்ற சிந்தனையுடன்தான் பாதுகாப்புத் தரப்பினர் கணக்குப் போட்டு செயற்படுகின்றார்கள்.

இதில்தான் மிகப்பெரிய தவறு நிகழ்கிறது. இந்த நாட்களில் துறைமுகபாதுகாப்பு தொடர்பாக தினசரி கூட்டங்கள் நடக்கின்றன. புதிய உத்திகள் குறித்து ஆராயப்படுகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒத்திகை ஒன்றும் இடம்பெற்றது. புலிகள் துறைமுகத்துக்குள் புகுந்து பாரிய தாக்குதல் ஒன்றை தொடுத்தால், அதனை எவ்வாறு சமாளிப்பது என்பதாகவே இந்த ஒத்திகை அமைந்திருந்தது.

சிறிது காலத்துக்கு இந்த விழிப்புணர்வு காணப்படும். கொஞ்சம் கொஞ்சமாக அது மங்கிப் போய் புலிகளால் இனிமேல் கொழும்பில் தாக்குதல் நடத்த முடியாது என்று படையினர் நினைக்க ஆரம்பிக்கும் நேரத்தில் மீண்டுமொரு தாக்குதலை நடத்துவதே புலிகளின் வழக்கம்.

அத்தோடு கட்டுநாயக்கவில் நடத்திய தாக்குதலானது புலிகள் இதுவரை காலத்தில் தலை நகரில் நடத்திய மிகப்பெரும் தாக்குதலாக கருதப்படுகின்றது. அதனால் அடுத்த தாக்குதலும் அதனை ஒத்ததாக அமையலாம் என்ற பயமும் பாதுகாப்புத் தரப்பினரிடம் காணப்படுகின்றது.

கட்டுநாயக்க தாக்குதலின் போது இலங்கை விமானப் படையின் விமானங்கள் அழிக்கப்பட்டதால், ஏற்பட்ட சேதத்தை விடவும் நீண்ட கால அடிப்படையில் ஈடுசெய்ய முடியாத நட்டத்தை அரசாங்கம் தற்போது எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது. ■

# மரம் மட்டுமா சரிகிறது....!

~மதி~

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற மாபெரும் அரசியல் சக்தி இன்று இலங்கை அரசியலில் ஒரு கேலிக்குரிய கட்சியாக மாறிக்கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு எதிரான மோசமான இன வன்முறைகளுக்கு மத்தியிலும் தமிழ்க் கட்சிகள் எவ்வித கவலையுமின்றி தங்களுக்குள் மோதிக்கொள்ளும்போது, தென்னிலங்கை சிங்கள அரசியல்வாதிகளால் முஸ்லிம் காங்கிரசின் கட்டுக்கோப்பு உதாரணம் காட்டப்பட்டது.

முஸ்லிம் இளைஞர்கள் ஆயுத போராட்டத்தின் பால் தள்ளப்படாமல் பாதுகாத்ததில் மறைந்த அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் பெரும் பங்கு வகித்தார் என்பதை நிராகரிக்க முடியாது. ஆனால் அவரது மறைவினால் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடம் முஸ்லிம்களையும் ஒரு போராடும் சமூகமாக மாற்றி விடலாம் என்ற அச்சத்தை இப்போது தோற்றுவித்துள்ளது.



ரவூப் ஹகீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ், ஹிஸ்புல்லா தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் என இரண்டு பிரிவுகள் தற்போது செயற்படுகின்றன. இவை இரண்டு பிரிவுகளுக்கும் பிரதேச ரீதியிலான ஆதரவு காணப்படுகின்றது. தேர்தலில் யார் பக்கம் அதிக அலை என்பதல்ல பிரச்சனை. இந்த இரண்டு பிரிவும் தங்களை அறியாமலே முஸ்லிம்களையும் ஆயுதமேந்தும் சமுதாயமாக வழிநடத்துகின்றன என்பதுதான் உணரப்படவேண்டியது.

கடந்த வெள்ளிக்கிழமை ரவூப் ஹகீம் தலைமையிலான குழுவுக்கு காத்தான்குடியில் வைத்து ஹிஸ்புல்லாவின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்கள். ஹகீமை நோக்கி செருப்புகள் வீசப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. இத்தனைக்கும் அவர் ஜும்மா தொழுகைக்காக சென்றவர். இதை தடுக்க வேண்டும் என்று ஹிஸ்புல்லா விரும்பியிருப்பார் என்று கருதத் தேவையில்லை. மறுபக்கம் ஹகீமுக்கு கூடுதல் ஆதரவுள்ள பகுதிகளுக்கு ஊடாக ஹிஸ்புல்லா குழுவினர் பயணம் செய்ய முடியாதபடி அவர்களும் தமது கைவரிசையை காட்டுகிறார்கள். முஸ்லிம் கங்கிரஸ் மன்னார் அமைப்பாளர் எனக் கூறப்படும் இஸ்மத் கௌஸ் என்பவர் கல்முனையில் வைத்து ஹகீம் குழுவினரால் தாக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இப்படி ஏராளமான சிறு சிறு சம்பவங்கள் தினசரி நிகழ்கின்றன. அவற்றை ஒட்டுமொத்தமாக ஆராயும் விடத்து இந்த இரு சாராரும் சமூகத்துக்காக வேண்டி இனிமேல் ஒன்று சேரப் போவதில்லை என்ற உறுதியுடன் கூடுமானவரையில் பகைமையை வளர்த்துக் கொள்ள முயற்சிப்பதை அவதானிக்க முடியும்.

தங்களை யாரும் அசைக்க முடியாது என்ற சிந்தனையில் இருக்கும்போது அதிகாரத்தை பகிர்ந்துகொள்ள பலரும் விரும்புவதில்லை. ஆனால் தனது எதிர்ச் சக்தி பலமாக வளர்ந்து அல்லது தனது அதிகாரத்துக்கு வேறு வழியில் ஆபத்து நேரலாம் என்ற பயம் உருவெடுக்கும் போதுதான் வெளியில் இருக்கும் எதிரியை சமாளிக்க உள்ளே இருக்கும் எதிரியுடன் கைகோர்க்கும் முடிவுக்கு வருகிறார்கள்.

ரவூப் ஹகீமிடம் இந்த செயற்பாட்டை கடந்த நாட்களில் தெளிவாக அவதானிக்க முடிந்தது. அவர் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்தபோது பேரியலுடனோ, ஹிஸ்புல்லாவுடனோ எந்தவொரு அதிகாரத்தையும் நியாயமாகப் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. பின்னர் அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டதும் கட்சிக்குள் சில பதவிகளை பேரியலுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என அறிவித்தார். ஹகீம் ஆரம்பத்தில் செய்த அதே தவறை பேரியல் இரண்டாவது சுற்றில் செய்தார். அதாவது ஹகீம் அமைச்சர் பதவியை பறிகொடுத்துவிட்டு அரசாங்கத்தில் இருந்தும் வெளியேறி பலவீனமான நிலையில் இருக்கும்போது, அவருடன் விட்டுக்கொடுப்புடனான அதிகாரப் பகிர்வுக்கு மறுத்துவிட்டார். "இப்போது நீ பலவீனமாக இருக்கிறாய். அதனால் கட்சியின் பெரிய பகுதியை எனக்குத்தா!" என்று கேட்கத் தொடங்கினார்.

இந்த இழுபறியின் தொடர்ச்சி பல வழக்குகளுக்கும் இடைக்கால தடை உத்தரவுகளுக்கும் வழிசெய்து பிரச்சனை சுமுகமாக தீர்க்கப்படலாம் என்ற வரையறை தாண்டிக்கொண்டிருக்கிறது.

கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் பகுதிகள் இப்போது பெரும்பாலும் ஒரு வன்முறை பிரதேசத்தின் சாயலுடன்தான் காட்சி தருகின்றன. புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல்கள் ஒருபுறமிருக்க, தினசரி ஏதாவது ஓர் இடத்தில் இந்த கட்சி மோதல்களும் இடம் பெறுகின்றன. அஷ்ரப் உயிருடன் இருந்தபோதும் இவ்வாறான சிறு பிரச்சனைகள் இருந்தன. ஆனால் அவை எதிர்க் கட்சிக்காரர்களுடனான மோதலாகத் தான் இருந்தன. இப்போதுதான் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் இவ்வாறு ஒருவருக்கொருவர் அடிபட்டுக் கொள்கிறார்கள்.

இது ஆரம்பம் மட்டும்தான். இரண்டு தரப்பினரும் தமது சொந்தவீட்டு எதிரியை நசுக்க ஆதரவாளர்களை ஏவிவிட்டு வேடிக்கை பார்ப்பார்களாயின் இறுதி விளைவு இரு தரப்பின் தலைவர்களாலும் கூட கட்டுப்படுத்த முடியாததாக இருக்கும் என்பதை மாத்திரம் உறுதியாகக்கூற முடியும். ஏனெனில் தமது சொந்த இலாபங்களுக்காக இளைஞர்களை ஏவிவிட்டு பின்னர் அதுவே தலைக்குமேல் போய் கடைசியில் ஏவியவர்களின் தலையும் போன வரலாற்று நிகழ்வின் தாக்கத்தை கண் முன்னே காண்கிறோம். எனவே முஸ்லிம் சமூகத்தையும் அதே நிலைக்கு தள்ளி விடுவதா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

ரவூப் ஹகீம், பேரியல் அஷ்ரப் மோதலின் விளைவாக கிழக்கு மாகாண மக்கள் சார்பாக அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள் இப்பொழுது அநேகமாக மறக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டன.

ஒரே முஸ்லிம் காங்கிரஸாக செயற்படும்போது கல்முனைக்கு தனி மாவட்டம் கேட்டார்கள். ஒலுவிலில் துறைமகம் அமைக்கச் சொன்னார்கள். இப்பொழுது அப்படியான கோரிக்கைகளை முன்வைக்க ஒருவருக்கும் நேரமில்லை.

ஒருவரை மாற்றி ஒருவர் நீதிமன்றத்துக்குச்சென்று தடையுத்தரவு வாங்குவதிலும் புதிய மனுக்களை சமர்ப்பிப்பதிலுமே முழு நேரத்தையும் செலவிடுகிறார்கள். நிலைமை இப்படியாகும் என்று தெரிந்திருந்தால் தாருஸ்ஸலாம் கட்டடத்தின் ஒரு பகுதியிலேயே உயர் நீதிமன்றத்தையும் அமைத்திருக்கலாம். இது தொடருமானால் முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியின் அழிவு வெகுதூரத்தில் இல்லை. அது மட்டுமல்ல கிழக்கில் முஸ்லிம்களையும் பகைமை பாராட்டும் இரண்டு பிரிவுகளாக இது மாற்றிவிடக்கூடும். அதனால் மரத்தின் சரிவுக்கு அப்பாலும் பல பிரச்சனைகள் இருக்கின்றன.

முஸ்லிம்களின் அரசியல் பலம் துண்டாடப்பட வேண்டும் என்றும் தனித்துவமானதொரு அரசியல் சக்தி நிலைக்கக்கூடாது எனவும் பேரினவாத



கட்சிகள் இரண்டும், அவற்றில் உள்ள முஸ்லிம் பெயர்வைத்த ஏஜண்டுகளும் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றனர். இதை உணராத முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அல்லது தலைமைகள் தொடர்ந்தும் மொக்குத்தனமாகவே செயற்படுகின்றன.

ஆனால் இந்த அபாயத்தை அவர்கள் உணர்ந்திருக்க மாட்டார்கள் என்ற முடிவுக்கு வரவும் முடியாது. அது அவர்களுக்குத் தெரியும். யார் எக்கேடு கெட்டாலும் என்ன நாம் வசதியாக வாழ்கிறோம். எமது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி படிப்பிக்கலாம் என்ற சிந்தனையாக இருக்கலாம். ■

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின்
## சேவைகள் குறைப்பு கட்டணங்கள் அதிகரிப்பு

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலினால் பாரிய பாதிப்பை எதிர்நோக்கியிருக்கும் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம், சர்வதேச ரீதியில் 37 இடங்களுக்கு இதுவரை நடத்திவந்த விமான சேவைகளை கடந்த வாரம் முதல் 25 ஆக குறைத்துள்ளது.

கடந்த 24ம் திகதி அதிகாலை இடம்பெற்ற தாக்குதலின்போது தனது அரைவாசித் தொகை விமானங்களை இழந்திருக்கும் இந்நிறுவனம், விமானப் பயணக் கட்டணங்களை அதிகரித்திருப்பதுடன், சர்வ தேச நாடுகளுக்கான தனது சேவைகளையும் 12 ஆல் குறைத்துள்ளது.

இந்தியா, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, ஸ்ரொக்கோம், பேர்லின், மிலான், பாரிஸ் ஆகிய இடங்களுக்கான விமான சேவைகள் தற்காலிகமாக இடை நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நேற்று தெரிவித்தது. இதற்கிடையில் ஐரோப்பிய நாடுகளுக்கான விமானக் கட்டணங்களும் 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் இலங்கைக்கு சேவையை மேற்கொள் ளும் விமானங்கள் மீதான காப்புறுதிக் கட்டணங்கள் பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பல வெளிநாட்டு விமான சேவைகளும் இலங்கைக்கான பயணக் கட்டணங்களை அதிகரிக்கவுள்ளன.

---

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

இல. 62, பழம் வீதி, கந்தர்மடம், நல்லூரைச் சேர்ந்த புவன ராணி கோவிந்தப்பிள்ளை என்பவரது, படையினர் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வழங்கப்படும் அடையாள அட்டை இல. 0902018425 (தேசிய அடையாள அட்டை இல. 445422100V) கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தக்க ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ஆ-ர்

---

## ZURICH TO COLOMBO
### Cargo Service

**எம்.சி.எஸ். கார்கோ சேவை 1989 தொடக்கம்**

கொழும்புக்கான அடுத்த கொள்கலன்
2001 செப்டம்பர் 14ல் புறப்பட்டு
2001 ஒக்டோபர் 10ல் இலங்கையை வந்தடையும்.
எமது இலங்கைக்கான கொள்கலன் சேவைக்
கட்டணம் S.F.R. 80ல் இருந்து.
எமது கட்டணங்கள் பொதிகளின் அளவைக்
கொண்டே நிர்ணயிக்கப்படுமே தவிர
பொருட்களின் நிறையைக் கொண்டல்ல.

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்...

Perlyn Tours 01-4407115
Mr.V.Munasinghe 01 302 58 38/ 079-665 65 53
Mr.Winsent (BE) 031-9925739 T.S.
Mr.Ranjith Fernando (LU) 041-3600912 S.E.G.
Mr.Edison (AG) 062-7943446 T.S.
Mr.Oscar 079-6319288 T.S.
Mr.Mohan Fernando (SG) 071-2223214 T.S.

---

## சுவிஸ் பேர்ண் மாநகரில்.
## Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

---

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754

---

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிகேற்பவோ தீர்மானிக்கலாம்.
விபரத்திற்கு:- அப்புலிங்கம்: சிங்கப்பூர் கைதொலை பேசி எண்:-
Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**
BLK 219 SERANGOON AVE 4
# 10-208 SINGAPORE-550219
TELE: (65) 4533308

---

## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SCHOOLS

1960 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு மலையாள மாந்திரீக வசிய சர்வதேச சமூக தெய்வீக சேவை. (Govt. Approved) கிரகதோஷம், காதல், (ஆண்-பெண்) பிரச்சனை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம், கலவி தொழில் விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, கணவன்-மனைவி குடும்ப வாழ்க்கையில் சந்தோசமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை மருந்தீடு போன்ற தீமைகள் ஏற்படுகின்றது இது போன்ற எவ்வித பிரச்சனைகளானாலும் "காண்டம்" இறைசக்தியால் பிரச்சனைக்குரிய காரணத்தை கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளிக்கப்படுகின்றது. நேரில் வர முடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் அல்லது பக்ஸ் பண்ணிவிட்டு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். பூசை, தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

**டாக்டர். பாலுசோதிடர்** S.(A).M.P J.P (S.L)
வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்
SILPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE

THEIVEEGAM-NTSF-BATTICALOA.
SRI LANKA
TEL/FAX: 065-24825
வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு
TEL/FAX: 0099465-24825.

---



## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, சுக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுராஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.

---

## உங்கள் பலன் எப்படி?

**ஏ.சுலேமான் - A. Suleman**

உங்கள் சொந்தப் பலன் எப்படி? கைரேகை, நட்சத்திரம், பிறந்த நேரக் குறிப்புப்பார்த்து, பலன்கள் சொல்வோம். காதல் கைகூட வைப்பது, வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குவது, விரும்பியவரை மணமுடித்து வைப்பது, கணவன்-மனைவி பிரச்சனைகளைத் தீர்ப்பது.
- நீண்ட காலமாக நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்
- பரீட்சை பற்றிய பதட்டமா?
- பிசாசு, சூனியம், சாபக்கேடு துர் அதிஷ்டங்களால் இடர்பட்டு அழுந்துகிறவர்களுக்கு ஒரே பார்வையில் ஆறுதல் கிடைக்கும்.

பிறந்த திகதி, பெயர்-மொழி-தமிழ்-சிங்களவர் எவராயினும் எல்லோர் பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பார். முன்னதாக (காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை) நேரம் நிர்ணயிக்க வேண்டும். அல்லது எழுதலாம்.

Mrs.Madiha, 78 Plashet Grove,
London. E 6 1AB.
T.P. 02085860922

---

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஆகஸ்ட் 23 முதல் 30 வரை**
DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் செப்டெம்பர் 1, 2, 3 திகதிகளில்**
ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் செப்டெம்பர் 08, 09 திகதிகள்**
T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் செப்டெம்பர் 15, 16 திகதிகள்**
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

---

## தியான யோகசக்தி! வசிய வைத்தியம்

HOMOEOPATHY AYURVEDHA ACUPUNCTURE MEDICAL RESEARCH MEDITATION YOGA POWER

1945ம் ஆண்டு ஆரம்பித்த புனித சேவை, சமய கலாசார அமைச்சின் பதிவு இல-HA14/ BT/ 176

சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட பதிவு
இல:081 ஹோமியோபதி,அக்குப்பங்சர்,சித்த ஆயுர்வேத,
மாந்திரீக, மனோவசிய, யோகசிகிச்சையாளர்

**டாக்டர்-"மந்திரயோகி"**
R.P.H.M-D.Ac-(இலங்கை) P.I.S.M, (இந்தியா)


(YOGA) MY GURU

காதல் பிரச்சனைகளைத் தீர்த்து விரும்பியவர்களை சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்துடன் திருமணம் செய்ய, கணவன்-மனைவி கருத்துவேறுபாடுகள் சந்தேகங்களை தீர்த்து பிரியாமலிருக்க, பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள், வேண்டியவர்கள் வந்து உறவாக, தகாத ஆண்-பெண் உறவைபோதை வஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராதநோய், எதிரி தொல்லைகளிலிருந்து விடுபட-கண்ணூறு நாவூறு, சர்வதோஷ நிவர்த்தி சாந்தி பரிகாரங்கள் செய்ய, எத்துன்பங்களும் அணுகாமல் உடல் வீடு வளவு வியாபார இடங்களைக் காவல்செய்ய, திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், பொருளாதாரம், வெளிநாட்டுப்பிரயாணம் வேறுகாரிய வெற்றிக்கு "சகலகாரிய சித்தி இராயவசியங்கள்" செய்துகொள்ள தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள், மனநோய், மருந்தீடு, பயம், பலவீனம், தாழ்வு மனப்பான்மை, கவலை, ரென்ஷன், இவைகளுக்கு சிறப்புச் சிகிச்சைபெற மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்துக்கு (இந்தியன் வைத்தியசாலை) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் தபால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷேட தபாலில் எல்லா மதத்தினர்களுக்குமேற்ற தீங்கற்ற தெய்வீக புனித பரிகாரப்பொருட்களைப் பெற்று நியாயமான கோரிக்கைகளை உடன்நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC) KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)
உள்நாட்டு தொ.பே: 065-24872
வெளிநாட்டு தொ.பே: 0094 65 24872

(சர்வதேச) கடல்கடந்து செல்லும் அற்புத ஆன்மீக ஆகர்ஷண வசிய, தியான யோகசக்தி வெளிநாட்டவர்களுக்கு விஷேட செயல்முறைகள் மூன்றுநாட்களுக்குள் கையில் கிடைக்கக்கூடிய துரித சேவை.

---

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு தண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, தேவைகளுக்கு:-

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூரணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

---

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
11.08.1975



ஆண்டவன் அழைப்பில்
21.08.2000

**முருகேசு-சுதர்ஷன் (ராசன்)**

வாழ்க்கைப்பாதையை வடிவமைத்து
பாதியிலே விட்டு விட்டு
நீ சென்ற தெங்கே சுதர்ஷா
ராசன் என செல்லமுடன் அழைத்த போதிலும்
செல்லா மனதுடன் சென்ற தெங்கே
ஆண்டொன்றென்ன ஆயிரம் ஆண்டுகள்
சென்றுவிட்டபோதும் உந்தன் நினைவலைகளை
நாம் என்றுமே மறவோம்.

## எட்டுமாத நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
23.01.1940

ஆண்டவன் அழைப்பில்
13.01.2001

**முருகேசு-மனோன்மணி**

அன்றியும்,
அமைதியின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்கான
உன் தாயையும் அழைத்துச்
சென்றாயோ
மாதமும் எட்டாகி விட்டது.
நீங்களிருவரும் போனதெங்கே

நாம் இனி யார் முகத்தில்
உங்களைக் காண முடியுமோ
நீங்களிருவரும் விண்ணுலகில்
சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.. ஓம் சாந்தி சாந்தி
பிரிவால் துயருறும்-உற்றார்-உறவினர்.

தகவல்:- எம்.சதீஷ்- 30,கின்றொஸ் எவனியூ-கொழும்பு-04.
போன்:- 582626

# பலத்த நெருக்கடிக்குள்ளாகும் பொருளாதார நிலபரம்!

அலசுவது -இராஜதந்திரி

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இலங்கையின் முன்னணி வர்த்தக, கைத்தொழில் பிரமுகர்களின் சந்திப்பொன்று கடந்தவாரம் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் பிரபல தொழில், மற்றும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள், பங்காளர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். இன்றைய நாட்டு நிலபரம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா இந்த வர்த்தக மற்றும் தொழில் பிரமுகர்களுக்கு விளக்கிக் கூறியிருந்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை எடுத்து நோக்கும் பட்சத்தில் 1977ம் ஆண்டுவரை மரபுவழி ஏற்றுமதிப்பொருட்களின் வருமானத்திலேயே நாட்டின் வருவாய் பெரிதும் தங்கியிருந்தது.

பாடசாலைக் கல்வியில் கூட பொருளியல் பற்றிப் படிக்கும் போது இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்கள் யாவை? எனக் கேட்டால் தேயிலை, ரப்பர், கராம்பு, ஏலம், இரத்தினக்கற்கள் என்ற பதிலே வந்தவண்ணமிருந்தது.

ஆனால் 1977ம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இக்கொள்கையின் கீழ் சுதந்திர வர்த்தக வலயங்கள் உருவாக்கப்பட்டு, பல்வேறு தொழில் நிறுவனங்களும் தோன்றலாயின.

உள்ளூர் முதலீட்டாளர்கள் மட்டுமல்லாது, வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் பலவும் இலங்கையில் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாயின.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக்கொண்டு வந்திருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளைச் சீர் செய்வதைக் கருத்தில் கொண்டே அந்த ஆட்சி முறையை அறிமுகப்படுத்தியதாகவும் கூறியிருந்தார்.

தென்னாசியாவில் சிங்கப்பூரையொத்த நிலைக்கு இலங்கையைக் கொண்டுவரப் போவதாகவும் ஜே.ஆர். ஜயவர்த்தன கூறியிருந்தார்.

தமது சிங்கப்பூர் கனவை 1983ம் ஆண்டில் தமிழ் மக்களைச் சுட்டெரித்த இனக்கலகத்தின் சாம்பல் மேட்டில் கட்டியெழுப்பலாமென்றுகூட ஜே.ஆர். எண்ணியிருந்தார். ஆனால் அவர் போட்ட திட்டங்கள் தவிடு பொடியானதுடன், அன்றிலிருந்து இலங்கையின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் அனைத்துமே படிப்படியாகச் சிதைந்து தற்போது திரும்புமிடமெல்லாம் அழிவும், அவலங்களுமே காட்சியளித்து நிற்கின்றன.

1983ம் ஆண்டிலிருந்து இலங்கையின் வடக்கு-கிழக்கு யுத்தம் படிப்படியாக மூர்க்கமடைய ஆரம்பித்தது. அந்த ஆண்டிலிருந்து பாதுகாப்புத்துறைக்குச் செலவிட ஒதுக்கப்பட்டு வந்த நிதித் தொகை, தற்போது முழுநாட்டையுமே சுரண்டிக் குட்டிச் சுவராக்கி விடுவதாக இருக்கின்றது.

திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற ரீதியில் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் முதலீடுகள் செய்யப்படவில்லை.

உல்லாசப் பயணத்துறையும் விரிவுபடுத்தப்பட்டது. ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் இலங்கையில் உருவாகத் தொடங்கியதோடு, உல்லாசப் பயணிகளின் தொகையும் கணிசமானளவில் எதிர்பார்க்கப்பட்டது.

திறந்த பொருளாதாரக் கொள்கை இன்று சர்வதேச ரீதியாக வர்த்தக, மற்றும் கைத்தொழில் ரீதியான தொடர்புகளைப் பெரிதும் விரிவுபடுத்தியதாக இருக்கின்றது.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவுக்கும், அன்றைய சோவியத் ரஷ்யாவுக்குமிடையே முதலாளித்துவ, கம்யூனிஸ்ட் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக பனிப்போர் (Cold War) நிலவி வந்தது.

அப்போது முதலாளித்துவ போக்கைக் கொண்ட நாடுகள், கம்யூனிஸ அரசியல் சித்தாந்தத்தை தழுவிய நாடுகள் என்ற ரீதியில் இருவேறு அணிகள் சர்வதேச மட்டத்தில் இருந்து வந்தன.

ஆனால் சோவியத் ரஷ்யாவில் மிக்கேல் கோபச்சேங் அறிமுகப்படுத்திய புதிய அரசியல் சிந்தனைகள் அந்நாட்டை ஆட்டங்காணவைத்து, பல்வேறு பிரிவுகளாகப் பிளவுபடவைத்ததுடன் கம்யூனிஸ நடைமுறைகளுக்கும் சாவுமணி அடிக்கலாயிற்று.

இதன் பின்னரே சர்வதேச அரங்கில் கம்யூனிஸப் போக்கு சிதைவுற ஆரம்பித்ததுடன், உலக நாடுகள் ஒன்றையொன்று அரசியல் ரீதியாக அணுகுவதைவிட, பொருளாதார, மற்றும் கைத் தொழில் ரீதியாக அணுகும் போக்கு வலுப்பெறலாயிற்று.

சோவியத் ரஷ்யா சிதறுண்டதையடுத்து அதனோடு அணிசேர்ந்திருந்த நாடுகள் பலவும் பிரிவினைகளைச் சந்தித்தன. இதனால் உலகவரைபடத்தில் பல்வேறு புதிய எல்லைக் கோடுகளும் கீறப்படலாயின.

கடந்த இருபத்தைந்து வருட காலத்தில் அரசியல், பொருளாதார மாற்றங்கள் மட்டுமல்ல. நவீன தொழில் நுட்பங்கள்கூட விரிவாகவே வளர்ச்சிகண்டுள்ளன. கம்பியூட்டர் யுகம் அசுரவேகத்தில் முழு உலகையுமே ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக உலக நாடுகள் அனைத்துமே ஒன்றையொன்று தங்கி வாழும் நிலையே வலுப்பெற்றுள்ளது.

மேற்குலகில் மட்டுமல்ல. கீழைத் தேசத்திலும் கைத்தொழில், பொருளாதார ரீதியான மாற்றங்கள் விரைந்து இடம் பெற்று வருகின்றன.

அண்மைக் காலம்வரை 'மூங்கில் திரை' நாடு எனப் பெயர் பெற்றிருந்த சீனா, தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவேற்க ஆரம்பித்துள்ளது. பல்வேறு முன்னணித் தொழில் நிறுவனங்களின் உற்பத்திகளில் சீனாவில் தயாரானவை (Made in China) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவினால் துவம்சம் செய்யப்பட்டுச் சின்னாபின்னமாகியிருந்த வியட்நாம் கூட தற்போது சர்வதேச அரங்கில் தொழில் ரீதியான முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது.

இன்னும் சில வருடங்களில் வியட்நாம் வியத்தகு வளர்ச்சியை எட்டிவிடக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவே சர்வதேச பொருளியல் வல்லுநர்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.

எனவே சர்வதேச ரீதியான வர்த்தக மற்றும் தொழில் மயமாக்கல் நடவடிக்கைகள் உலகின் மூலை முடுக்குகளையெல்லாம் எட்டிப்பிடித்து வருவதாகவே இருக்கின்றது.

ஆனால் இலங்கையின் இன்றைய நிலபரம் மேலும் பின்னோக்கிச் செல்வதுடன், இருக்கின்ற மூலவளங்களையும் நாசமாக்கி விடுவதாகவே காணப்படுகின்றது.

கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்த இலங்கையின் வர்த்தக, தொழில் பிரமுகர்கள் தாம் எதிர்நோக்கி வருகின்ற பாரதூரமான விளைவுகளை எடுத்துக் கூறியிருந்தனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற பதவியில் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, நிதியமைச்சர் என்ற பொறுப்பையும் வகித்து வருகின்றார்.

அரசியல், இராணுவ ரீதியான முடிவுகளை எடுத்து வருகின்ற ஜனாதிபதி சந்திரிக்கா, நிதியமைச்சர் என்ற ரீதியில் இலங்கையின் வர்த்தக மற்றும் தொழிலதிபர்களது எதிர்பார்ப்புக்களுக்கும் பதிலளிக்க வேண்டியவராகவே இருக்கின்றார்.

கடந்த ஜூலை மாதம் இறுதிப்பகுதியில் கட்டுநாயக்க விமானப்படைத்தளம், மற்றும் சர்வதேச விமான நிலையம் என்பவை தமிழீழ விடுதலைப் புலிகளது கடுந்தாக்குதலுக்குள்ளாகியிருந்தன.

இலங்கையில் ஒரேயொரு சர்வதேச தரத்திலான கட்டுநாயக்க விமான நிலையம் மீதான தாக்குதல், இலங்கையிலுள்ள வர்த்தக, தொழில் சமூகத்தவரை மட்டுமல்ல. இலங்கையோடு தொடர்புகளை வைத்துள்ள சர்வதேச வர்த்தக சமூகத்தையும் வெகுவாகவே மிரட்டி விட்டுள்ளது.

கட்டுநாயக்க மீதான தாக்குதலையடுத்து இலங்கைக்கான விமானப்போக்குவரத்து, மற்றும் உல்லாசப் பயணிகளின் வருகை என்பவற்றில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதுதவிர ஆகாயமார்க்கமான ஏற்றுமதி, இறக்குமதி என்பவற்றை நடத்தி வந்த வர்த்தக சமூகத்தவரும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.



கட்டுநாயக்கமீது நடத்தப்பட்ட தாக்குதல் கொழும்புத்துறைமுகம், திருகோணமலை, காலித்துறை முகங்கள் என்பவற்றையும் அச்சுறுத்திவிட்டுள்ளது.

இலங்கைக்கான கப்பல், மற்றும் விமானப் போக்குவரத்து என்பவற்றுக்காக சர்வதேச ரீதியில் அறவிடப்பட்டு வந்த காப்புறுதிப் பணத்தின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு சர்வதேச கப்பல் கம்பனிகள் இலங்கையில் தரித்துச் செல்வது பற்றி மறுபரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளன.

மோசமடைந்து செல்கின்ற இலங்கையின் பொருளாதார நிலபரத்தை மேலும் மோசமாக்கிவிடுவதாகவே புதிய அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

இந்த இக்கட்டான நிலை பற்றி வர்த்தக சமூகத்தவர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா கடந்தவாரம் விளக்கமளித்திருந்தார்.

அப்போது அவர் கூறியவற்றைச் செவிமடுத்த வர்த்தக, கைத்தொழில் பிரமுகர்கள் தமது அபிப்பிராயங்களையும் வெளியிட்டனர்.

இலங்கையில் அரசியல் ரீதியான உறுதிப்பாடு ஏற்படும் பட்சத்திலேயே பொருளாதார ஸ்திரநிலை பற்றிச் சிந்திக்க முடியும்.

தென்னிலங்கையின் அரசியல் கோதா குழம்பிப் போயுள்ளது. இருப்பினும் இன்று முழுநாட்டையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ள பிரச்சனையாக வடக்கு-கிழக்கு விவகாரமே இருந்து வருகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு ஓர் ஆரோக்கியமான தீர்வைக் காணும் பட்சத்திலேயே நாட்டின் அரசியல், பொருளாதார நிலபரங்களைச் சீர்செய்ய முடியுமென்பதை வர்த்தக, கைத்தொழில் பிரமுகர்கள் ஜனாதிபதி சந்திரிக்காவிடம் எடுத்துக்கூறியிருந்தனர்.

இலங்கையின் வர்த்தக சமூகம் மட்டுமல்ல. இலங்கைப் பிரச்சனையில் ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்ற சர்வதேச சமூகமும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமரசப் பேச்சுக்கள் விரைவாக ஆரம்பிக்கப்படவேண்டுமென்றே வலியுறுத்தி வருகின்றன.

கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ஸ்ரீமதி கோகிலா ஐயரும் நோர்வேயின் அனுசரணையுடனான சமரசப் பேச்சுக்கள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டியதையும், சுட்டிக்காட்டியிருந்தார்.

இன்றைய நெருக்கடி நிலையிலிருந்து இலங்கையை எவ்வாறு மீட்கமுடியும்? என்ற கேள்வியே அனைவர் மனதிலும் எழுந்துள்ளது.

கடந்தவாரம் ஜனாதிபதி மாளிகையில் வர்த்தக சமூகத்தவருடனான சந்திப்பையடுத்து அரசியல் முக்கியத்துவம் மிக்க மற்றுமொரு சந்திப்பும் இடம் பெற்றிருந்தது.

ஜே.வி.பி என்ற மூன்றெழுத்தின் மூலம் பிரபலமாகியுள்ள (ஜனதா விமுக்தி பெரமுன) மக்கள் விடுதலை முன்னணி, கட்சியினரே ஜனாதிபதியைச் சந்தித்து தமது நிலைப்பாடுகளை வெளியிட்டிருந்தனர்.

பாராளுமன்றில் பத்து ஆசனங்களைக் கொண்டுள்ள ஜே.வி.பி.யினர் தென்னிலங்கை அரசியலில் ஒரு மூன்றாவது சக்தியாக இருந்து வருகின்றனர்.

ஆனால் கடந்தவாரம் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது ஜே.வி.பி. கட்சியினர் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் விசனத்துக்குரியவையாகவே இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டாம் என்ற நிபந்தனையை ஜே.வி.பி.கட்சியினர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முன்வைத்திருந்தனர்.

இந்த நிபந்தனையை முன்வைத்துள்ளதன் மூலம் ஜே.வி.பி கட்சி தனது குறுகிய அரசியல் கண்ணோட்டத்தையே வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் பேரினவாத சக்திகளின் செல்வாக்குக்குட்பட்டதாக ஜே.வி.பி மாறிவருவதையே இந்த நிபந்தனை புலப்படுத்துவதாகவும் இருக்கின்றது.

பேரினவாத போக்கைக் கடைப்பிடித்து கடந்த ஐம்பது வருடங்களாக நடத்தப்பட்ட அரசியல் காரணமாகவே இலங்கை இன்று மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா கூட பல தடவைகள் பொது மேடைகளில் பேசும்போது இலங்கை இனப்பிரச்சனையின் வெளிப்பாடாகவே வே.பிரபாகரனும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் தோன்றியுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உட்பட ஏனைய பிரதான அரசியல் கட்சிகள் அனைத்துமே தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் ஜே.வி.பி அமைப்பு புலிகளுடன் அரசைப் பேச வேண்டாமெனக் கூறியிருப்பதன் மூலம் எரியும் நெருப்பில் மேலும் எண்ணெய் வார்க்கும் போக்கையே வெளிப்படுத்தியுள்ளது.

அரசியல் கோதாவில் ஒரு மூன்றாவது சக்தியாகத் தன்னை இனங் காட்டியுள்ள ஜே.வி.பி.கட்சி, மறுபுறத்தே புலிகளுடனான பேச்சை நிராகரித்திருப்பதன்மூலம் தன்னை ஒரு கிணற்றுத் தவளையாகவும் வெளிக்காட்டியுள்ளதையே அவதானிக்கமுடிகின்றது. ■

## அதிரடி அய்யாத்துரை



**அரசியலில்** நிரந்தர நண்பனுமில்ல, எதிரியுமில்ல என்றதை எத்தன சுலபமா நிரூபிச்சிப் போட்டினம் பார்த்தியளே... ஊர் ஊரா மேடை போட்டு சந்திரிக்காவை திட்டித் தீர்த்த ஜே.வி.பி பொறுத்த நேரத்துல போய் ஒட்டிக்கொண்டது. சிவப்பு சட்டை போட்ட காவாலிக் கூட்டம் எண்டு ஜே.வி.பி.யை வர்ணிச்ச உவையும் இப்போ ஆறஅமர உட்கார்ந்து அரசியல் பேசுகினம். கம்யூனிசம், சோசலிசம் எல்லாம் மேடையிலதான் பாருங்கோ.. என்னதான் இருந்தாலும் உந்தாக்களும் கடைசியில் போய் பிக்குகளின்ர காலிலதானே விழுந்தவை. தென்னிலங்கையில் இதுவொரு ஸ்டைல் மாதிரியாகிப்போச்சு. ஏதாவது ஒரு விஷயத்துல இறங்கினா முதல்ல கண்டிப்பக்கம் போய் காலில் விழுறது. பச்சையும் நீலமும்தான் உந்தக் காரியத்த கவனமாச் செய்யுதெண்டால், கடவுளே இல்லையென்று சொல்லி வந்த கம்யூனிஸ்டுகளா... உங்களுக்குமா காவி நிறத்தில ஒரு காதல்? தமிழ்க்கட்சிக்காரரும் உந்த ஸ்டைல பின்பற்றலாமெண்டால்... நம்ம 'குரு'க்களுக்கு செல்ஃபோன் பேசவே நேரம் போதாம இருக்கேக்க நாட்டு நடப்பப் பத்தி கவனிச்சு ஆலோசனை சொல்ல ஏதுகாலம்?!

**தொல்லைத் தவிர்ப்புக்குழு** இனிமேல் கைது விவகாரத்திலயோ... பாஸ் நடைமுறையிலயோ தலையிடமாட்டாதெண்டு செய்தி படிச்சனான். உந்தக்குழு தலையிட்டால் மட்டும் என்னவாம்..? அது சரி கைதுகளைப்பற்றி கதைக்க மாட்டம், பாஸ் பிரச்சனையப்பற்றி வாய் திறக்க மாட்டமெண்டால் உவை வேறென்ன செய்யப் போகினம். செத்த பாம்ப அடிக்கிற மாதிரி ஏதோ காரியம் பார்த்துண்டு இருந்தவை. இனிமேல் அதையும் விட்டுட்டினமாம். வாழ்க மக்கள் சேவை.

**ஒரே கட்சிக்கு** அடுத்தடுத்த ஊரில வெவ்வேறு தலைவர்களால ஒரே நாளில ரெண்டு பேராளர் மாநாடு நடத்த முடியுமோ... முடியாதெண்டு நினைக்காதியள். நாலுபேரைக் கூப்பிட்டு பந்தல்கட்டி ஒரு கூட்டம் போடுவது... உதுல தங்கட காகக்கு வாங்கிக்கொடுத்த பூமாலையை வேறொருத்தர கொண்டு போடுவிச்சி போட்டோவுக்கு பல்லிளிக்கிறது.. அத மறுநாள் தங்கட பத்திரிகைக்கு அனுப்புறது. (அல்லது காசு வாங்கிக் கொண்டு மாதத்துக்கு இத்தனை போட்டோ என்று ஒப்பந்தப் பத்திரிகைகாரரிட்ட கொடுக்கிறது.) பிறகு ஆளாளுக்கு திட்டித்தீர்த்துட்டு வந்தால் பேராளர் மாநாடு முடிஞ்சிடும். இப்ப சொல்லுங்கோ.. கிழக்குக் கட்சிக்காரர் நடத்தினது பேராளர் மாநாடில்லயே...?

**தமிழ் முஸ்லிம் கட்சிகள்** எல்லோருமா சேர்ந்து ஒரு பெரும் அரசியல் வெற்றியை கண்டிட்டினம் பார்த்தியலே... இவைக்குள்ள சண்டை போட்டுக் கிட்டாலும் ஏதோ ஒரு சிறுபான்மைக் கட்சி இத்தனை நாளும் 'கிங் மேக்கரா' இருந்தவை. இப்போ யூ.என்.பி.யின்ர பின்னால அலைஞ்சு அந்த பொறுப்ப ஜே.வி.பி.யிட்ட பறிகொடுத்து அசடு வழிஞ்சுகொண்டு திரியினம்.

**தங்களை புத்திஜீவி** என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாதவையப் பார்த்து எடிசன் சொன்னதைக் கேளுங்கோ.....

**மேதை என்றால் இரண்டு சதவீத அறிவும்**
**98 சத வீதம் கடும் உழைப்பும் என்று பொருள்.**

## உண்மைத் தொடர் 20

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

**சில** நேரங்களில் எஸ்.ஏ. படையணிகளின் நடவடிக்கை ஹிட்லரே வெறுப்புக்கொள்ளும் அளவு மோசமாக இருந்தது. அரசியல் எதிரிகளை பந்தாட அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்தச் செயல் சர்வதேச கடும் கண்டனத்துக்கு உள்ளானது. ஹிட்லரின் உள்துறை அமைச்சர் வெளி நாட்டு செய்தியாளர்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலைக்கு ஆளானார். ஆனால் என்னதான் அட்டூழியம் புரிந்தாலும் எஸ்.ஏ. அமைப்பை கண்டிக்க ஹிட்லர் முன்வரவில்லை. அவ்வப்போது ஒப்புக்காக சில வார்த்தைகளை பேசினாலும், அந்த அமைப்பின் முரட்டுத்தனத்தில் ஹிட்லருக்கு இலாபமிருந்தது.

அரசியல் ரீதியில் ஹிட்லருக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் எஸ்.ஏ.யின் விசேட கவனிப்புக்கு ஆளானார்கள். இத்தகைய செயல்களுக்கு ஹிட்லர் மறைமுகமாக ஆதரவு வழங்கினான்.

ஹிட்லர் நாட்டின் அதிபராக கடமை ஏற்றதன் பின்னரான முதல் மே தினம் உதயமானது.

தடைசெய்யப்பட்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சி அதன் மீதான தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாரிய அளவிலான மேதின ஊர்வலம் ஒன்றை நடத்த திட்டமிட்டது. ஆனால் இதை முன்கூட்டியே அறிந்து கொண்ட ஹிட்லர் நாஸிகளைத்தவிர வேறு எவரும் ஊர்வலம் நடத்தக்கூடாதென அறிவித்ததோடு, தொழிற்சங்கத் தலைவர்கள் பலரை கடத்திச் சென்றான். அந்தத் தடையையும் மீறி பல மேதினக்கூட்டங்கள் நடந்தன. 60 இலட்சம் மக்களை தடை செய்ய முடியாதென கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உரையாற்றினார்கள்.

அடக்கு முறைக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் சில செயற்திட்டங்களை ஹிட்லர் முன்னெடுத்தான். விவசாயத்துக்கு மானியம் வழங்கியதோடு பல கைத்தொழில்களையும் ஆரம்பித்தான். மக்களின் வாழ்க்கைத் தரத்தில் சிறிதளவு மாற்றம் ஏற்படும் அறிகுறி தென்பட்டாலும் அவர்கள் அதுவரை காலமும் அனுபவித்து வந்த ஜனநாயக



உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

இத்தகையதொரு பின்னணியில் எஸ்.ஏ. தலைவர்கள் சிலரின் நடவடிக்கைகள் மீது ஹிட்லர் சந்தேகம் கொள்ள ஆரம்பித்தான். இத்தகைய சிலர் இராணுவத்தின் ஒரு பகுதியினருடன் சேர்ந்து சதிப்புரட்சி ஒன்றுக்கான ஆயத்தங்களை செய்து வருவதாக இரகசியத் தகவல்கள் ஹிட்லருக்குக் கிடைத்தன. இந்த தகவல் அவனை பெரும் சங்கடத்தில் ஆழ்த்திவிட்டிருந்தது. 'வளர்த்த கடாக்களே மார்பில் பாயலாம்' என்ற நிலமையில் அவன் குழம்பிப்போயிருந்த சமயம், எஸ்.ஏ. அமைப்பு பெருந்தொகை ஆயுதங்களை சேகரித்து வைத்திருப்பதாக ஹிட்லர் அறிந்து கொண்டான்.

எஸ்.ஏ. அமைப்பு என்றோ ஒருநாள் தனக்கெதிராகத் திரும்பும் என்ற பயம் அவனுக்குள் நீண்டகாலமாகவே இருந்தது. அதே அமைப்பில் இருந்து தனக்கு மிகவும் விசுவாசமான ஒரு குழுவை தெரிவு செய்த ஹிட்லர் மாற்றுத் திட்டத்துக்கு தயாரானான்.

1934 ஜூன் மாதம் 28ம் நாள் ரூர் மாகாணத்தில் உள்ள எசன் என்ற இடத்துக்கு கட்சிக் கூட்டம் ஒன்றுக்காக ஹிட்லர் சென்றிருந்தான். கூடவே அவனது மிக நெருங்கிய மெய்பாதுகாவலர்களும் ஜிலிரூபலும் இருந்தனர்.

கட்சிக் கூட்டம் முடிந்து தனது தனிப்பட்ட அறையில் ஜிலியின் அணைப்பில் இருந்தான் ஹிட்லர். தன்னை பெர்லினில் இருந்து அழைத்து வந்ததன் நோக்கத்தை நன்றாக விளங்கி வைத்திருந்த ஜிலி, ஹிட்லருக்கு அதனை போதுமான வரையில் நிறைவேற்றிக் கொண்டிருந்தாள்.

கட்டிலுக்கு அருகில் இருந்த தொலைபேசி அலறியது. அதனை கையில் எடுத்த ஹிட்லர், "ஹலோ..." என்றதைத் தவிர வேறெதனையும் பேசவில்லை. அவனது முகம் விகாரமான தோற்றத்தை அடைந்தது. கண்கள் சிவந்தன. நெற்றி ஒரு கணம் சுருங்கி விரிந்தது. தொலைபேசியின் மறுமுனை என்ன சொன்னது என்பது ஜிலிக்குத் தெரியாது. ஆனால் அது நல்ல செய்தி இல்லை என்பதை மட்டும் அவள் சந்தேகமின்றி புரிந்துகொண்டாள்.

அதற்கு மேல் ஜிலியை ரசிக்கும் நிலையில் ஹிட்லர் இல்லை. அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. அங்குமிங்குமாக இருந்த தன் ஆடைகளை ஒவ்வொன்றாக எடுத்து உடுத்திக் கொண்டாள். ஹிட்லரிடம் எதுவும் கேட்கும் தைரியம் அவளுக்கு இருக்கவில்லை.

ஜிலியை பெர்லினுக்கு அனுப்பிவிட்டு, இரவோடு இரவாக தனது மெய்பாதுகாவலர்களுடன் மியூனிச் நகருக்குப் பறந்தான் ஹிட்லர். மறுநாள் கிழக்கு வெளுப்பதற்கு முன்னர் மியூனிச்சில் உள்ள நாஸிகளின் கட்சித் தலைமையகமான பிறவுன் ஹவுஸில் எஸ்.ஏ. தலைவர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டான்.

"எனது வாழ்வில் மிகவும் கறுப்பான, சோகம் நிறைந்த நாள் இதுதான்!" என்று அவர்கள் மத்தியில் கூறிய ஹிட்லர்,

"நான் அனைவருக்கும் முன்னுதாரணமாக நடந்து கொள்ளப் போகிறேன்" எனத்தெரிவித்தான். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு எதுவும் புரியவில்லை. அடுத்த சில மணி நேரத்தில் நடக்கப் போவதை அறியாமல் சகலரும் தத்தமது ஹோட்டல்களுக்குத் திரும்பினர்.

மியூனிச் ஹோட்டலில் தங்கியிருந்த எஸ்.ஏ. முக்கியஸ்தர்களின் அறைக்கதவுகள் ஒரே நேரத்தில் தட்டப்பட்டன. தூக்கத்தில் இருந்தவர்கள் எழுப்பப்பட்டார்கள். ஆயுதங்களுடன் அறைக்குள் நுழைந்த ஹிட்லரின் மெய்பாதுகாவலர்களால் எஸ்.ஏ. அமைப்பின் தலைவர்கள் சகலரும் ஒரே இரவில் சிறை பிடிக்கப்பட்டார்கள்.

அதன் பின்னர் அவர்களுக்கு ஹிட்லரை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஹோட்டலில் இருந்து நேராக மியூனிச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர்கள், சில மணி நேரத்துக்குள்ளேயே கண்ட துண்டமாக வெட்டி கொலை செய்யப்பட்டார்கள். 'தாம் ஏன் கொலை செய்யப்படுகிறோம்?' என்பதை அறியாமலேயே அவர்கள் செத்துப் போனார்கள்.

அன்றைய தினம் ஹிட்லரின் உதவியாளர்களது கையில் சிக்காத மற்றொரு எஸ்.ஏ. முக்கியஸ்தர் தனது காதலியுடன் தேன் நிலவுக்கு சென்றிருப்பதை அறிந்து, தூரத்து நகரமொன்றில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

அவர் தன் காதலியுடன் ஹோட்டல் அறையில் உல்லாசமாக இருந்தார். எஸ்.ஏ. முக்கியஸ்தர்கள் மியூனிச்சில் வேட்டையாடப்படுவது இவருக்குத் தெரியாது. காலை உணவை அருந்தி விட்டு காதலியை அணைத்துக் கொண்டு கட்டிலில் புரண்டு கொண்டிருந்தார். கதவு தட்டப்பட்டது. மனதுக்குள் சபித்துக் கொண்டே எழுந்து போய் கதவை திறக்க, சைலன்சர் பொருத்தப்பட்டத் துப்பாக்கி வெடித்தது. சாதாரண உடையில் இருவர் நின்றிருந்தனர். அந்த அதிகாரி "ஹிட்லர் வாழ்க" என கூறிக் கொண்டே இரத்தத்தில் வீழ்ந்தான். உடம்பில் பொட்டுத் துணியும் இன்றி அறையில் அமர்ந்திருந்த அவனது காதலி வீறிட்டு அலறுவதற்குள் அவளை மடக்கிப் பிடித்த ஆயுதபாணிகள் இருவரும், அதே கட்டிலில் அவளை வல்லுறவு செய்து விட்டு கொலை செய்தனர்.

## ஷானு


இவ்வாறாக பலர் தேடிப்பிடித்து கொலை செய்யப்பட்டார்கள். எஸ்.ஏ. அமைப்பினர் ஹிட்லருக்கு எதிராக சதி செய்வதாக கூறப்பட்டாலும், அதற்கான போதிய ஆதாரங்கள் இருக்கவில்லை. ஆனால் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத ஹிட்லர் தன்னால் வளர்க்கப்பட்ட தனது வளர்ச்சிக்கு பெருமளவில் உதவிய பலரை இரவோடு இரவாக கொன்றொழித்தான்.

உண்மையில் அந்த இரவில் ஹிட்லருக்கு வந்த தொலைபேசி அழைப்பின் மறுமுனையில் யார் இருந்தார்கள், அதில் என்ன சொல்லப்பட்டது என்ற விவரங்கள் கடைசி வரைக்கும் யாருக்கும் தெரியாது.

இந்தச் செய்திகள் வெளியாக ஆரம்பித்ததும், ஹிட்லரை எதிர்த்து கருத்து கூறி வந்த பலர் பயந்து நடுங்கினார்கள்.

**வருவான்...**

## அம்மாவாகிறார் ஸ்டெஃபி கிராஃப்



**டெ**ன்னிஸ் வீராங்கனை ஸ்டெஃபி கிராஃபை யாரும் அவ்வளவு எளிதில் மறந்திருக்க மாட்டீர்கள். 32 வயதான ஸ்டெஃபி இப்போது முழுகாமல் இருக்கிறார்.

ஆம். அம்மாவாகப் போகிறார், திருமணமாகாமலே.

புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் ஆண்ட்ரே அகாஸியுடன் காதல் வயப்பட்டிருக்கும் ஸ்டெஃபி, அகாஸியுடன் 1999ம் ஆண்டில் இருந்து சேர்ந்து வாழ்ந்து வருகிறார்.

அகாஸி, ஸ்டெஃபியிலும் பார்க்க ஒரு வயது இளையவர். இருப்பினும் கல்யாணம் செய்யாமலேயே சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினார்கள். ஸ்டெஃபிக்கு இப்போது 6 மாதம். வரும் நவம்பர் மாதம் ஆண் குழந்தைக்கு அம்மாவாகிறார் ஸ்டெஃபி.

இதேவேளை டென்னிஸ் உலகின் தற்போதைய கவர்ச்சிப் புயல் அன்னா கொர்னிகோவோ திடீர்த் திருமணம் செய்து அவரது இரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளார்.

## கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்கிறார்கள்

**கே**ட்கக் கூடாத கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வது? எல்லாம் ஒரு ஆய்வுக்காகத்தான்.

ஃபின்லாந்து நாட்டில் சமீபத்தில் ஓர் ஆராய்ச்சி நடத்தியுள்ளார்கள். அதில், ஆண்களிடமும் பெண்களிடமும் ஒரு கேள்வி கேட்டிருந்தார்கள். கேள்வி இதுதான்.

"நீங்கள் வீட்டைத் தவிர வேறு எங்கு செக்ஸ் வைத்துக்கொள்ள விரும்புகிறீர்கள்?" அதற்குப் பதில்.

பெரும்பாலும் காடுகள், திறந்த வெளியில் 'செக்ஸ்' வைத்துக்கொள்ள விரும்புவதாகக் கூறுபவர்கள் யார் தெரியுமா?

பெண்கள். பெண்களேதான்.

கடைத்தொகுதிகள் (ஷொப்பிங் கொம்பிளெக்ஸ்), அலுவலகங்கள் போன்ற இடங்களில் 'உறவு' வைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் ஆண்கள் தான்.

'இந்த மாதிரித் திறந்த வெளிகளில் 'உறவு' வைத்துக் கொண்டால் மற்றவர்கள் பார்த்து விடுவார்களே? என்ற கேள்விக்கு, 'ரிஸ்க்' இருந்தாலும் அதில் ஒரு 'த்ரில் உள்ளது' என்று கூறியுள்ளார்களாம் ஃபின்லாந்துப் பெண்கள்.

சரி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

## பூனையைத் தடவினால் நோய் குணமாகும்

**பூ**னை குறுக்கே போனால் போகிற காரியம் கெடும்.

பூனையின் ரோமம் உதிர்ந்தால் வீட்டுக்குக் கூடாது.

இப்படியெல்லாம் பூனையைப் பற்றிய மூட நம்பிக்கைகள் நம்மவர்கள் மத்தியில் எக்கச்சக்கம்.



ஆனால் பூனையினால் மனித இனத்திற்கு நன்மையும் உண்டு என்கிறார்கள் மேலை நாட்டு விஞ்ஞானிகள்.

அப்படியென்ன நன்மைகள்?

பூனையைத் தடவிக் கொடுத்தால் இரத்த அழுத்தம் குறைகிறது என்கிறார்கள் அந்த விஞ்ஞானிகள்.

அதுமட்டுமன்றி வயதானவர்கள் பூனையைத் தடவினால் ஆரோக்கியமாக இருக்க முடியும் என்பதுடன் இங்கிலாந்தில் உள்ள காது கேளாதோர் பாடசாலைகளில் நிறையப் பூனைகளை வளர்த்து காது தொடர்பான நோயுள்ள குழந்தைகளைத் தடவிக் கொடுக்கச் சொல்கிறார்கள். இதனால் பலர் குணமாகி வருகிறார்களாம்.

## வித்தியாசமான (இன்டர்நெட்) விளம்பரம்

**பி**ரபல பொப்பிசைப் பாடகி மடோனாவின் இசை நிகழ்ச்சி சில மாதங்களுக்கு முன் ஜெர்மன் நகரான பெர்லினில் நடந்தது. அதற்கான டிக்கெட்டுக்கள் நிகழ்ச்சி தொடங்க சில நாட்கள் இருக்கும் முன்னரே விற்றுத் தீர்ந்து விட்டன.

இந்த நிலையில் அங்குள்ள இணையத் தளம் (இன்டர்நெட்) ஒன்றில் வித்தியாசமான விளம்பரம் ஒன்று வெளியானது.

அந்த விளம்பரத்தில், தன்னுடன் உடலுறவு கொள்பவருக்கு அதற்குப் பதிலாக மடோனா இசை நிகழ்ச்சிக்கு டிக்கெட் வழங்கப்படும் என்று ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குச் சம்மதம் தெரிவித்து 120 பெண்கள் பதிலளித்திருந்தனர். அவர்களில் ஃபிராங்போர்ட்டைச் சேர்ந்த 26 வயதான அழகி ஒருவர், அந்த விளம்பரதாரரால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவருடன் ஒரு இரவைக் கழித்து விட்டு, மடோனாவின் நிகழ்ச்சிக்கான டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டார் அந்த அழகி.

## பாடிப் பாடிப் பைத்தியமானேன்...



**உ**லகப் புகழ்பெற்ற பொப் இசைப் பாடகி மரியா கேரே (Mariah Carey) மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிகமாக உழைத்ததனால் ஏற்பட்ட மன அழுத்தத்தால் இவர் இந்த பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வேர்ஜின் ரெகோட் என்ற நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய புதிய இசைத்தட்டொன்றை தயாரிக்கும் பணியில் மரியா கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றார். அவரது இசைத்துறை வாழ்வின் விலைகூடிய இந்த இசைத்தட்டை அமைக்க ஓய்வற்ற முயற்சி இறுதியில் அவரை மனநோயாளியாக மாற்றிவிட்டுள்ளது.

மன உளைச்சலினால் மரியா தனது உடலின் பல பாகங்களையும் பிளேட்டினால் வெட்டிக் காயப்படுத்தியிருக்கிறார். பலமுறை தற்கொலைக்கும் முயற்சித்துள்ளார். ஆனால் உடல் நலமின்மையால் உணவுப்பாத்திரங்கள் கைதவறி விழுந்து உடைந்ததில் மரியாவின் உடம்பில் காயம் ஏற்பட்டதாகவும் அவர் தற்கொலைக்கு முயற்சிக்கவில்லை என்றும் அவரது பேச்சாளர் சென்டி பேர்கர் கூறுகிறார்.

எவ்வாறெனினும் இந்த மனநோய் நிலமையால் 31 வயதான மரியா ஏற்கனவே ஒப்பந்தம் செய்த பல இசை நிகழ்ச்சிகளை இரத்துச் செய்திருக்கிறார்.

அமெரிக்காவின் எம்.ரி.வி. நிறுவனத்தின் 20 வருட பூர்த்தியை முன்னிட்டு நடைபெறவிருந்த விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவிருந்த மரியா அந்த நிகழ்ச்சியையும் இரத்துச் செய்துள்ளார்.

தனது 4 வயதில் பாடசாலை மாணவியாக இருக்கும் போதே இசைத்தட்டுக்களுக்கு பாட ஆரம்பித்த மரியா 1990ம் ஆண்டு வெளியிட்ட 'த கொலம்பியா' என்ற இசைத்தட்டின் மூலம் பெரும் புகழை எய்தினார்.

பாடல் வரிசைப்படுத்தல் போட்டி யொன்றில் 'ஹாட் பிரேக்கர்' என்ற இவரது பாடலொன்று 14 தடவை முதலிடத்தை பெற்று சாதனை படைத்தது.

# குங்ஃபு சாதனை

கீழைத்தேய நாடுகளின் யுத்தக்கலைகளில் ஒன்றான குங்ஃபுவில் 'கிகாங்க்' என்ற சுவாசப்பயிற்சிக்கலை உள்ளது. இப்படிப் பயிற்சி பெற்றவர்களுக்குக் குத்தீட்டியால் குத்தினாலும் இரத்தம் வராது.

அண்மையில் மக்கள் சீனாவின் தலைநகர் பீகிங்கில் நடந்த விழாவில் 5 குத்தீட்டிகளின் முனையில் அந்தரத்தில் நின்று சாதனை புரிந்தார் ஒருவர். சாதனை முடிந்து கீழே வந்தவரின் உடலில், ஈட்டி குத்திய இடங்களில் வெள்ளைப் புள்ளிகள் மட்டுமே இருந்தன.




# அடுக்கப்பட்டவை அல்ல; அடித்துச் செல்லப்பட்டவை

தென்கொரியத் தலைநகர் சியோலில் சில நாட்களுக்கு முன் கடும் மழை பெய்தது. மழையென்றால் அப்படியொரு மழை. 285 மில்லி மீட்டர் அளவு பெய்த மழையால், அடுக்கி வைக்கப்பட்டது போல் அடித்துச் செல்லப்பட்ட கார்கள்தான் இவை.

அந்நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் 26 பேர் இறந்து விட்டனர். 13 பேரைக் காணவில்லை.




## தகவல் பெட்டி



# வளர்ந்து பிறந்தது

அமெரிக்காவில் உள்ள க்ளீவ்லாந்து உயிரியல் பூங்காவில் 'க்ளிக்' செய்யப்பட்ட படமிது. நோவா என்ற தாய் ஒட்டகச் சிவிங்கியுடன் பிறந்த ஐந்தே நாளான ஒட்டகச் சிவிங்கிக் குட்டி நிற்கிறது. மாஸ் என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்தக் குட்டி ஒட்டகச்சிவிங்கியின் உயரம் 6 அடி. நிறையோ 93 கிலோ.



# மூளை பலூன்

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தின் எடிஸன் நகரில் 'அமெரிக்கன் மென்சா லிமிடெட்'டின் வருடாந்த மாநாடு சில வாரங்களுக்கு முன் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 46 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டை ஒட்டி, மாநாடு நடைபெற்ற ஹொட்டல் அருகே மூளை வடிவிலான மிகப் பெரிய பலூன் ஒன்று பறக்கவிடப்பட்ட காட்சிதான் இது.

## ஸ்ரீராமின் 'வானம் வசப்படும்'

தமிழ்த்திரையுலகில் முன்னணி ஒளிப்பதிவாளர்களில் ஒருவர் பி.சி. ஸ்ரீராம். இன்று இவரது சிஷ்யர்கள் தான் தமிழில் வெற்றி வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜீவா, கே.வி. ஆனந்த், திரு என்று ஸ்ரீராமிடம் உதவியாளர்களாக இருந்து இப்போது தனியாக வந்து வெற்றிகரமாக ஒளிப்பதிவாளர்களாகத் திகழ்கிறார்கள்.

பி.சி.ஸ்ரீராம் இப்போது 'வானம் வசப்படும்' என்ற படத்தை இயக்கும் திட்டத்தில் இருக்கிறார். 'மீரா', 'குருதிப்புனல்' ஆகிய படங்களை அடுத்து ஸ்ரீராம் இயக்கும் மூன்றாவது படமிது.

## அஜித்தின் 'தாலாட்ட வருவாளா'

அஜித் பிரபலமாவதற்கு முன் தொடங்கப்பட்ட படம் 'வெண்ணிலா'. இது இப்போது 'என்னைத் தாலாட்ட வருவாளா' என்ற பெயரில் தயாராகி வருகிறது.

முத்தாலம்மா என்ற படநிறுவனம் தயாரிக்கும் இப்படத்தில் அஜித் ஜோடியாக ரேஷ்மா நடிக்கிறார்.

## சி னி



நெப்போலியன்–ஜெயா சீல்
படம்: கலகலப்பு



ஸ்ரீகாந்த்–பூமிகா
படம்: ரோஜாக் கூட்டம்

## காதோடு சொல்லுகிறோம்

**இ**மய இயக்குநரின் 'கடல் மலர்கள்' படத்தில் அறிமுகமானாலும் அப்படம் வெளிவருமுன்னரே, அந்தப் 'பிரதி' நடிகையின் மற்றொரு படம் வெளியாகி விட்டது. மூன்றெழுத்து கறுப்பு நடிகரின் சிபார்சில் வாய்ப்புகளைப் பெற்று அவருடன் இணைத்துக் கிசுகிசுக்கப்படும் நடிகை இப்போது ஏனைய நடிகர்களிடமும் அன்பாக இருந்து வருகிறாராம். ஆந்திர வரவான அந்த அம்மணி ஏற்கெனவே திருமணமாகி விவாகரத்துப் பெற்றவராம்.

**ப**க்கத்தில் அமர்ந்திருக்கும் படத்தின் நாயகியுடன் கூட இரண்டு வார்த்தைக்கு மேல் பேச மாட்டாராம் அந்த மூன்றெழுத்து முன்னணி இளம் நாயகன். அவ்வளவு அமைதியான அந்த ரசிகனின் வேலைகள் இரவு எட்டுமணிக்கு மேல் தானாம். தனக்கு விருப்பமானவர்களுக்கு ஃபோன் மூலம் அழைப்பு விடுத்து, ஆள் அரவமற்ற விருந்தினர் விடுதியில் வைத்து விஷயத்தை முடித்து வீட்டிற்குத் திரும்பி விடுவாராம்.

**அ**ண்மையில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'லவ்'வான மூன்றெழுத்துப் படத்தின் நாயகன் அதில் நாயகியாக நடித்த நடிகைக்கு ஏகப்பட்ட வாக்குறுதிகளை அள்ளி வழங்கித் தனது பிடிக்குள் வைத்திருக்கிறாராம். 'இனி வரும் படங்களில் எல்லாம் நீதான் எனக்கு ஜோடி' என்ற ரீதியில் நடிகர் கொடுத்த உத்தரவாதத்தால் நடிகையும் அவரிடம் சுதி அளவு நடிகரின் அன்புப் பிடிக்குள் சிக்கியுள்ளாராம்.

**எ**வ்வளவு காலத்துக்குத்தான் நடன சுந்தரத்துடன் ஊடலும் கூடலுமாக வாழ்க்கையை ஓட்டுவது என்று நினைத்தாரோ என்னவோ, ஆட்டை மாற்றி விட்டாராம் 'சிம்ம' நடிகை. பல் ஆட பெயர் கொண்ட படத்தில் நடிக்கும் இளம் ஹீரோவுடன் பயங்கர நெருக்கமாக இருக்கிறாராம் அந்த நடிகை. படப்பிடிப்பு முடிந்தவுடன் தன்னிலும் ஒரு வயது குறைந்த ஹீரோவுடன் காரில் சுற்றுகிறாராம் நடிகை.



இஷாக்–அபிதா
படம்: பூவே பெண் பூவே

## இன்னொரு ஜோடி

சக்தி சிதம்பரம் இயக்கும் 'சார்லி சாப்ளின்' படத்தில் பிரபு–அபிராமி, பிரபுதேவா–காயத்ரி ஜெயராம் என இரட்டை ஜோடிகள் நடிக்கிறது.

தற்போது மேலும் ஒரு ஜோடி சேர்ந்துள்ளது. பிரகாஷ்ராஜ்–விந்தியா தான் அந்தப் புதிய ஜோடி.


## மறுபடியும் சாமி

பிரபல இயக்குநர் மணிரத்னத்தின் 4 படங்களில் நடித்திருக்கும் அரவிந்தசாமி நடித்த 'என்ஜினியர்', 'சாசனம்' போன்ற படங்கள் முடிவடைந்தும் வெளிவர முடியாது இருக்கின்றன.

இதனால் புதிய படங்கள் எதுவுமின்றி தனது பிஸினஸில் கவனம் செலுத்தியிருக்கும் அரவிந்த சாமிக்குப் புதிய வாய்ப்பு ஒன்று வந்துள்ளது. ரோஜா கம்பைன்ட் நிறுவனத்தின் காஜா மைதீன் தயாரிக்கும் படத்தில்தான் அரவிந்தசாமி நடிக்கவுள்ளார். இப்படம் பற்றிய தகவல்கள் விரைவில் வெளியாகும்.

## மலையாளத்திலும் வெற்றி

பல வருடங்களுக்கு முன் வெளிவந்து வெற்றி பெற்ற 'பதினாறு வயதினிலே' அண்மையில் மலையாளத்தில் தயாரிக்கப்பட்டு வெளியானது. 'கருமாரிக்குட்டன்' என்ற பெயரில் வெளியாகி மலையாளத்தில் வெற்றிகரமாக ஓடும் இப்படத்தில் தமிழில் கமல்-ஸ்ரீதேவி நடித்த வேடங்களில் மலையாளத்தில் கலா பவன் மணி-கௌசல்யா நடித்துள்ளனர்.



மும்தாஜ்

### இடை மெலிந்தார்

தமிழில் தற்போது அதிகமான படங்களைக் கைவசம் வைத்திருக்கும் ஒரே நடிகை மும்தாஜ். இதனால் ஏற்பட்ட பரபரப்போ என்னவோ மும்தாஜ் மும்தாஜ் ஆக்கத்தில் உப்பியிருந்த உடலைக் குறைத்துள்ளார் மும்தாஜ்.

திரையுலக மறுபக்கம் 208 — தமிழ்நாட்டிலிருந்து மயன்

## படங்களின்றி தனிமைப்படுத்தப்பட்ட நடிகை

**ம**லையாளத்திரையுலகில் இருந்து தமிழ்த்திரையுலகிற்குக் கலைச் சேவைசெய்ய வந்ததாகக் கூறிக்கொண்டு கோடம்பாக்கத் திற்கு வந்தவர் 'திவ்ய'மான அந்த நடிகை.

ஆனால் மலையாளத்தில் இருந்து அந்த நடிகை தமிழுக்கு வந்தது வேறொரு காரணத்திற்காக.

மலையாள முன்னணி நடிகர்களில் ஒருவரான 'ஜெய'மான நடிகருடன் (இவர் தமிழிலும் பிரபலம்) அந்த நடிகை 3 படங்களில் ஜோடி சேர்ந்தார்.

தொடர்ந்து 3 படங்களில் ஜோடி சேர்ந்து நடித்ததை அடுத்து இருவருக்கிடையிலும் நெருக்கம் சற்று அதிகரித்தது. 'ஜெய'மான நடிகரின் மனைவியால பரமசிவனின் மனைவி பெயரைக் கொண்ட முன்னாள் நடிகைக்கு இந்த விஷயம் தெரியவந்தது.

எங்கே அந்த நடிகை தனது இடத்தைப் பங்கு போட்டு விடுவாரோ என்ற பயத்தில் தனக்குத் தெரிந்த சினிமாப் புள்ளிகளிடம் விருந்தொன்றில் தன் வருத்தத்தை எடுத்துக் கூறியுள்ளார் நடிகரின் மனைவி.

இதைக் கேட்ட அந்தப் புள்ளிகள், அந்த நடிகை நடிக்க ஒப்பந்தமான தமது படங்களில் இருந்து அவரை நீக்கி விட்டனர்.

தனிமைப் படுத்தப்பட்ட நடிகைக்குத் தான் உதவி செய்தால் பெரிய பிரச்சனையாகி விடும் என்பதை உணர்ந்த 'ஜெய' நடிகர் வந்தாரை வாழவைக்கும் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தார்.

அதுமட்டுமன்றித் தனக்குத் தெரிந்தவர்கள் சிலரிடம் நடிகைக்குச் சிபார்சும் செய்து வைத்தார்.

இளம் நடிகர்களுக்கு ஜோடியாகத் தமிழ்த்திரையுலகில் மும்பை இறக்குமதிகளும் மொடல் அழகிகளும் நடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் போட்டி போட முடியாது என்பதை உணர்ந்த நடிகை, சற்று வயதான ஹீரோக்களிடம் வாய்ப்புக் கேட்டுப் போனார்.

அவர்களில் சிலர் தமது படங்களில் வாய்ப்புக் கொடுத்தனர். அதிலும் 'உயர' நடிகர் தொடர்ந்து தனது 3 படங்களில் வாய்ப்புக் கொடுத்தார். அத்துடன் தனக்குத் தெரிந்தவர்களிடம் நடிகைக்குச் சிபார்சும் செய்தார்.

இருப்பினும் தமிழில் நடிகையின் படங்கள் சரியாகப் போகாததாலும் சில படங்கள் தயாராகியும் வெளிவர முடியாத நிலையாலும் நடிகைக்குத் தொடர்ந்து வாய்ப்புகள் வரவில்லை.

இப்போது தமிழில் தொடர்ந்து நடிக்க முடியாமலும் மலையாளப்படவுலகிற்குச் செல்லமுடியாத நிலையிலும் இருக்கிறார் நடிகை.

**முகப்பில்**
ரோஜா
அரவிந்தசாமி
ரம்யா



## மினி சினி

☆ 'அன்ஷ்' என்ற இந்திப் படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் அப்பாஸ். இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக இந்தி நடிகை ராணி முகர்ஜியின் தங்கை சர்பானி முகர்ஜி ஜோடியாக நடிக்கிறார்.

☆ 'கலைக்கல்லூரி' என்ற படத்தை இயக்கி வருகிறார் சந்திரா ஸ்ரீசேகர் என்ற புதியவர். இதில் 'முதல்பாடல்' படத்தில் அறிமுகமாகிய மது கதாநாயகனாக நடித்து வருகிறார்.

☆ 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் அஜித்துடன் ஒரு பாடல் காட்சிக்கு நடனமாடிய முன்னாள் உலக அழகி யுக்தா முகிக்கு சம்பளமாக 9 இலட்சமும் உடையலங்காரத்திற்கு 6 இலட்சமுமாக மொத்தம் 15 இலட்ச ரூபா கொடுக்கப்பட்டுள்ளது.

☆ 'காதல் சடுகுடு' படத்தில் விக்ரம் ஜோடியாக முதலில் நடிக்கவிருந்தவர் மீனா. பிரபுதேவா-மீனா காதல் விவகாரம் தலைதூக்க, அப்படத்தில் மீனாவை நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக பிரியங்கா திரிவேதி நடிக்கிறார்.

☆ 'அற்புதம்' படம் மூலம் நடனத்திலிருந்து நாயகன் அந்தஸ்துக்கு உயர்ந்திருக்கும் 'மகா கணபதி..' புகழ் லாரன்ஸ், அப்படம் வெளிவருமுன்னரே 'அழகு' என்ற இன்னொரு படத்திலும் கதாநாயகனாக நடிக்கிறார்.

☆ 'மாயன்' படத்தை இயக்கி நடித்து வரும் நாசர், அடுத்து 'தீம் தரிகிட' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளார். இப்படத்தின் நாயகனாக முன்னணி இளம் நடிகர் ஒருவர் நடிக்கவுள்ளார்.

☆ 'தாலிகாத்த அம்மன்' படத்தில் பிரபுவுடன் முக்கிய வேடத்தில் நடித்த பாண்டியராஜன் தற்போது சுந்தர்.சி. இயக்கும் 'அழகான நாட்கள்' படத்தில் கார்த்திக்குடன் முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார்.

☆ 'காமராசு' படத்தில் முரளி-லைலா ஜோடியாக நடித்துக் கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில் 'காமராஜ்' என்ற பெயரில் புதிய படத் தலைப்பு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பெயரை புதிய பட நிறுவனம் ஒன்று பதிவுசெய்துள்ளது.

## சுவலட்சுமியின் தேடல்

படங்களில் ஊனமுற்ற வேடங்களில் நடித்தால் உயரத்துக்குப் போய் விடலாம் என்று எல்லாரிடமும் கூறி அதற்கு உதாரணமும் சொல்லி வருகிறார் சுவலட்சுமி.

கமல்- 'பதினாறு வயதினிலே', ரஜினி- 'முள்ளும் மலரும்' என்று உதாரணம் கூறும் சுவலட்சுமி, தானும் ஊனமுற்றவராக நடிக்க அந்த வேடத்தைத் தேடி வருகிறார்.

அதெல்லாம் இருக்க, 'கண்மணி' படத்தில் சுவலட்சுமி ஊனமுற்றவராக நடித்தார். இருந்தும் அவர் உயரவில்லையே. இது அவருக்குத் தெரியாது போலும்.

## கமலுக்கு முத்தம் கொடுப்பாரா சிம்ரான்?

முதல் முறையாக கே.பாலச்சந்தர் (பார்த்தாலே பரவசம்), மணிரத்னம் (கன்னத்தில் முத்தமிட்டால்) ஆகியோரது இயக்கத்தில் நடிக்கும் சிம்ரான், 'பம்மல் கே.சம்பந்தம்' படத்தில் முதல் முறையாக கமலுக்கு ஜோடியாக நடிக்கிறார்.

பொதுவாக கமல் தன் படங்களில் நடிக்கும் நாயகிகளுக்கு உதட்டில் முத்தம் கொடுப்பது வழக்கம். 'பம்மல் கே.சம்பந்தம்' படத்தில் கமலுக்கு முத்தம் கொடுப்பீர்களா?" என்று கேள்விக்கு சிம்ரான் அளித்த பதில் இது.

"படத்தின் இயக்குநர் கதை சொல்லும் போது அந்த மாதிரிக் காட்சி எதையும் எனக்குச் சொல்லவில்லை. சொல்லாத காட்சிகளை எடுக்கவும் மாட்டார். அதை யும் மீறி முத்தம் கொடுக்க வேண்டிய சூழ் நிலை வந்தால் என் காதலருடன் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பேன்."

## அது மட்டும் கேக்காதீங்க

லிவிங்ஸ்டனுக்குச் சொல்லிக் கொள்ளும்படியாக புதிய படங்கள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. 'சொல்லாமலே', 'சுந்தரபுருஷன்' ஆகிய படங்களின் வெற்றியால் வந்த படங்களிலேயே இப்போது நடித்துக் கொண்டிருக்கிறார் லிவி. சமீபத்தில் வெளியான 'என் புருஷன் குழந்தை மாதிரி' படத்தின் சுமாரான வெற்றிக்குப்பின் புதிய படமொன்றில் ஒப்பந்தமாகியிருக்கிறார். படத்தின் பெயர் 'அது மட்டும் கேக்காதீங்க'.

'பெண்களைச் சென்றடையக் கூடிய இந்தப் பெயருக்காகவே படம் ஓடும்' என்கிறார் லிவி.



கமலேஷ்-ஷாலு
படம்: வைஷ்ணவி

## அவர்தான் இவர்

பிரபு-கார்த்திக் இணைந்து நடிக்கும் 'க்ளிக்' படத்தை இயக்குபவர் செந்தில்ராஜன். இவர் ஏற்கனவே விஜய்-அஜித் இணைந்து நடித்த 'ராஜாவின் பார்வையிலே' படத்தை இயக்கியவர்.

## ஏறுமுகத்தில் புதுமுகம்

சரண் இயக்கும் 'ஏறுமுகம்' படத்தில் நாயகன் அஜித்திற்கு சரியான ஜோடி கிடைக்கவில்லை. அஜித்தை வைத்து பத்து நாட்கள் படப்பிடிப்பை நடத்திய சரண் இப்போது 'ஏறுமுகத்'தில் நடிக்க வைக்க புதுமுகத்தை தேடி வருகிறார்.



பிரகாஷ்ராஜ்-சங்கீதா-மணிவண்ணன்
படம்: பிறந்தநாள்

## கமலுக்குக் கதை

'ஆனந்தம்' என்ற வெற்றிப்படத்தை இயக்கிய லிங்குசாமி, அடுத்து இரண்டு படங்களை மாத்திரம் இயக்க ஒப்புக் கொண்டுள்ளார். ஒன்று, 'ஆனந்தம்' படத்தைத் தயாரித்த சூப்பர் குட் ஃபிலிம்ஸிற்கு, மற்றது, 'ஆஹா' படத்தைத் தயாரித்த சோஹன் ஃபிலிம்ஸிற்கு.

இவற்றைத் தவிர கமலுக்காக அற்புதமான கதை ஒன்றையும் தயார் செய்து வைத்திருக்கிறாராம் லிங்குசாமி. இதில் கமலால் மட்டுமே நடிக்க முடியும் என்று கூறும் லிங்குசாமி ரஜினியின் தீவிர இரசிகர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காதல் வலையில் ரம்பா

சுந்தர்.சியிடம் உதவியாளராக இருந்த சுராஜ், தனியாக வந்து 'மூவேந்தர்' படத்தை இயக்கினார். முதல் படம் சரியாகப் போகவில்லை. அடுத்து 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்' படத்தை சாய் சுரேஷ் என்ற பெயரில் இயக்கினார். படம் சுமாராக ஓடியது.

இதை அடுத்து 'குங்குமப் பொட்டுக்கவுண்டர்' ஜோடியான சத்யராஜ்-ரம்பா ஜோடியை வைத்து 'மிலிட்டரி' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

'கு.பொ.கவுண்டர்' நேரத்தில் தொடங்கிய சாய் சுரேஷ்-ரம்பா காதல் இப்போது திருமணம் வரை வந்து விட்டது. குரு (சுந்தர்.சி) பாணியில் தனது படநாயகியையே வாழ்க்கையின் நாயகியாக்கிக் கொள்ள இருக்கிறார் சாய்சுரேஷ்.

'மிலிட்டரி' வெளியானதும் ரம்பா-சாய் சுரேஷ் திருமணம் நடக்கும் என்கிறார்கள்.

## வித்தியாச 'விக்ரம்'கள்

'சேது' படத்திற்குப் பின் விக்ரம் நடித்து வெளியாகி வெற்றிகரமாக ஓடும் படம் 'தில்'. இதையடுத்து விக்ரம் நடிக்கும் படத்தின் கதைகளும் விக்ரமின் வேடங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை.

'ஜெமினி' படத்தில் நகைச்சுவை வேடத்திலும் 'ஆட்டோகிராஃப்' படத்தில் ஒரு மனிதனின் மூன்று நிலைகளில் நடக்கும் சம்பவங்களுடன் கூடிய வேடத்திலும் 'யூனிவேர்சிட்டி' படத்தில் கல்லூரி மாணவனாகவும் 'சாமுராய்' படத்தில் 4 கெட்-அப்களிலும் வித்தியாசமாக நடித்து வருகிறார் விக்ரம்.

## திடீர்த் திருமணம்

...நக்மாவின் தங்கையும் ஜோதிகாவின் ...வுமான ரோஷினி இருவாரங்... முன் திருமணம் செய்து ...ண்டார்.

...கார்த்திக் ஜோடியாக 'சிஷ்யா' படத்... நடித்திருந்த ரோஷினியின் நிஜப் ...ர் ராதிகா. தமிழைத் தவிர ...கு-கன்னடம் ஆகிய மொழிகளில் ... படங்களில் நடித்திருக்கும் ரோஷினி ...னாகப் பிரபலமாகவில்லை.

...மும்பையில் திடீரென நடந்த இந்தத் ...மணம் இரகசியத் திருமணம் போல் ...க்கும் தெரிவிக்கப்படாமல் நடந்தது.

## 'மாயனி'ல் கண்டி நடனம்

நாசர் சொந்தமாகத் தயாரித்து இயக்கி நடிக்கும் 'மாயன்' படத்தில் இடம்பெறும் பாடல் காட்சி ஒன்று, சில மாதங்களுக்கு முன் இலங்கையில் படமாக்கப்பட்டது. பொலநறுவையில் படமாகப்பட்ட இப்பாடல் காட்சியின்போது அவ்வூரைச் சேர்ந்த சிலரால் படப்பிடிப்புக் குழுவினர் தாக்கப்பட்டனர்.

நாசர்- ரஞ்சிதா தோன்றும் 'மாயவனே மாயவனே..' என்ற காட்சியின் பின்னணியில் இலங்கையின் பிரபல நடனங்களில் ஒன்றான கண்டி நடனம் இடம் பெறுகிறது.

## தமிழில் சௌந்தர்யா

தெலுங்கில் பிஸியாக நடித்து வரும் சௌந்தர்யா அவ்வப்போது தமிழில் தலைகாட்டி விட்டுப் போவதுண்டு. கடைசியாக 'படையப்பா'வில் தலை காட்டிய சௌந்தர்யா மறுபடி தமிழுக்கு வந்திருப்பது, விஜயகாந்தின் 'தவசி' படத்தில் நடிப்பதற்காக.

'தவசி'யில் தந்தை-மகன் என இரட்டை வேடங்களில் விஜயகாந்த் நடிக்கிறார். தந்தைக்கு ஜோடியாக ஜெயசுதா நடிக்கிறார். இந்த வேடத்தில் நடிக்க முதலில் மீனாவை அணுகினார், ஏனோ அவர் நடிக்கவில்லை. மகனுக்கு ஜோடியாக சௌந்தர்யா நடிக்கிறார்.

'தவசி'யை அடுத்து சௌந்தர்யா சொந்தப்படத் தயாரிப்பில் இறங்கவுள்ளார். தெலுங்கில் தயாராகவிருக்கும் சொந்தப் படம் விருதைக் குறிவைத்து எடுக்கப்படுகிறது.

## பெயர் மாற்றம்

மலையாளத்தில் மம்முட்டி நடிக்கும் படமொன்றுக்கு 'ராட்சஸ ராமன்' என்று பெயர். படத்தில் படப்பிடிப்புக்கள் அரைவாசிக்கும் மேல் முடிந்து விட்டன. இப்போது படத்தில் பெயருக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பி விட்டது.

ராமனை எப்படி ராட்சஸன் என்று சொல்லலாம் என்று கூறி ஏகப்பட்ட கலாட்டாக்கள். எனவே படத்தின் பெயரை மாற்ற முடிவு செய்துள்ளார்கள்.

## 'நந்தா'வில் டூயட் நஹி

'சேது' பாலா இயக்கத்தில் சூர்யா-லைலா ஜோடியாக நடித்துவரும் 'நந்தா' படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்து வருகிறார். இருப்பினும் படத்தில் டூயட் கிடையாது என்கிறார் சூர்யா.


இந்தியச் சாதனை இதழ் – ஏப்ரல் 2000 (தனிச்சுற்று) மாத இதழ்
"அணுவைத் துளைத்தெழு கடலைப் புகட்டி"
ஆசிரியர்: N. முத்துக்கிருஷ்ணன், 31, பிள்ளையார் கோவில் தெரு, சிவகங்கை–630561, ☎ 40833

# ரோஜா

அவள் காலையில் பூத்த
புத்தம் புது ரோஜா மலரல்லவா
அவன் கரங்கள் அவளை
மொய்த்து விட்டன.
அவன் கையிலுள்ள கூரிய
நகங்களால் அவள் இதழ்களை
கிள்ளி விடுகிறான்–அவளோ
வலியால் துடிக்கிறாள்.
அவளை கசக்கி விடுவதுதான்
அவன் நோக்கம்–ஆனால்
அவளோ வாழத் துடிக்கிறாள்.
வாழத்தான் வழியேது அவளுக்கு
இப்படியான எமன் உள்ளபோது
இனி மேலாவது–புத்தம் புது
ரோஜாவை கொய்து
நசுக்காதே–என்று
சொல்லத் துடிக்கிறது
என் இதயம்–முடியவில்லை
ஏனென்றால் அது அவன் வீட்டு ரோஜா

எஸ்.அகிலா, மண்டூர்.

# மணந்தவளே...!

பார்த்திருந்தேன் உன் பாத நிழல்
நீ பார்ப்பாய் என...
காத்திருந்தேன் திரும்பி வரும் வழியில்
நீ அழைப்பாய் என...
பூத்திருந்தேன் ஒரு புது மலர் கொண்டு
நீ சேர்வாய் என....
சேர்த்திருந்தேன் சிறு புன்னகைகள்
நீ சிரிப்பாய் என;
கோர்த்திருந்தேன் பல கவிதை அதை
நீ கேட்பாய் என..
வியர்த்து நின்றேன் சுடு வெயிலிலும் எனை
நீ நினைப்பாய் என...
வளர்த்து வந்தேன் பல ஆசைகள் எனை
நீ மணப்பாய் என...
இன்று–மறந்து விட்டேன் அந்த ஆசைகளை
நீ மணந்தவளாம் என!

ரி.எம்.ராஜன்–மட்டக்களப்பு.

# தேன் கிண்ணம்

# வேண்டும் உன் அன்பு

இனிமேலும் எனக்குப்
பொறுமையில்லை
இழந்து விட்ட இதயத்தில்
வலிமை இல்லை
தனிமையில் இருப்பதில்
சுகமும் இல்லை
தவறென்ன நான் செய்தேன்
புரிய வில்லை
எனக்கென்று நிலையான
உறவும் இல்லை
எப்போதும் இதனை எண்ணாத
நாளும் இல்லை.
முகம் காட்டி என்னை
வாட்டி மறைவதென்ன?
சட்டென்று நெஞ்சில்
பாய்வதென்ன
கண்ணி ரண்டில் நீ இன்றி
உறக்கமென்ன
பின்னோக்கி என் கால்கள்
நடப்பதென்ன
பித்தனாக்கி என்னை விட்டு
பிரிந்த தென்ன
விளையாட்டாய் என்னில்
ஏன் கோபம் கொண்டாய்
வீடு வரை வந்த பின் ஏன்
விலகிச் சென்றாய்
சிரித்து வந்த உறவை ஏன்
விட்டுச் சென்றாய்
சிந்தனையை கலைத்து
விட்டு மறைந்து சென்றாய்
கனவில் வந்து என்னை நீ
கட்டிக் கொண்டாய்
கலைந்த பின்னர் என்னை
விட்டு விலகிச் சென்றாய்
நிலையான மண் உள்ளம்
நிலைக்க வேண்டும்
நித்திலத்தில் நாம் இணைந்து
வாழ வேண்டும்
இதயத்தில் என் அன்பு
நிலைக்க வேண்டும்
இறப்பிலும் நாம் ஒன்றாக
இணைய வேண்டும்
மறைந்த பின்னும் நம்புகழ்
ஓங்க வேண்டும்
இம் மண்ணில் என்றும் நம்
காதல் வாழ வேண்டும்.

எம்.ஐ.பாஹீர்–அக்கரைப்பற்று–01.

# அஞ்சலட்டை மாத இதழ்

பத்திரிகைகளுக்கு எழுதவேண்டும். தாம் எழுதுவது பத்திரிகைகளில் வரவேண்டும். அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை பலருக்கும் உண்டு.

ஆனால் பலரது ஆக்கங்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டால் அவை பிரசுரமாவதில்லை.

வேறு பத்திரிகைகளுக்கு ஏன் நாம் ஆக்கங்களை அனுப்பவேண்டும். நாமே ஓர் இதழைத் தொடங்கி அதில் எழுதலாமே என்று தமிழ்நாட்டிலுள்ள சிவகங்கையைச் சேர்ந்த என்.முத்துக்கிருஷ்ணன்–ஆர்.சண்முககுமார் ஆகிய இருவரும் சிந்தித்தார்கள்.

சிந்தனையைச் செயலாக்கி 'அணு' என்ற அஞ்சலட்டை மாத இதழைத் தொடக்கி வெளியிட்டு வருகிறார்கள்.

அஞ்சலட்டையில் 101 துணுக்குச் செய்திகள் அச்சிடப்பட்டுள்ளன. செய்திகளைப் படிக்க லென்ஸ் ஒன்றையும் இலவசமாக வழங்குகிறார்கள்.

# கண்ணீரில் கரைந்த கவிதை

சூரியனின் சாயம்
வெளுக்கும் வரை...
பூமி பந்து சுழல
மறுக்கும் வரை...
இந்த மண்ணில்
காதல் வாழும்;
கவிதை பேசும்!
***
காதலித்தால் கண்ணீர் ருசிக்கும்,
தண்ணீர் உவர்க்கும்,
வெட்கம் விலா எலும்பில் குந்தும்;
பயம் வந்து வார்த்தைகளை
திருடி விட்டு போகும்;
***
காதலி!
என் சொந்தங்கள்கூட
நம் காதல் எதிரியாகிவிட்டனர்;
நேரத்தை கூட்டி வைத்து...
உன்னோடு இருக்கும்
நிமிடங்களை திருடிவிட்டனர்;
***
இப்போதெல்லாம்..
நித்திரையை தொலைத்துவிட்டு,
இருளுக்கு காவல் இருக்கின்றேன்.
சோற்றை பூனைக்கு
வைத்து விட்டு–அடியும் உதையும்
அதற்கு...
பாவம் ஒரு பக்கம்;
பழி இன்னொரு பக்கம்;

எஸ்.எல்.எம்.நிஸ்ஹான்–கல்முனை.

# தினமும் அழுகின்றேன்...



இனனசையே என்னை இன்மையாய
உள்ளத்தில் இருத்தி, உடலிழந்து..
இருப்பை உயிர்ப்பிக்க முடியாது
தவித்தேன்.. அங்கே....!
***
பஞ்ச வர்ணம் சேர்த்து,
பஞ்சம் போக்கும் வண்ணம்
உயிர் படைக்கின்றது, உன்
பஞ்சை மிஞ்சும் புனிதமான
பிஞ்சுக் கரங்கள்...
***
ஏன் திறனில் வியந்து
மதி மயங்கிய விழிகள்
வழிகாட்டியாக, விரல்களில்
தூரிகையுடன் என்னை மறந்தேன்
அத்தனையும் அழகோவியங்கள்.
***
என திருமுகம்
மட்டும் என்னால் தீட்ட
முடியவில்லை. பல தடவை
முயன்றேன்..., உன்முகம்
உருப் பெறவேயில்லை...
***
கணப் பொழுதில் கண்கள்
செம் பூக்களாய் உருவெடுக்க,
கனனத்தில் விழுந்து சிதறாது
தேனும் சொட்டுகின்றது...
***
உள்ளங் கையில் விழுந்த
துளியைப் பார்க்கின்றேன், துளியில்
உன் முகம்...
***
உள்ளத்தில் உள்ள உன்னை
ஏன் வரைய முடியவில்லை
என்பதை உணர்ந்தேன்...
***
இருப்பை உயிர்ப்பு ஊட்டினேன்...
கணமும் தினமாய் மாற,
விழி நீரில் தோன்றும்
உன் முகத்தில்..., என்
விழிகளைத் தேடி அழுகின்றேன்...
***

பாக்கியராசா துஷ்யந்தன்–கோட்டைக்கல்லாறு–02.

# பேனா நண்பர்கள்



பெயர்: என். மதி
வயது: 23
முகவரி: இல.44, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எச்.ரீனா.
வயது: 20
முகவரி: இல. 338, ஒஸ்மன் வீதி, சாய்ந்தமருது-07.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். ரிம்ஸான்.
வயது: 23
முகவரி: 43/2, யூசுப் அவனியூ, சீனன்கோட்டை, பேருவலை.
பொழுது போக்கு: வழமையானவை.




அன்பு என்பது மலர் என்றால் அதன் மணம் அருள். அன்பின் பண்பு தான் அருளாக மலர்கிறது. அந்த மணமே இல்வாழ்க்கைக்கு இன்சுவை கூட்டுகிறது; சுவை தருகிறது.

"ஒரு நாடு நலமடைய வேண்டுமானால் நாட்டிலுள்ள பெண்கள் போற்றப் பட்ட வேண்டும். ஒரு வீடு நலமடைய வேண்டுமானால் அந்த வீட்டிலுள்ள பெண்கள் போற்றப்பட வேண்டும்!" என்று கூறுகிறார், மூர் என்ற அறிஞர்.

கணவன் தன் இல்லக் கிழத்தியைக் கிருகலட்சுமியாக மதித்து அவளிடம் அன்பு செலுத்தி அவள் கண் கலங்காமல் கவனித்துக் கொள்ள வேண்டும். அன்பு இல்லாவிடில் ஒன்றுமே இல்லை.

நல்ல மனைவி இல்லறத்தை புரிந்து செயலாற்றும் தன்மையில்தான் உள்ளது.

மனைவியின் மனதைப் புரிந்து

கணவனும் மனைவியும் ஒன்று கூடி வாழ அன்பு என்னும் அரிய சக்திதான் அடித்தளம் அமைக்கிறது.

அன்பு என்ற ஓர் இணைப்புச் சக்தி இல்லாவிட்டால் உலகில் குடும்பம் என்ற வாழ்க்கை முறையே ஏற்பட்டு இருக்காது. ஓர் உள்ளத்தின் அன்பை உணர்ந்து கொள்ளும் சக்தி மற்றோர் உள்ளத்திற்கு

# அன்பைக் கொடுத்து இன்பத்தைப் பெறுங்கள்



இயல்பாகவே அமைந்திருக்கிறது.

இதனை வீட்டில் இருக்கும் நாய் மூலமே அறிந்து கொள்ள முடியும். அதன் மேல் வைத்திருக்கும் உண்மையான அன்பை வாய்விட்டுச் சொல்ல அவசியமில்லாமல், அதுதானாகவே, இயல்பாகவே புரிந்து கொண்டு வளர்ப்பவனிடம் விசுவாசமாக நடந்து கொள்கிறது.

அன்புக்கு அதிக சக்தியுள்ளது. சாதாரண பிராணி கூட அன்பைப் புரிந்து கொண்டு பிரதிபலனைச் செய்யும் பொழுது, வாழ்நாள் முழுவதும் துணைவியாக வரும் மனைவி, அன்பைப் புரிந்து கொள்ளாமலா இருப்பாள்?

கொள்ள நடக்க வேண்டிய அமைப்பில குழப்பம் நேர்ந்து விடக்கூடாது.

மனபூர்வமாகப் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முயன்றால், இந்த நிலையை எதிர்நோக்குவதில் இருவருக்குமே சிரமமிராது.

மனதைத் திறந்துவிட்டால் மறைந்து கிடக்கும் மர்மங்கள் புலனாகிவிடும். இது இல்லறம் இனிமையுடன் வாழ வழி நடத்தும்.

இல்லாளிடம் குறைபாடுகளைக் கண்டால் அவளை அன்போடு திருத்த வேண்டுமே தவிர, அதட்டக் கூடாது. ஒரு நோயாளியை டாக்டர் வந்து அதட்டினால் அந்த நோய் தீர்ந்து விடுமா?

# இந்தவாரம் உங்கள் பலன்

19.08.2001 தொடங்கி 25.08.2001வரை

## மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) செய்தொழில் நன்மையுடன் பொருள்வரவும் கிடைக்கும். எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளோர் தமது கருமங்களால் பாராட்டு பெறுவர். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

## இடபம்:
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) தொழிலில் சிறு கஷ்டங்கள் தோன்றி மறையும். தேகநிலை சிலருக்கு பாதிப்படையக் கூடும். உத்தியோகத்தில் ஒரு சிலர் மாற்றங்களை பெறுவர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

## மிதுனம்:
(மிருகசீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தோன்றும். பணவரவு சிறந்து காணப்படும். உத்தியோக ரீதியாக சிலர் இடமாற்றங்களைப் பெறுவர். மாணவருக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும், விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

## கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் நிலையிலும், பணவரவிலும் நன்மைகள் தோன்றும். எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளினால் பாராட்டப்படுவர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி நிலை கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள், முதலீடுகளால் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

## சிங்கம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) குடும்பத்தில் மனமகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும். பணவரவு சிறந்து காணப்படும். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வுகளில் வெற்றியுண்டாகும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 03.

## கன்னி:
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலிலும், குடும்பத்திலும் முன்னேற்றம் ஏற்படும். பணவரவு சிறந்து காணப்படும். வெளியிட பயணங்களில் அவதானமாக இருப்பது நல்லது. உத்தியோக ரீதியாக சிலர், கஷ்டங்களை எதிர்நோக்குவர். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

# சோதிட மாமணி தில்லை

## துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) தொழிலில் சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும் பணக்கஷ்டமும், குடும்பத்தில் மகிழ்ச்சியின்மையும் உண்டாகும். உத்தியோகத்தர்கள் தங்கள், மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நன்மைதரும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பும், விவசாயிகள், வியாபாரிகளுக்கு இலாபமும் கிடைக்கும்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

## விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியும், மனமகிழ்ச்சியும் கிடைக்கும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 05.

## கிரக நிலை

| | |
|---|---|
| சிங்கம் | – சூரியன் |
| கன்னி | – புதன் |
| தனு | – கேது, செவ்வாய் |
| இடபம் | – சனி |
| மிதுனம் | – வியாழன், இராகு |
| கர்க்கடகம் | – வெள்ளி |

சந்திரன் சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

## தனு:
(மூலம் பூராடம், உத்தராடத்து முதற்கால்,) தொழில் நிலையிலும், குடும்பத்திலும், மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும். பணரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். உத்தியோகத்தில் உள்ளோர் பதவி உயர்வுகளுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

## மகரம்:
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) குடும்பத்தில் சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளோர் விழிப்புடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள், மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 03.


## கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) எடுத்த கருமங்களில் வெற்றியும், தொழில் சிறப்பும் உண்டாகும். பணக்கஷ்டங்கள் தீரும். உத்தியோக ரீதியாக நன்மைகள் தோன்றும். மாணவர்களுக்கு, கல்வியில் இருந்து வந்த கஷ்டங்கள் மறையும். விவசாயிகள், வியாபாரிகள், இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 06.

## மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி ரேவதி,) மனக்கலக்கமும், குடும்பத்தில் பிரச்சனையும் உண்டாகும். பணக்கஷ்டத்தினால் சிலர் கடன் படுவர். உத்தியோகத்தில் வேலை பழு கூடுதலாக அமையும். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலையுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 07.

## லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# தூக்கம் கண்களைத் தழுவ...



இயந்திரமயமான இந்த உலகில் வேலை செய்யும் பெண்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவது இரவில் மட்டுமே. இந்த நேரத்தில் கூட பெண்கள் பலர் தூக்கமில்லாமல் அவதிப்படுகிறர்கள்.

தூக்கமின்மையைத் தடுக்கப் பல வழிகள் உள்ளன.

தூங்கும் அறையைச் சுத்தமாக வைத் திருப்பது மிக முக்கியம். படுக்கை அறையின் வெப்பநிலை சீராக இருக்க வேண்டும். அதிக குளிரோ அல்லது அதிக வெப்பமோ இருந்தால் தூக்கம் வராது.

அத்துடன் படுக்கையும் சீராக இருக்க வேண்டும். மேடு பள்ளமுள்ள படுக்கை கூடாது. அதேபோல் வழவழப்பான விரிப்பும் தொளதொளவென்று இருக் கும் தலையணையும் தூக்கத்தைக் கெடுக் கும்.

உடற்சோர்வைப் போக்க கைகால் களை விரித்து நிம்மதியாகப் படுக்கக் கற்றுக் கொள்ளுங்கள். படுத்து, பதினைந்து நிமிடத்தில் தூக்கம் வராவிட்டால், வடுக் கையை விட்டு எழுந்து வெளியே வந்து விடவேண்டும்.

இவ்வாறு செய்தால் படுக்கையறையில் தூக்கமின்றி அவதிப்படுவதைத் தவிர்க்க லாம்.

படுக்கைக்குச் செல்லும்போது இனிப்பு அதிகம் உள்ள உணவுப் பொருட்களைச் சாப்பிட்டால் தூக்கம் வராது. பால், வாழைப்பழம் சாப்பிட்டால் நன்றாகத் தூக்கம் வரும்.

வயிறு காலியாக இருந்தால் தூக்கம் வராது. அதுபோல் வயிறு முட்டச் சாப்பிட்டால் ஜீரண உறுப்புக்களின் வேலை அதிகரித்துத் தூக்கத்தைப் பாதிக்கும்.

நன்றாகத் தூக்கம் வரும்வரை தூங்கச் செல்லக்கூடாது. விடுமுறை நாட்களில் அதிகம் தூங்குவதோ பகல் நேரத்தில் தூங்குவதோ நல்லதல்ல.

சிலருக்கு 5 மணிநேரத்தூக்கம் போது மானது. சிலருக்குப் பத்துமணி நேரத் தூக்கம் தேவை. வயதான காலத்தில் குறைவான தூக்கமே போதும்.

சரியான அளவு உணவு, அமைதியான மனநிலை, மாலைநேர உடற்பயிற்சி இவற்றின் மூலம் நல்ல தூக்கத்தைத் தழுவ லாம்.

# ஒலிவ் பெப்பர் வெஜ் கறி

ஒலிவ் எண்ணெயை முகம், கை கால்களுக்குப் பூசத்தான் அதிகம் பயன் படுத்துவதுண்டு. ஆனால் உணவில் ஒலிவ் எண்ணெயைச் சேர்த்துப் பயன்பெறவும் முடியும்.

ஒலிவ் எண்ணெயைப் பயன்படுத்திச் சமைக்கப்படும் ஒரு கறியை இங்கே பார்க்க லாம்.

**தேவை:**

ஒரு வெங்காயம் (நறுக்கியது), 1 லீட்டர் தண்ணீர், 2 தேக்கரண்டி ஒலிவ் எண் ணெய், 2 தேக்கரண்டி எலுமிச்சம்பழச் சாறு, 1 தேக்கரண்டி உப்பு, 1 பூண்டுப் பல், 1/2 தேக்கரண்டி மிளகுத் தூள், பழுத்த மிளகாய் ஒன்று (நீளவாக்கில் நறுக்கியது), 2 தக்காளி (நீளவாக்கில் நறுக்கியது), 1/2 தேக்கரண்டி மல்லித்தூள், 1 தேக்கரண்டி கடுகு, கறிவேப்பிலை சிறிதளவு.

**செய்முறை:**

வாணலியில் ஒலிவ் எண்ணெயை விட்டுச் சூடேறியதும் கடுகு தாளிக்கவும். தறிவேப்பிலையையும் வெங்காயத்தையும் தனித்தனியாகப் போட்டு தாளிக்கவும்.

பின் மல்லித்தூள், பூண்டு ஆகியவற் றைப் போட்டு நன்கு வறுக்கவும். இவை பதமானதும் தண்ணீரை விடவும். நறுக்கி வைத்த மற்றக் காய்கறிகளைப் போட்டு உப்பு, மிளகு சேர்த்து காய்கறி வேகும் வரை அடுப்பில் வைக்கவும். இறக்கியதும் எலுமிச்சம் சாற்றைக் கலந்து, சாப்பாட்டுக் குத் தொட்டுக் கொள்ளலாம்.


# பட்டுச் சேலை பரிசுப் போட்டி



## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JX

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-08-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## குருநாகல் வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

லைலா அக்ஷியா,
இல. 72, அஸ்வெடும, குருநாகல்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.







**"சுகு....** நீ வெளில போ... நான் அனியோட கொஞ்சம் பேசணும்.."

சுகந்தி போனதும் அனிதா "என் னப்பா...?" என்றாள் பயத்துடன்.

"உன்னைக் கொண்டு வந்து எறக்கி விட்டானே... யாரு?"

"அதான்... அன்னிக்கு மோட்டார் சைக் கிள்ல விழுந்தாம்பா... அவன் பர்ஸைத் திருப்பிக் கொடுத்தேன். பெரிய பணக்காரன் போலிருக்கு... காலேஜ் ஃபெஸ்டிவலுக்குப் பணம் கொடுத்தான்..."

"அவ்வளவுதானே? ட்ராப்தானே? வேற ஒண்ணும் இல்லையே...?"

"வேறன்னா... என்னப்பா சொல்றீங்க நீங்க?"

"சரி... சரி"

அவர் போனதும் அனிதாவுக்குக் கண் களில் ஜலம் வந்தது. அம்மா பாலிஷ் போட்ட நகைகளை அவளுக்கு அணிவித்து "எல்லா நகையையும் நாலா பிரிச்சு வெச்சிருக் கேன்..." என்றாள்.

"நாலா..?"

"ஜிம்புக்கு நாளைக்குப் பொண்டாட்டி வந்தா அவ பங்கு கேப்பா இல்லையா...?"

"எதுக்கும்மா...? நான் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லைம்மா..."

"உன்னை யாரும் கட்டாயப்படுத்தப் போறதில்லை..."

"இப்படிச் சொல்லிண்டே எல்லாரும் கட்டாயப்படுத்தறீங்க. நான் படிக்க வேண் டாமா? ஐ.ஏ.எஸ். எழுத வேண்டாமா?"

"எழுதேன்... யார் வேண்டாம்னா...?"

"அமெரிக்கா, ஆப்பிரிக்கான்னு துரத்தினா எப்படி?"

"யாருடி துரத்தறா அனி...? உன் நல்லதுக்காகத் தானே செய்யறோம்..."

அனிதாவுக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது.

**'இத்தாலி ட்ரிப்பை கான்ஸல் பண்ணிட்டு போர்டு மீட்டிங்கை ஒத்திப் போட்டுட்டு வேளச்சேரில மத்தியான வெயில்ல காத் திருக்கேன்னா அதுக்கு என்ன அர்த்தம்?'**

அனிதா முழுசாகக் கண்ணாடியில் பார்த் துக் கொண்டாள்.

'நான் அழகாவா இருக்கேன்? அழ குன்னா என்ன? காதில் தங்க லோலாக்கு மாட்டி, ஜரிகை கரை போட்ட பட்டுப் புடவை உடுத்தினால் பாதி அழகு வந்து விடுகிறது. அதோடு நெற்றிக்கு நடுவில் பிந்தி ஒட்ட வைத்து மையிட்டு...'

"அனிதாவைக் கூப்பிடு!"

ஃப்ரேம் போட்டாற்போல் அவள் வந்து நின்றபோது.... அவளைப் பார்க்க வந் திருந்த சுரேஷ், "மை காட்... இவள் தான் என் மனைவி..." என்றான்.

சுரேஷ் உதாரண அமெரிக்க மாப் பிள்ளை. எட்டாம் வகுப்பிலிருந்தே ஐ.ஐ.டி. கனவுகள் புகட்டப்பட்டவன். அதற்காக 'பிரில்லியண்ட்', 'அகர்வால்' என்று தபால் மூலமும், நேரிலும் தயார் செய்து கொண்டு பல் தேய்ப்பதிலிருந்து படுக்கை வரையில் ஐ.ஐ.டி.-யை ஸ்மரித்தவன். பரீட்சை பாஸ் பண்ணி, கான்பூரில் முதல் ஆண்டிலிருந்தே அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் ஜாதகங்களைச் சேகரித்தவன். 'எங்கே ஸ்காலர்ஷிப்...' 'எங்கே அஸிஸ் டண்ட்ஷிப்' என்று அல்லாடும் இந்தக் கோஷ்டிக்கு... திருநெல்வேலி தெரியாது-லூஸியானா, ஒக்லஹாமா தெரியும்! புறநானூறு தெரி யாது-பாப் மியூஸிக் பாய் ஜார்ஜ் தெரியும்! அது ஒரு தனி வர்க்கம்!

எம்.எஸ். முடித்து வேலை கிடைக்கும் வரை ஸ்டூடண்ட் விசாவை இழுத்தடித்து, டிசம்பரில் கல்யாணத்துக்கு வந்தவன், ஒரு வார புயல்வேகச் சுற்றுப்பயணத்தில் விளம்பர உதவியுடன் டஜன் பெண்களைப் பார்த்ததில் அனிதா-சுரேஷுக்கு நான்காவது பெண். பார்த்ததும் அவளைப் பிடித்துவிட்டது. அரக்கு கலர் புடைவையில் பவ்யமாக வந்து அவள் சோபாவில் உட்கார...

"ஹாய்...ஐ'ம் சேஷாத்ரி சுரேஷ்" என்றான்.

"ஹலோ" என்றாள்.

"என்ன படிக்கிறீங்க?"

"பாட்டனி."

"எந்த காலேஜ்?"

"அம்மணி காலேஜ்."

"இங்கிருந்து பஸ்ல போவீங்களா?"

"சில சமயம் ட்ரெய்ன்லயும் போவேன்."

"அமெரிக்கா பிடிக்குமா உங்களுக்கு?"

மௌனம்.

"நியூயார்க்ல நாப்பத்தெட்டு டி.வி. சானல் இருக்கு. எங்கிட்ட கார் இருக்கு. 'ஹண்டாய்'னு கொரியன் கார்! இப்ப சின்ன காண்டோமினியம் இருக்கு, ஜெர்ஸில்! நான் நிறைய ட்ராவல் பண்ணுவேன்... கல்யாணம் ஆனப்புறம் நானும் என் பார்ட்னரும் ஒரு 'ஸாஃப்ட்வேர் கன்ஸல் டன்ஸி' ஆரம்பிக் கிறோம். காண்டோமினியத்தை வித்துட்டு பெரிய வீடு வாங்கப் போறேன். டூ கராஜ் ஹவுஸ். எல்லா முக்கியமான க்ரெடிட் கார்டும் வெச்சிருக்கேன். அந்த கம்பெனி ஷேர்களை வாங்க எனக்கு முன்னுரிமை இருக்கு! கம்ப்யூட்டர் லாங்வேஜ்ல 'கோபால்'னு ஒரு 'கோடு' இருக்கும் தெரியுமா...? அதுல சில புரொக்ராம்களை மொழிபெயர்க்கிற பிஸினஸ். அமெரிக்காவில எத்தனை மிலியன் லைன் 'கோபால் கோடு' இருக்கு தெரியுமா?" என்று சுரேஷ், ஜிம்புவிடம் சொல்லிக் கொண்டிருந்தான். ஜிம்பு அவனைப் பக்தி யுடன் பார்த்துக் கொண்டிருந்தான். 'மைக்கேல் ஜாக்ஸன் ஆணா பெண்ணா?" என்று விசாரித்துக் கொண்டிருந்தான்.

வராந்தாவிலேயே தன் அப்பா சேஷாத்ரி யிடம் "அப்பா! ஐ லைக் திஸ் கேர்ள்! அவங் களுக்குச் சம்மதம்னா முடிச்சுருங்க" என்றான் சுரேஷ்.

அனிதாவின் அம்மாவிடம், சுரேஷின் அம்மா "உங்களால எத்தனை சீக்கிரம் கல்யாணம் செய்ய முடியும்?" என்று கேட் டாள்.

"வர டிசம்பர்லதான்னு சொன்னீங்க?"

"சத்திரம் கெடைச்சா இந்தத் தையி லேயே முடிச்சுரலாம்னு சொல்றான்!" என்றார் சேஷாத்ரி.

"கஷ்டம்சார். எனக்கு பி. எஃப் லோன் போட்டாலே ஒரு மாசம் ஆகும் சத்திரம் பார்க்கணும். டிசம்பர்லதான் முடியும்."

"அவ்வளவு தள்ளிப் போட வேண்டாம்னு பார்க்கறான்."

"நீங்கதான் 'பையன் அடுத்த டிசம் பர்லதான் வரப்போறான்'னு சொன்னீங்க!"

"உங்க டாட்டரைப் பார்த்ததும் ரொம்ப புடிச்சுப் போச்சு. அவன் எப்பவும் அப்படித் தான் நினைச்சான்னா சாதிச்சுருவான். பணம் பெரிய விஷயமில்லை. ஏற்பாடு பண் ணிடலாம். சத்திரத்துக்குப் பதிலா ஏதாவது ஓட்டல்ல வெச்சுண்டுரலாம்" என்றார்.

"ரெண்டு நாள் டயம் கொடுங்க... சொல்லிடறேன்... ஒரு வார்த்தை அனிதா வையும் கேட்டுரலாம். மேலும் அவ படிப்பு வேற முடிக்கணுமில்லையா?" என்றார் மகாதே வன்.

"அது பாட்டுக்கு அது. கல்யாணம் பண் ணிண்டப்புறம் விசா வாங்கறதுக்கு ஒரு வருஷம் ஆய்டும். அப்ப படிப்பை முடிக்க லாமே?"

அனிதாவை மகாதேவன் கேட்டார்: "என்னம்மா, யு ஆர் வெரி லக்கி. அவர் உடனே தயாரா இருக்கா.. என்ன சொல்றே?"

அனிதா 'இப்போ கல்யாணம் வேண்டாம்' என்று சொல்ல விரும்பினாள். அப்பா அந்தப் பதிலை விரும்பமாட்டார் என்று பயமாக இருந்தது.

"நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப் படிப்பா!"

"நீ என்ன சொல்றே?" என்று மனைவி யிடம் கேட்டார்.

"ரொம்ப அவசரப்படுத்தறாளே. நாம விசாரிக்கலாம்."

"விசாரிக்கிறது என்ன விசாரிக்கிறது? அமெரிக்கா மாப்பிள்ளை!"

"விசாரிக்கலாம். எதுக்கு இத்தனை அவசரம்?"

"அந்தப் பையனுக்கு நம்ம பொண்ணை ரொம்ப புடிச்சுப் போச்சு. அனிதா நீதான் சொல்லணும். உன்னை நாங்க ஃபோர்ஸ் பண்ண விரும்பலை... தெரியுமில்லை?"

அனிதா தலையாட்டினாள்.

"சம்மதமா... இல்லையா? இப்படிக் கோயில் மாடு மாதிரி தலையாட்டினா என்ன அர்த்தம்?"

ஜிம்பு. "பண்ணிக்கோடி... எனக்கு நிறைய டி ஷர்ட். ஸி.டி.ப்ளேயர் எல்லாம் கெடைக்கும்" என்றான்.

அனிதாவுக்குக் குழப்பமாக இருந்தது. அமெரிக்கா! அதை நினைத்தாலே சென்ட் வாசனை அடித்தது, பாப் சங்கீதம் கேட்டது. ஏரோப்ளேன் பயணங்களும், நியான் விளக்கு களும், குழ குழவென்ற இங்கிலீஷும்.. உசேனியா ஸ்டோர்ஸுக்குப் போய் ஃபோனில் மது இருக்கிறாளா என்று சோதித்து, பின்னர் அங்கே போனாள்.

## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

மதுவின் அறையில் மைக்கேல் ஜாக்ஸன், ஸல்மான் கான், ஷபானா ஆஸ்மி என்று பெரிசாகப் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. புத்தகங்கள் இறைந்து கிடக்க 'வாக்மன்' னைப் பொருத்திக் கொண்டு பாட்டனி இலைகள் வரைந்து கொண்டிருந்தாள் மது.,

"கல்யாணமா, உனக்கா? நீ வயசுக்கு வந்துட்டியோ?"

"டோண்ட் பி ஸில்லி!"

"உங்க மதராஸி கம்யுனிட்டில சீக்கிரம் கல்யாணம் பண்ணிடுவாங்கல்ல. யாரு பையன்?"

"அமெரிக்கா."

"யு ஆர் லக்கி அனி. அப்ப நான் அமெரிக்கா வரலாம். மை காட். வாட் லவ்லி பீட்ஸாஸ்."

"மது ஸீரியஸா சொல்லு நீ..."

"பையன் எப்படி இருக்கான்?"

"எல்லோரும் போலத்தான்."

"அனி... வைரவன் சாரை போய் மறுபடி பார்த்தேன். ரசீது கொடுக்கற மாதிரி சாக்கு சொல்லிட்டு, படு கவர்ச்சியா டிரஸ் போட்டுக்கிட்டு வாசனையா போனேன். அந்த க்ராக்கு ஒல்லிப் பொண்ணு சீதள், முதல்ல என்னை உள்ள உடமாட்டேன்னு ருச்சு. அவரே வெளிய வந்தார். என்ன கேட்டார் தெரியுமா?"

"என்ன?"

"அனிதா வரலையா?ன்னு. அந்தாளுக்கு உம்மேல தான் க்ரஷ்ஷு. நீ என்னடான்னா அமெரிக்காவில மாப்பிள்ளை பார்த்துட்டே."


"மது, நான் கேக்க வந்தது வேற. வைரவன் கியரவன்னு குழப்பாதே."

"சரி சீரியஸ்.. நான் சொல்லிரட்டா?"

"சொல்லு."

"சரின்னு சொல்லிடு. இந்த மாதிரி சான்ஸ் வராது!"

[அனிதா வருவாள்...]



## பைத்தியம்

# பாப்பா முரசு சிறுகதை

வீரானி என்ற நகரத்தை மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். மகா வீரன். மதி நுட்பம் மிக்கவன். அவனது பேராற்றலைக் கண்டு மக்கள் அனைவரும் புகழ்ந்தனர். 'நல்ல அரசன் நமக்குக் கிடைத்துள்ளான்' என்று கொண்டாடினர்.

அந்த நகரத்தின் மத்தியிலே ஒரு கிணறு இருந்தது. நகர மக்களுக்கு குடிநீர் அளிக்கும் ஒரே கிணறு அதுதான். அதன் தண்ணீர் பளிங்கு போல தெள்ளத் தெளிவாக இருக்கும். பனி போலக் குளிர்ந்து இருக்கும்.



ஒரு நாள் நள்ளிரவு. மயானத்தில் இருந்து பேய் ஒன்று எழுந்து வந்தது.அந்த குடிநீர்க் கிணற்றுக்கு மேல் மிதந்தது. அதனிடம் இருந்த விநோத மூலிகைச் செடியைப் பிழிந்தது. செடியிலிருந்து ஏழு சொட்டுகள் கிணற்றில் விழுந்தன. "இந்த மூலிகைச் சாறு கலந்த தண்ணீரைக் குடிக்கும் நகர மக்கள் அனைவருக்கும் பைத்தியம் பிடிக்கட்டும்" என்று மந்திரம் சொல்லி மறைந்து போனது.


அடுத்தநாள் காலை நகர மக்கள் அனைவரும் கிணற்றுத் தண்ணீரைக் குடித்தனர். இரண்டே இரண்டு பேர் மட்டும் குடிக்கவில்லை. அவர்கள் மன்னனும் மந்திரியும். தண்ணீரைக் குடித்த மக்கள் அனைவருக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது.

ராஜ வீதிகளிலும் பிரதான சாலைகளிலும் சந்தைகளிலும் பைத்தியம் பிடித்த மக்கள் கூடிக் கூடிப் பேசினார்கள். "தெரியுமா சேதி! மன்னனுக்கும் மந்திரிக்கும் பைத்தியம் பிடித்து விட்டதாம்" என்று ஒருவர் காதை ஒருவர் கடித்துக் கொண்டனர்.

நகரெங்கும் இதே பேச்சாக இருந்தது. "இப்படிப் பைத்தியம் பிடித்தவர்களா நம்மை ஆள்வது? அவர்களைக் கீழே இறக்கி விட்டு, புதிய ஆட்சியாளர்களை அமர்த்த வேண்டும்" என்று மக்கள் குழுக் குழுவாகப் பேசத் தொடங்கி விட்டனர்.

இச் செய்தி மன்னரின் காதுக்கு எட்டியது. அன்று இரவு ஒரு தங்கப் பாத்திரத்தில் கிணற்று நீரை எடுத்து வரச் செய்தார். அதைத் தானும் அருந்தி, மந்திரிக்கும் குடிக்கக் கொடுத்தார்.

பிறகென்ன! மன்னருக்கும் மந்திரிக்கும் பைத்தியம் தெளிந்துவிட்டது என்று நகர மக்கள் குதூகலித்தனர். நகரமே விழாக்கோலம் பூண்டது.



1முதல் 20 வரையுள்ள இலக்கங்களை ஒரு பென்சில் கொண்டு இணைத்துப் பாருங்கள். மறைந்திருப்பது என்னவென்று தெரியும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **25.08.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **408**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 406

**பரிசுக்குரியவர்:**
எம்.ஜே. அஹமட் அமானி,
ஸாஹிரா தேசிய பாடசாலை, புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சிவலிங்கம் ஜிதுர்ஷன்,<br>சரஸ்வதி வித்தியாலயம்,கிண்ணையடி,வாழைச்சேனை. | க.கீர்த்தனா,<br>இந்து மகளிர் வித்.,வெள்ளவத்தை,கொழும்பு-06. |
| அ.அருணேஸ்,<br>ஹைலன்ஸ் கல்லூரி, ஹட்டன். | த.சசீகரன்,<br>அசோகா வித்தியாலயம், கண்டி. |
| ஏ. தேவிகா,<br>அம்பகோட்டே தமிழ் வித்தியாலயம், கெங்கல்ல. | வி.அரியகன்,<br>தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா. |
| அசானா ஹில்மா அம்சீக்,<br>புனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை. | செல்வி பஸ்லினா,<br>அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. |
| எம். எஸ். பாத்திமா நஸீஹா,<br>மட்/அறபா வித்தியாலயம், ஏறாவூர்-06. | ஆர். ரொஷான் முஹம்மத்,<br>சாந்த ஜோன் கல்லூரி, நுகேகொட. |

## குட்டிச் செய்திகள்

5 அடி உயரமுள்ள ஒருவரின் தொடை எலும்பு நீளம் 1 அடி 3 அங்குலம் இருக்கும். தொடையில் 17 தசைகள் இருக்கின்றன.

ஒருவர் பிறந்தது முதல் 75 வயது வரை நகம் வெட்டாமல் வாழ்ந்தால், அவரிடம் 13 அடி நீள நகம் வளர்ந்திருக்கும்.

ஒரு நாளைக்கு நாம் குறைந்த பட்சம் 20 ஆயிரம் தடவை காலடி எடுத்து வைத்து நடக்கிறோம்.

உடலில் உள்ள தோலின் எடை 2 3/4 கிலோ முதல் 4 1/2 கிலோ வரை இருக்கும்.

அதிகாலை நேரத்தில் தான் எமது தலைமுடி வேகமாக வளர்கிறது.

கண் இமைகளில் உள்ள முடிகள் மூன்றிலிருந்து 5 மாதத்திற்கு ஒரு தடவை விழுந்து புதிய முடிகள் முளைக்கின்றன.

ஒரு மனிதனுக்கு இரண்டு வருடத்தில் தாடி ஒரு அடி நீளம் வளர்ந்து விடும்.

உடலில் உள்ள இரத்தக்குழாய்களை நீளவாக்கில் வைத்து அளந்தால் 80 ஆயிரம் மைல் தூரத்திற்கு இருக்கும்.

நமது முகத்தில் 16 வெவ்வேறு விதமான தசைகள் இருக்கின்றன.

உணவை விட மனிதனுக்கு உறக்கமே மிக முக்கியமான தேவையாகும். உறக்கம் இல்லாது போகும்போது மரணம் விரைவாக ஏற்படும்.

## தோல்வியடைந்த கண்டு பிடிப்புக்கள்

கற்பனையில் தோன்றுவதை விஞ்ஞானிகள் சாதித்து உருவாக்கி விடுவதும் உண்டு. ஆனால் எவ்வளவோ முயன்றும் நிறைவேறாத சில அரைகுறைக் கண்டுபிடிப்புக்களும் உண்டு. அவற்றில் சில இவை:

→ கட்டடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் கீழே குதித்து உயிர் தப்புவதற்குக் குடைபோன்ற நவீன பராசூட் ஒன்றைக் கண்டுபிடிக்க பெஞ்சமின் ஒப்போஹெய்மர் என்பவர் முயற்சி செய்தார். இதற்காகக் கால்களில் அணியக் கூடிய மிதவை அட்டைகளைத் தயாரித்தார். ஆனால் இந்தக் கண்டுபிடிப்புத் தோல்வியடைந்து விட்டது.



☆☆



← கன்னத்தில் ஏற்படும் சிறு குழிவுகளை அளக்க 'டிம்பிள் மேக்கர்' என்னும் கருவியை பெர்லினைச் சேர்ந்த மார்ட்டில் தயாரித்தார். ஆனால் அது சரிவர இயங்கவில்லை.

☆☆

→ எங்கு போனாலும் கையில் எடுத்துப் போகக் கூடிய குளியல் தொட்டியை பிரான்செஸ் அலன் என்பவர் 1972ல் கண்டுபிடித்தார். இந்தக் குளியல் தொட்டிக்குக் குழாய் இணைப்புக்கொடுத்து, ஆடம்பரமாகக் குளிக்க முடியும் என்றார். ஆனால் அந்த முயற்சி தோல்வியடைந்தது.



## தென்றலும் புயலும்



மணித்தியாலத்திற்கு 6 கிலோ மீட்டர் வேகத்தில் வீசுவது மென்காற்று.

6 முதல் 11 கிலோ மீட்டர் வரை வீசினால் அது இளம் தென்றல்.

15 முதல் 19 கிலோ மீட்டர் வரை வீசினால் அது தென்றல் காற்று.

20 முதல் 29 கிலோ மீட்டர் வேகத்தில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வீசினால் அது புழுதிக்காற்று.

30 முதல் 39 கிலோ மீட்டர் வேகத்தில் வீசினால் அது ஆடிக்காற்று. அதற்கு மேல் 100 கிலோ மீட்டா வரை வீசுவது கடுங்காற்று.

101 கிலோ மீட்டர் முதல் 120 கிலோ மீட்டர் வரை வீசுவது புயல்காற்று.

20 கிலோ மீட்டருக்கு மேல் வீசுவது சூறைக்காற்று.

# அன்புக்கும் அளவுண்டு!

காந்தன் நான்கு நாளைக்குள்ளேயே துரும்பாய் இளைத்துப்போயிருந்தான். ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை. ஒழுங்காகத் தூங்குவதுமில்லை. இதற்கெல்லாம் காரணம் உடலெங்கும் கவலை அவனை ஆக்கிரமித்துக் கொண்டதுதான். தன் வாழ்க்கையில் இப்படி நிம்மதி பறிபோனமைக்கு தானும் ஒரு காரணம் என்பதை ஒவ்வொரு வினாடியும் அவன் மனம் சொல்லி அழுதது.

தான் இவ்வுலகில் வாழ்வதற்கு சுனந்தாவே காரணம் என நினைத்துக் கொண்டிருந்தவன் காந்தன். ஏழு வருடங்களாக அவனுக்கும் சுனந்தாவிற்குமிடையில் உருவான காதல், இன்று கண்ணீரில் வந்து நிற்கின்றது. காந்தன் அவளை விட இரண்டு வயது மூத்தவன். பாடசாலையில் கண்கள் சந்தித்துக் கொண்டதால் இருவரின் இதயங்களும் இடம் மாறிக் கொண்டன. காதல் புலரைத் தைரியசாலி களாக மாற்றி வைத்திருக்கின்றது. அந்த வகையில் ஆரம்பத்தில் வீட்டாருக்குப் பயந்து நின்ற அவள், படிப்படியாக அச்சத்தை விலக்கி காந்தனைக் காதலிக்க ஆரம்பித்தாள். இருவருமே பொது இடங் களில் சந்திக்கத் தொடங்கினார்கள். காதலையும், கர்ப்பத்தையும் நீண்ட நாட்களுக்கு மறைக்க முடியாது என்பது போல நாளடைவில் இரு வீட்டிலும் தகவல்கள் தெரிந்தன. காந்தன் வீட்டில் எதிர்ப்பு இருக்கவில்லை. ஆனால் சுனந்தாவின் அண்ணன்மார் அவளை அடித்தார்கள். "இதப்பாருடி உன்ன யாருக்குக் கட்டி வைக்கிறதெண்டு எங்களுக்குத் தெரியும்... அவனோட இனிமேல் பேச நினைச்சே அடிச்சே உன்னக் கொன்று போட்டிருவம்" வார்த்தைகளாலும் அதட்டினார்கள்.

காதலை சினிமாக் கதையென்று வரும் போது எல்லோரும் ஏற்றுக்கொள்வார்களே தவிர, தங்கள் குடும்பத்தில் நிஜக்காதல் நுழையும் போது அதை யாரும் விரும்புவதில்லை. அந்த வகையில்தான் அவள் அண்ணன்மாரும் நடந்து கொண்டார்கள். எது எப்படியிருந்தாலும் காதல் அதன் வலிமையைக் காட்டியது. அவளால் காந்தனை மறக்க முடியவில்லை.

"காந்தன் நான் உங்களை இழந்தால் உயிருடனே இருக்கமாட்டன்!" பிரச்சனைக்குப் பின்னர் முதல் சந்திப்பிலேயே அவள் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தை இதுதான். மிக இரகசியமாகவே இருவரின் சந்திப்பும் தொடர்ந்தது. நேரடிச் சந்திப்பை விட தொலைபேசியே அவர்களை இணைக்கும் காதல் பாலமானது. இந் நிலையில் காந்தனுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. அவள் தொழில் நுட்பக் கல்லூரியில் கற்று வந்தாள்.

காந்தன் அவள்மீது அதீத அன்பு வைத்திருந்தான். தனக்கு மட்டுமே அவள் சொந்தம் என்ற எண்ணம் அவனை ஆணித்தரமாகவே ஆட்கொண்டிருந்தது. அவள் தன் அண்ணன்மாருடன் கை கோர்த்துக் கொண்டு போனாலும்கூட அவன் கவலைப்படுவான். அவள் தன்னை மட்டுமே தொட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் அவன் ஒரு சுயநலவாதி. இந்த அளவு கடந்த அன்புதான் தன் காதலுக்கு எமனாக மாறப்போகின்றது என்று அவன் அப்பொழுதெல்லாம் நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டான்.

அன்றொரு திங்கட்கிழமை. சுனந்தா கல்லூரியிலிருந்து வீடு செல்வதற்காக பஸ் தரிப்பிடத்தில் தனியாக நின்றிருந்தாள். அப்பொழுது அவளுடன் அங்கேயே ஒன்றாகப் படிக்கும் சிவா வந்து நின்றபடி,

"சுனந்தா... நான் உங்களிட்ட ஒன்று சொல்லவேணும். நேரடியாகவே கேக்கிறன்.. நான் உங்கள உயிருக்குயிரா லவ் பண்றன்.. உங்கட பதில் வேணும்!" தைரியமாகவே கேட்டான். அவளுக்குக் கோபம் வரவில்லை. நிதானமாகவே சொன்னாள்.

"சிவா நான் ஊரில ஒருத்தரை விரும்புறன்... நான் உங்களோட பிரண்டாகப் பழகினதை ஏன் காதலெண்டு நினைக்கிறீங்க... நாங்க எப்பவும் பிரண்டாகவே இருப்பம்!" அவளது பதில் கிடைத்ததும் அவன் முகம் உடனேயே சுருங்கிப் போனது. சுனந்தாவிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு புயல் வேகத்தில் நகர்ந்து சென்றான்.

இந்த விடயம் நண்பர்களின் மூலமாக காந்தனின் செவிகளுக்கு எட்டியது. இவள் அவனுடன் சரளமாகப் பழகியதால்தானே அவளிடம் விருப்பம் கேட்டிருக்கிறான் என்று எண்ணினான். அவள் அண்ணன்மாருடன் அதிகளவு பேசிக்கொண்டிருந்தாலே கவலைப்படுவான். அப்படியிருப்பவனுக்கு அவள் வேறு சிலருடன் பேசிக்கொண்டிருப்பது பிடிக்குமா என்ன?

"சுனந்தா நான் இருக்கும் போது ஏன் மற்றப் பெடியனுகளோட கதைக்கிறா?.. நீ என்னோட மட்டும் தான் கதைக்க வேணும். வேற யாருடனும் கதைக்கிறது எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது!" அவன் பேச்சில் கண்டிப்பு இருந்தது. அவள் தன்னை விலக்கி விடுவாளோ என்று பயந்து போனான்.

நம்பிக்கை தான் வாழ்க்கை மட்டுமல்ல, காதலும்கூட நம்பிக்கையில் தான் இருக்கிறது என்பதை அந்த இடத்தில் அவன்



பேசிய வார்த்தைகள் மறந்துவிட்டன. சிறிய சிறிய விடயங்களுக்கெல்லாம் அவளுடன் வாக்குவாதப்பட்டான். தன் மீது அவன் அதிகளவு அன்பு வைத்திருந்தமையினால் தான் இப்படியெல்லாம் பேசுகின்றான் என்று அவளுக்குப் புரியவில்லை. மாறாக தன்மீது சந்தேகப்படுகின்றான் என நினைக்கத் தொடங்கினாள். படிப்படியாக அவனிடமிருந்து அன்பு விலகி வெறுப்பாக மாறிக் கொண்டிருந்தது. ஒரு சந்தேகப் பிராணியுடன் வாழ்வது கோழைத்தனமானது என முடிவெடுத்து விட்டாள். ஆறுதலாகவே உருவான காதல் அவசரமாகக் கலைந்து போனது.

அவளின் பிரிவு காந்தனை வாட்டி வதைத்தது. அவளிடம் மனம் விட்டுப் பேச விரும்பினான். அவளை ஒரு நாள் வீதியில் கண்டபோது அருகில் போய்,

"சுனந்தா.. உன்னோட நான் கதைக்க வேணும்... பிளீஸ் கொஞ்சம் நில்லேன்." அவள் கேட்காதவள் போல நடந்தாள். அவளுக்கு முன்னால் போய் மறித்தான். அவள் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு,

"எனக்கு உன்னோட பேச விருப்பமில்ல.. வழியை விடு" முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் வார்த்தைகள் அவனை முள்ளாகக் குத்திக் கொண்டன. அவளது கையை இறுகப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான். அவள் உடனே கூச்சலிடத் தொடங்கினாள். கூக்குரல் கேட்டு வீதியில் நின்றவர்களெல்லாம் ஓடி வந்தார்கள். காந்தனுக்கு வீதியில் வைத்தே அடி விழுந்தது. அவன் நான்கு பேருக்கு நடுவில் அடிவாங்கி அவமானப்படும் போதும் அவள் மனம் சிறிதேனும் இரங்கவில்லை. இதுதான் சரியான தண்டனை என்று நினைத்து சந்தோசப்பட்டாள்.

அவளைப் பொறுத்தவரையில் அவனைத் தன் மனதிலிருந்து தூக்கியெறிந்து விட்டாள். ஆனால் அவனோ அவளை இன்னும் 'காதலி' என்று புனிதமான ஸ்தானத்திலே மனதில் பூட்டிவைத்துக் கொண்டிருக்கிறான். அவள் என்றோ ஒருநாள் தனக்காக வருவாள் என்ற நம்பிக்கையில் இன்னமும் அவன் மூச்சு காத்துக்கிடக்கின்றது. ■

**அ.கோகுலதீபன்-கல்முனை**

---

# வாக்குறுதி

ஓர் ஊரிலே ஒரு தெப்பைக்குளம் இருந்தது. மிகவும் பாழடைந்ததாலும் ஒதுக்குப்புறமாக இருந்ததாலும், அந்த வற்றிய குளப்பக்கம் யாருமே செல்வது கிடையாது. அங்கே கிழட்டுக்குள்ளநரி ஒன்று வசித்து வந்தது. மிகவும் வயதாகிவிட்டதால், அதனால் எழுந்து வேட்டையாட முடியவில்லை. மிகவும் பசியோடு படுத்திருந்தது. அப்போது அவ்வழியால் ஒருவயதான பண்டிதர் வந்து கொண்டு இருந்தார். எப்படியாவது அவரை இரையாக்கிவிடவேண்டும் என நினைத்தது அந்த நரி.

"பண்டிதரே சற்று நில்லுங்கள். நீங்கள் இந்த குளத்தில் இறங்கி என்னிடம் இருக்கும் பொற்காப்புக்களை பெற்றுச் செல்லலாமே" என்று கூறியது குள்ளநரி.

அதற்கு பண்டிதர் "ஐயோ மாட்டேன். நீயோ தந்திரசாலி. சூழ்ச்சிகள் நிறைந்த கொடிய பிராணி. என்னைப்பிடித்து தின்றுவிட்டால் என்னாவது?" என்றார்.

"பயப்படாதீர்கள் பண்டிதரே. நான் முன்னர்தான் உயிர்களை கொன்று சாப்பிட்டு வந்தேன். இப்போது எந்தப் பாவமும் செய்வதே இல்லை. நீங்கள் என்னுடைய வார்த்தையை நம்பி இங்கே வரலாம்" என்று கூறியது குள்ள நரி.

அந்த நரியினுடைய வார்த்தையை நம்பிய பண்டிதரும், குளத்தில் இறங்கி அதன் அருகே போனார். அப்போது தருணம் பார்த்திருந்த நரி பாய்ந்து அவருடைய கால்களைப் பிடித்துக்கொண்டது.

பண்டிதரும் நடுங்கியபடியே "இது முறையோ, இது நீதியோ? உன்னுடைய வாக்கை நம்பித்தானே குளத்தில் இறங்கினேன். கடைசியில் உன்னுடைய மிருகபுத்தியை காட்டிப்போட்டாயே!" என்று அழத்தொடங்கினார்.

நரி சிறிது நேரம் யோசித்தது. 'நாங்கள் மிருகங்களாக, மிருக குணங்களோடு இன்னும் எத்தனை காலம்தான் இப்படியே வாழ்வது! மிருக புத்தியை காட்டிவிட்டாயே என்று பண்டிதர் கூறியது நரிக்கு மன வருத்தமாக இருந்தது. வாக்குமாறுவது பாவம் இல்லையா? நல்ல பண்புகளையும் வளர்த்துக்கொண்டால் என்ன?' என்று சிந்தித்தது.



**இணுவில் உத்திரன்**

"பண்டிதரே வாக்கு கொடுப்பதும் பிறகு அதை மீறுவதும் வேண்டுமானால், ஆறு அறிவு படைத்த உங்கள் குணங்களாக இருக்கலாம். ஆனால் நாங்கள் விலங்குகள், எப்பொழுதுமே கொடுத்த வாக்குறுதியை மீறவே கூடாது என்று தீர்மானித்து இருக்கின்றோம். அதனால் விட்டுவிடுகின்றேன். ஆனால் எனக்கு பசிக்கிறதே! நீங்கள் கருணைகாட்ட மாட்டீர்களா? உணவு கொடுக்க மாட்டீர்களா?" என இரக்கமாக கேட்டது. அப்போது பண்டிதரும் "நன்றி நரியே நீ என்னை சாப்பிட்டாலும் இன்று மட்டும்தானே பசி தீரும். ஆனால் என்னை உயிரோடு நீ விடுகின்ற படியால் அதற்கு நன்றிக்கடனாக நான் தினமும் இவ்வழியால் வரும்போது உனக்கு உணவு கொடுக்கின்றேன்" என்றார். நரியும் சந்தோசப்பட்டது.

பண்டிரும் தப்பினேன் பிழைத்தேன் என்று நினைத்தபடி கரை ஏறி பெருமூச்சு ஒன்றையும் விட்டுக்கொண்டார். அப்போது நரி "பண்டிதரே எனக்குப் பசிக்கிறது. மறந்துவிடாமல் உணவை எடுத்து வாருங்கள்" என்று கூறியது.

அப்போது பண்டிதர் "ஏய் முட்டாள் குள்ள நரியே? நீ இந்த உலகத்திலே பிழைக்க தெரியாதவனாக இருக்கின்றாயே? இன்னுமா இந்த மனிதர்களை நீ புரிந்து கொள்ளவில்லை! ஏதோ கிடைத்த இரையையும் விட்டுவிட்டு வாக்குறுதி, அது, இது, எண்டு ஏதோ எல்லாம் புலம்பிக் கொண்டு, இனிமேல் இந்த மனிதர்களைப் பார்த்தாவது வாழக்கற்றுக்கொள்." என்றார்.

"பண்டிதரே எனக்கு தினமும் உணவு கொடுப்பதாக நீங்கள் கூறிய வாக்கு என்னாவது இப்படி வாக்கு மாறலாமா?" என்று கேட்டது நரி.

"வாக்காவது, மண்ணாங்கட்டியாவது! நரியாரே, அப்போது எல்லாம் நாங்கள் எங்கள் முகங்களின் அழகிய பகுதியையே காண்பித்துக் கொண்டு இருந்தோம். 'பெட்டர் சைட் ஒவ் த பேஸ்' இந்த இங்கிலீசு பழமொழி எல்லாம் ஐந்து அறிவு படைத்த உனக்கு எங்கே புரியப்போகுது?" என்று கூறிவிட்டு போய்க் கொண்டு இருந்தார் பண்டிதர்.

நரி பசியில் கண்கள் செருக அவரையே வெறுத்து பார்த்து கொண்டு நின்றது. "ஆண்டவா அடுத்த பிறவியிலும் நான் ஒரு மிருகமாகவே பிறந்து விடவேண்டும்."

---

# பொருத்தம்

இப்போ எல்லாமே வெளிநாடுதான்! ஒரு மாப்பிள்ளை பார்க்க வேண்டுமா? அதுவும் வெளிநாடு என்றால்தான் திறம்! வெளிநாட்டு மாப்பிள்ளைமார் பற்றி எத்தனை எத்தனை கதைகள்தான் அடிபடுகின்றன. அனுபவித்து துன்பப்பட்ட பெண்களே, 'சகோதரிகளே ஏமாறாதீர்கள்' என்று புத்தகம்கூட அடித்து வெளியிட்டார்கள். யார்தான் காதில் போட்டுக் கொண்டார்கள்.

கௌரியின் விவாகம் பல தடங்கல்களுக்கு உள்ளாகி காலதாமதமாகிக் கொண்டிருந்தது.

பக்கத்து வீட்டுக்கு வாடகைக்கு குடியிருக்க வந்த ஜெயந்தியும் அவளது கணவனும் வந்து மூன்றுமாத காலம்கூட ஆகவில்லை. கௌரிக்கும் ஜெயந்திக்கும் இடையில் வலுவானதொரு நட்பு உருவாகியது.

கௌரி அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போய் உதவி ஒத்தாசைகள் புரிந்து வந்தாள்.

"ஜெயந்தி அக்கா... என்ன புதிதாக தொலைக்காட்சி பெட்டியொன்று!"

"ஓம் கௌரி. இது எனது அண்ணன் முறையான ஒருத்தர் அன்பளிப்புச் செய்திருக்கிறார். வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறார். பெண்பார்க்கும் படலம் நடக்கின்றது. கலியாணம் முடிந்தால் பெண்ணையும் அழைத்துக் கொண்டு திரும்பப் போய் விடுவார்."

கௌரியின் மனதில் பற்பல கற்பனைகள் வண்ணத்துப் பூச்சியென சிறகடித்தன. இதயத்தில் பெண்மையின் மென்மையான உணர்வுகள் பூத்துக் குலுங்கின.

ஜெயந்தி கூறிய சேதியை கதையோடு கதையாக பெற்றோரின் காதில் போட்டு வைத்தாள் கௌரி.

ஜெயந்தி ஊடாக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. ஜாதகப் பொருத்தம்.. சீதனம் எல்லாமே சரிவந்துவிட்டன.

பெண் பார்க்கும் படலமும் விமரிசையாக நடந்தது.

சங்கரின் கம்பீரமான தோற்றத்திற்கு கௌரியின் அழகும் மிடுக்கும் குறைந்ததல்ல என்பதை அவனது பெற்றோர்களும் ஏற்றுக் கொள்ளவே, அடுத்த கட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

சங்கரும் கௌரியும் தனியே சந்தித்து கருத்துப் பரிமாற சந்தர்ப்பம் தரப்பட்டது...

"கௌரி... உங்களுடைய அழகும் அடக்கமும் எனக்கு நன்றாகப் பிடித்திருக்கின்றது."

கௌரியின் மனதில் பல்லாயிரம் வர்ண மத்தாப்புக்கள் ஒளிவிட்டு பூத்து பிரகாசித்தன..

"நீங்கள் இல்லாவிட்டால் எனக்கு இந்த வாழ்க்கையே தேவையில்லை என்று உங்களைக் கண்டவுடனேயே தீர்மானித்துவிட்டேன்."-கௌரியும் பதிலிறுத்தாள்.

சங்கருடைய மனம் நிறைந்த ஒரு பெண் மட்டுமல்ல ஆண்கூட புகழ்ச்சிக்கு மயங்குகின்றான்...

"என்றாலும் கௌரி.. வாழ்க்கை என்பது இலகுவானதல்ல. பல மேடு பள்ளங்களை உடையது. பொறுமை... விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை... மன்னிக்கும் சுபாவம்.. எந்தக் கஷ்டம் வந்தாலும் எதிர்



**திருமலை. வீ.என்.சந்திரகாந்தி**

நீச்சல் போடும் மனத் தைரியம்..."

சங்கர் கூறிக் கொண்டே போனான். கௌரி இடைமறித்தாள்... "இதெல்லாம் சரியான வயது.. பராயம் வராதவர்கள் சந்திக்க வேண்டிய விடயங்கள். விவாகத்துக்குரிய பராயத்துக்கு வந்துவிட்ட எங்களுக்கு இவையெல்லாம் புரியாமல் இருக்குமா?"

கௌரி கூறுவதும் மிக மிகச் சரியென்றே சங்கருக்குப் பட்டது.

"உம்முடைய கருத்தை நான் பாராட்டுறன் கௌரி. ஆனால் மறுபக்கத்தில் மிக மிக இளவயதினள் ஒருத்தி தான் கடந்து வந்த குறுகிய வாழ்க்கைப் பயணத்தில் ஆபத்துக்களையும் சோதனைகளையும் சந்தித்திருக்கக்கூடிய சந்தர்ப்பம் மிக மிகக் குறைவு. ஆனால் உமது வயது முதிர்ச்சிக்கு நீர் பல அனுபவங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் முகம் கொடுத்திருக்க வேண்டி ஏற்பட்டிருக்கலாம். அப்படியான சம்பவங்கள் எதுவும் எமது எதிர்கால வாழ்வுக்கு இடையூறாக வரும் என்று நீர் நினைத்தால் எனக்கு இப்போதே சொல்லிவிடலாம்."

கௌரி கால் பெருவிரலால் தரையைக் கீறினாள்.

"அப்படியான அனுபவங்களோ சோதனைகளோ எனக்கு ஏற்படவில்லை." சங்கரின் மனம் இந்த பதிலால் குளிர்ந்தது.

"உண்மையைச் சொல்லப் போனால் கௌரி... உமது அழகுக்காக என்ன விலை வேண்டுமாயினும் கொடுக்கலாம்.

நானும் நீரும் ஒன்று சேர்வதற்கு தடையென எனது பெற்றோர் எண்ணக்கூடிய காரணிகள் எதுவும் இருந்தால்கூட நான் அவற்றை மறைத்தாயினும் உம்மை அடைந்தே தீருவேன்."

ஒரு முத்தப் பரிமாறலுடன் அவர்கள் பிரிந்தார்கள்-மீண்டும் ஒன்று சேர்வதற்காக.

ஒரு சில வாரங்களிலேயே சங்கர் கௌரி விவாகம் மிகவும் சிறப்புற நடைபெற்றது.

ஜெயந்தி முன்னின்றுழைத்தாள். சங்கர் கௌரிக்கான படுக்கையறை அலங்காரங்கள் கூட அவளது மேற்பார்வையில் அழகுற அமைக்கப்பட்டது.

வாழ்க்கையின் சுவாரசியமானதும் இன்பமூட்டுவதுமான அத்தியாயங்களை தொடக்கி வைப்பதற்காக சங்கரும் கௌரியும் மீண்டும் ஒருவரையொருவர் தனியறையில் எதிர்கொண்டனர்.

"கௌரி.. உம்மை நான் எப்படியாவது மனைவியாக அடைய வேண்டும் என்ற ஆசையில் நான் அன்று உம்மிடம் ஒரு உண்மையை மறைத்துவிட்டேன். இப்போதாகிலும் நான் அந்த உண்மையை கூறிவிட வேண்டும் என்று எனது மனச்சாட்சி உறுத்துகின்றது. நான் வெளிநாட்டு மாப்பிள்ளை இல்லை கௌரி."

ஜெயந்திக்கு எதிர்பாராத அதிர்ச்சி. சாதாரணமாக ஆண்கள் பல பெண்களுடனும் பலவிதமாக பழகி இருப்பார்கள். அதை தனது மனைவியிடம் மறைக்கவும் தான் செய்வார்கள். ஆனால் இப்படியொரு குண்டு வந்துவிழும் என்று அவள் கருதியிருக்கவில்லை.

"அப்ப ஜெயந்தி அக்கா சொன்னது...."

"நான் வெளிநாடு போக வேண்டும் என முடிவெடுத்து தலைநகரில் தங்கியிருந்து வருடக் கணக்கில் முயற்சிகள் செய்தது உண்மை. ஆனால் எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஊரில் பலர் நான் வெளிநாடு சென்றுவிட்டதாகவே நம்பினார்கள். ஜெயந்தியும் அப்படித்தான் எண்ணியிருந்தாள். ஜெயந்தி வாயிலாக உம்மைப் பற்றி அறிந்த பெற்றோர் எனக்கு தகவல் தந்தார்கள். நான் செலவைப் பார்க்காமல் தொலைக்காட்சிப் பெட்டியொன்றை விலைகொடுத்து வாங்கி ஜெயந்திக்கு அன்பளிப்புச் செய்ததுடன் விவாக நிமித்தமாக நான் நாடு திரும்பி விட்டதாக தகவல் கொடுத்தேன். அவளும் அதனை முற்று முழுதாக நம்பினாள்.

பெண்களுக்கு கதையைக் கொடுத்தால் அவர்களுடைய வாய் சும்மா கிடக்காது என்று கணக்குப் பண்ணி அப்படிச் செய்தேன். நான் நினைத்தபடியே எல்லாம் நடந்தது. நான் வெளிநாடு போகும் தீர்மானத்திலேயே இன்னும் இருப்பதால் இப்படிச் செய்தது உம்மை ஏமாற்றியதாகாது என்று நம்பினேன். இந்த விடயத்தில் நீர் என்னை மன்னிக்க வேண்டும் கௌரி."

கௌரி தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்யவும் புரிந்து கொள்ளவும் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இதனைக் கூறாது தன்னை அவனது மனைவியாக்கிக் கொள்ளுமளவிற்கு அவன் தன்மேல் கொண்ட ஆசையையும் ஆர்வத்தையும் இரசித்த கௌரி...

"இதெல்லாம் பெரிய விஷயமே அல்ல... நான் ஐந்து வருட காலம் அரபு நாடொன்றில் வீட்டுப் பணிப் பெண்ணாக பணி புரிந்து பல இலட்சக்கணக்கில் பணம் சேமித்துள்ளேன். நாம் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடாத்த அந்தப் பணமே போதுமானது சங்கர்"

கௌரி கூறவும்... சங்கருக்கு பஞ்சணையே சுழன்றது! ■

## மர்மத்தீவு 18

### சங்கர்லால் துப்பறியும்

**ஷா**வும் மலர்ச்சோலையும் இறங்கினார்கள். கைப் பெட்டியுடன் ஷா முன்னால் நடந்தார். அவர் பின்னால் கொஞ்சம் தள்ளியபடி நடந்து சென்றாள் மலர்ச்சோலை.

சர்தார்ஜி, ஜீப்பிலிருந்து இறங்கி எவருக்கோ காத்திருப்பதைப் போல் காத்திருந்தார். அவர் தன் இடுப்பிலிருந்த கத்தி பாதுகாப்புடன் இருக்கிறதா என்று அடிக்கடி பார்த்துக்கொண்டார். அவர் அந்த இடத்தில் செய்ய வேண்டிய வேலை ஒன்று இருந்தது.

ஜெட்பர்ட் இருந்த இடத்தை நோக்கி மறைந்து மறைந்து, பதுங்கிப் பதுங்கிச் சென்றார் ஷா. மலர்ச்சோலையும் அவர் பின்னாலேயே பதுங்கிப் பதுங்கி சென்றாள். இருவரும் சுற்றி வளைத்துக்கொண்டு வேறு பக்கமாகச் சென்றார்கள். குறுக்கு வழியில் அவர்கள் போகவில்லை. விமானம் வெட்ட வெளியில் நின்றிருந்ததால், அதில் உட்கார்ந்திருந்த யோகோ டானியோ வெளியில் காவலுக்காக இருந்த மாணிக்கமோ அவர்களைப் பார்த்து விடக்கூடாதே என்று எண்ணினார் ஷா.

ஷாவும் மலர்ச்சோலையும் இன்னும் கொஞ்சம் தொலைவுவரையில்தான் மரம் செடி கொடிகளின் மறைவில் பதுங்கிப் போக முடியும். பிறகு அவர்கள் வெட்ட வெளியில் வந்துதான் நடந்தாக வேண்டும்.

வெட்ட வெளியின் எல்லையை அடைந்ததும் ஒரு பாறையின் மறைவில் இருவரும் பதுங்கினார்கள். இப்போது அவர்களால் மாணிக்கத்தையும், விமானத்தில் உட்கார்ந்திருந்த யோகோ டானியையும் தெளிவாகப் பார்க்கமுடிந்தது.

துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொண்டு மிக முன்னேற்பாட்டுடன் இருந்தார் ஷா.

"விமானத்தில் இருக்கும் பெண் மிகவும் அழகாக இருக்கிறாளே? ஜப்பான் காரியைப்போல் இருக்கிறாளே!" என்றாள் மலர்ச்சோலை.

"ஆமாம். ஜப்பான்காரிதான். சங்கர்லாலுக்கு ஜப்பானிய அரசு கொடுத்த விமானம் இது. இந்த விமானத்தை ஒட்டிச் செல்ல அவளை அனுப்பி இருக்கிறார்கள். அவளை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் சங்கர்லால்."

"அந்த இளைஞன் யார்?" என்று மலர்ச்சோலை கேட்டாள்.

"மாணிக்கம் என்று ஓர் உதவியாளன் சங்கர்லாலுக்கு உண்டு. அவன்தான் இவன் என்று எண்ணுகிறேன். சங்கர்லாலுடன் மர்மத்தீவில் முதலில் இவர்களும்தாம் புக



முயன்றார்கள்."

"இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? மாணிக்கத்தைச் சுடப்போகிறீர்களா?" என்று கேட்டாள் மலர்ச்சோலை.

"அவனைச் சுட்டால் யோகோ டானி விழித்துக் கொள்வாள். கொஞ்சம் பொறு."

"அவள் பெயர் யோகோ டானியா?"

"ஆமாம். பத்திரிகையில் புகைப் படத்துடன் செய்தி வந்ததே. பார்க்கவில்லையா?" என்றார் ஷா.

பிறகு தொடர்ந்து சொன்னார்: "எனக்கோ உனக்கோ விமானம் ஒட்டத் தெரியாது. இந்த விமானத்தில் நாம் தப்பிப் போகவேண்டும் என்றால், அந்த ஜப்பான் காரிதான் ஒட்டவேண்டும். ஆகையால் அவளுக்கு ஒன்றும் ஆபத்து ஏற்படக்கூடாது. அப்துல்லா அடிபடாமல் தப்பியிருந்தால் நமக்குப் பிரச்சனை இருந்திருக்காது" என்றார் ஷா.

மாணிக்கத்தைச் சுடவேண்டும் என்று ஷாவின் கை துடித்தது. வெட்ட வெளியில் உலாவிக் கொண்டிருந்த அவனை எந்த விநாடியும் சுட்டுவிடலாம். ஆனால் அதன் பிறகு அவர்கள் விமானத்தை நோக்கி ஒடுவதற்குள் யோகோ டானி விழித்துக் கொண்டு விமானத்தையே கிளப்பிக் கொண்டு போய்விடலாம், அல்லது விமானத்திலிருந்து அவள் திருப்பிச் சுடலாம். ஆகையால் ஷா மிகப் பொறுமையுடன் காத்திருந்தார்.

விமானம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு மிக அருகில் பாறையின் மறைவில் இரண்டு பேர் ஒளிந்திருக்கிறார்கள். அவர்கள் கண்கள் பாறையின் இடுக்கில் தங்களைக் கவனிக்கின்றன என்பதை மாணிக்கம் கொஞ்சமும் உணரவில்லை.

அவன் எண்ணமெல்லாம் தன்னந் தனியராகப் போயிருக்கும் சங்கர்லாலைப் பற்றியே இருந்தது. இந்த இடத்தில் அவருக்கு ஆபத்து ஏதும் ஏற்படக்கூடாதே என்று அஞ்சினான் அவன். இப்படி ஓர் அச்சம் அவன் மனத்தில் இதுவரையில் எழுந்ததில்லை. அவனையும் அறியாமல் அவன் உள்ளுணர்வு அச்சம் மிகக் கொண்டது.

இந்த நேரத்தில் தான் ஷா எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த ஓசை கேட்டது.

திடீரென்று பல மிஷின் துப்பாக்கிகள் ஒரே நேரத்தில் இயங்கின.

கடுமையான போர்க்களத்தில் போரிடுவோர் பலர் ஒருவரை நேருக்கு நேர் பார்த்துச் சுடும் போது கையிலிருக்கும் மிஷின் துப்பாக்கிகளால் வெறிபிடித்தவர்களைப் போல் சுடுவார்களே, அப்படிச் சுட்டுத் தள்ளும் ஓசை கேட்டது.

மிஷின் துப்பாக்கியின் ஓசை மலைகளில் மோதி ஒலி கொடுத்தது. பிறகு-

அமைதி!

"சங்கர்லால் ஒழிந்திருப்பார். இனி எவராலும் அவரைக் காப்பாற்ற முடியாது. சிங்கத்தின் குகைக்குள்ளே போய்ச் சிங்கத்தை நேருக்கு நேர் பார்க்க முயன்றால் இந்த முடிவுதான்." என்று சிரித்தபடி மலர்ச்சோலையிடம் சொன்னார் ஷா.

ஒரே நேரத்தில் பல மிஷின் துப்பாக்கிகளின் ஓசை கேட்டதும் மாணிக்கம் அச்சத்துடன் நின்றான். அவன் பார்வை யோகோடானியின் பக்கம் சென்றது. அவளும் மிக அச்சத்துடன் பார்த்தாள்.

ஏதோ நடக்காதது நடந்து விட்டதைப் போல் இருவரும் அஞ்சினார்கள்.

"ஓடிப்போய்ப் பார். சங்கர்லாலுக்கு ஏதாவது நேர்ந்து விட்டதா என்ன?" என்று கேட்பதைப்போல் பார்த்தாள் யோகோ டானி.

"யோகோ டானி, விமானத்திலிருந்து இறங்காதே. நான் விரைவில் திரும்பி வருகிறேன். சங்கர்லாலுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று மனம் குழம்புகிறது. இதுவரையில் இப்படி ஒரு குழப்பம் எனக்கு ஏற்பட்டதே இல்லை," என்று சொல்லிவிட்டு, அவள் பதிலுக்குக் காத்திருக்காமல் ஒடினான்.

மலைகளைக் கடந்து ஓடினால் விரைந்து போக முடியாது என்று அவன் மலையடிவாரத்திலேயே ஓடினான்.

புயலைப் போல் துடிப்புடன் அவன் ஓடியதைச் சங்கர்லால் பார்த்திருக்கவேண்டுமே.

மிஷின் துப்பாக்கிகள் வெடித்த ஓசையைக் கேட்டதும் அச்சம் மிகக் கொண்ட யோகோ டானிக்கும் இப்போது இறங்கி ஓடவேண்டும்போலத்தான் இருந்தது. விமானத்தை விட்டுப் போக வேண்டாம் என்று சங்கர்லால் சொல்லி விட்டுப்போனது அவளை அப்படியே கட்டிப்போட்டுவிட்டது.

பற்றாக்குறைக்கு மாணிக்கம் வேறு அவளை விமானத்திலேயே இருக்கும்படி சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

எப்போதாவது யோகோ டானி சிகரெட் பிடிப்பாள். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் போது அவளுக்குச் சிகரெட் பிடிக்கத் தோன்றும். மிகவும் அச்சமாக இருக்கும்போதும், மிகவும் துன்பமாக இகுக்கும்போதும் அவளுக்குச் சிகரெட் பிடிக்கத் தோன்றும். ஆனால் சங்கர்லால்முன் அவள் சிகரெட் பிடிப்பதில்லை. இத்தனை நாட்களும் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு பேசாமல் இருந்தாள்.

அச்சம் மிகுதியாக ஏற்பட்டபோது இப்போது அவளுக்கு சிகரெட் பிடிக்க வேண்டும்போல் இருந்தது. அவள் கைப்பையை எடுத்துச் சிகரெட் பெட்டியை வெளியில் எடுத்தாள். ஒரு சிகரெட்டை எடுத்து வாயில் வைத்து அதைப் பற்ற வைக்க சிகரெட் லைட்டரைத் தேடியபோது லைட்டர் தட்டுப்படவில்லை. அவள் கைப்பையைத் துழாவி கொண்டிருந்தபோது,

முன் பின் தெரியாத ஒரு கை, சிகரெட் லைட்டரை நீட்டி அவள் சிகரெட்டைப் பற்ற வைத்தது.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

ஷா, ஒருகையில் லைட்டருடனும் மற்றொரு கையில் துப்பாக்கியுடனும் நின்றிருந்தார். அவர் பக்கத்தில் மலர்ச்சோலை நின்றிருந்தாள். துப்பாக்கி அவள் கழுத்தைக் குறிபார்த்தது.

அவள் திடுக்கிட்டுச் சிகரெட்டை விரல்களின் இடுக்கில் பிடித்தபடி, "யார் நீங்கள்? ஷாவா!" என்றாள் யோகோ டானி.

"ஆமாம் யோகோ டானி. நண்பனுக்கு நண்பன். பகைவனுக்குப் பகைவன். உனக்கு ஒரு கை சிகரெட்டைப் பற்றவைத்தது. நீ வாலை ஆட்டினால் மற்றொரு கை துப்பாக்கியால் உன்னைச் சுடும்."

"எனக்கு வாலே கிடையாது! இந்தப் பெண் யார், உங்கள்..."

"காதலி, தாலி கட்டாத மனைவி. நாங்கள் இருவரும் களிப்பாக வெளிநாடு புறப்படத் திட்டம் போட்டிருந்தோம். எங்கள் விமானம் விபத்தில் நொறுங்கிவிட்டது. நல்ல வேளையாக இதை எப்படியோ சங்கர்லால் தெரிந்து கொண்டு, இந்த விமானத்தை எங்களுக்காகவே கொண்டு வந்திருக்கிறார். நீதான் விமானத்தை ஒட்ட வேண்டும். நாங்கள் அமைதியுடன் உட்கார்ந்திருப்போம்."

யோகோ டானிக்குத் துணிவு வந்து விட்டது.

"அப்படியா மிக்க மகிழ்ச்சி. நீங்கள் எங்கே போக வேண்டும்?" என்று கேட்டாள் யோகோ டானி.

"போகும் இடத்தை இன்னும் நாங்கள் முடிவு செய்யவில்லை. சிங்கப்பூர், ஹாங்காங், டோக்கியோ, தைவான் போகலாம் என்று ஆசை. ஒவ்வோர் ஊராகப் பார்த்துக் கொண்டே போவது. எந்த ஊர் அழகாக இருக்கிறதோ அங்கே இறங்கிக் கொள்கிறோம். விபத்து ஏற்படாமல் ஒட்டு. இல்லாவிட்டால் விபத்து ஏற்படுவதற்குள், நீ இறப்பது உறுதி!" என்று சொல்லித் துப்பாக்கியால் அவள் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டினார் ஷா.

யோகோ டானி, ஒரு சில விநாடிகள் பேசவில்லை.

அவள் சிகரெட் புகையை இழுத்து விட்டபடி "துப்பாக்கி முனையில் எனக்கு விமானம் ஒட்டிப் பழக்கம் இல்லை. ஆகையால் துப்பாக்கியை உள்ளே வையுங்கள்" என்றாள் யோகோ டானி.

"இப்போது பழகிக்கொள். விமானப்

**தமிழ்வாணன்**

புறப்பட்டதும், உன்மீது எனக்கு நம்பிக்கை ஏற்பட்டதும் துப்பாக்கியை உள்ளே வைத்து விடுகிறேன்" என்றார் ஷா.

இப்போது ஷாவும் மலர்சோலையும் அவள் பின்னால் வாய்ப்பாக உட்கார்ந்து கொண்டார்கள்.

"விமானத்துக்கு உரியவர் சங்கர்லால். அவர் வந்ததும் புறப்படலாமே!" என்றாள் யோகோ டானி.

"சங்கர்லால் வரமாட்டார்!" என்றார் ஷா.

பிறகு தொடர்ந்தார்: "மிஷின் துப்பாக்கிகளின் வேட்டுகள் உன் காதில் விழவில்லையா? அவர் உடலில் குறைந்தது இறுநூறு துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருக்கும்!"

யோகோ டானி, சினத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

ஷா சிரித்தபடி உட்கார்த்திருந்தார்.

"என்ன இருந்தாலும் சங்கர்லால் இவ்வளவு துணிவுடன் தனியாக இங்கு என்னைத் தேடிவரக்கூடாது. என்றாவது ஒருநாள் இறக்கவேண்டியவர் இன்று இறந்து விட்டார்! அவ்வளவுதான்!" என்றார் ஷா.

"அப்படியானால் மாணிக்கம் வரட்டும்."

"அவனும் வரமாட்டான்."

"மாணிக்கத்தைச் சுட்ட ஓசை கேட்கவில்லையே!" என்றாள் யோகோ டானி.

"துப்பாக்கிக் குண்டுகளுக்கா பஞ்சம்! ஆகையால் மாணிக்கத்தைச் சுட வீணாக ஒரு குண்டைப் பாழாக்குவானேன் என்று எண்ணினேன். என் ஜீப்பை ஒட்டி வந்த சர்தார்ஜி ஒருவர் மாணிக்கத்துக்காகக் காத்திருக்கிறார். அவர், கத்தியால் அவனைக் குத்திக் கொன்றிருப்பார்!" என்றார் ஷா.


யோகோ டானியின் முகம் இப்போது மிகவும் அச்சத்துடன் மாறியது.

"புறப்படு! விமானத்தைக்கிளப்பு. இனி மேலும் நேரத்தை வீணாக்குவதை நான் விரும்பவில்லை" என்றார் ஷா.

தொடரும்...

## எயிட்ஸ் நோயை திர்த்த பிஞ்சுக் குரல்

**சி**லர் நூறு வருடங்கள் வாழ்ந்து சாதிக்க முடியாததை வேறு சிலர் பத்து வருடத்தில் சாதித்து விடுகிறார்கள். வயதோ தனது வாழ்வியல் நிலையோ ஒரு முட்டுக் கட்டையாக இல்லாமல்... இன்னும் சொல்லப் போனால் தன்னுடைய பரிதாபத்தினால் ஏனையவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை கொடுத்து விட்டு மறைந்த ஒரு சின்னஞ் சிறுவன் பற்றிய செய்தியிது.



தென்னாபிரிக்காவில் மட்டுமல்ல உலகம் முழுவதிலும் உள்ள எயிட்ஸ் நோயாளிகள் அதனுடன் தொடர்புடைய ஆராய்ச்சியாளர்கள் என்று யாரைக் கேட்டாலும் கொசி ஜோன்ஸன் என்று பெயரை அறியாதிருக்க மாட்டார்கள்.

கொசி ஜோன்ஸன் ஒரு தென்னாபிரிக்கக் கறுப்பினச்சிறுவன். எயிட்ஸ் நோயாளி. 12 வயதுவரை மட்டுமே வாழ்ந்த இவன் சமீபத்தில் மரணமானான்.

இவனது அந்திம காலத்தில் எயிட்ஸ் நோய்க்கு எதிரான போராட்டத்தின் சின்னமாக இவனை ஊடகங்கள் பாராட்டின. வாழ்க்கைக்காக, போராடிய ஒரு வீரனாக இவனை வர்ணித்தார் நெல்சன் மண்டேலா.

இந்தச் சிறுவனின் இயற்பெயர் சொலானி. இவனது தாய் பிறப்பு முறையிலேயே இவனுக்கு எயிட்ஸ் நோயை பரிசளித்துவிட்டு, இரண்டே வருடங்கள் வாழ்ந்து இறந்த போனாள். அதன் பின்னர்



ஹமில ஜோன்ஸன் என்ற வெள்ளையினப் பெண்மணி இவனை தத்தெடுத்தார். இதற்கு வெள்ளையர்கள் ஆரம்பத்தில் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

"எனது வீட்டில் ஒரு கறுப்பின எயிட்ஸ் நோயாளி வளர்வான் என்று நாம் எதிர் பார்க்கவேயில்லை. அதிஷ்ட வசமாக நாம்



அவனை சுவீகாரம் எடுத்தோம்" என்று உணர்ச்சி பொங்கக் கூறுகிறார் அந்த செவிலித்தாய்

"சிலமாதங்கள் மாத்திரம்தான் கொசியின் உயிருக்கு உத்தரவாதமளித்தார்கள் ஆனால் அவன் எங்களுடன் 12 வயது வரை வாழ்ந்தான்" என்று கூறுகிறார் ஹமில ஜோன்ஸன்.

மரணிக்கும் வரையில் கொசியின் உரிமைகளுக்காகப் போராடிய இந்த வெள்ளையின பெண்மணியின் செயற்பாடுகளும் சிறுவனின் நடவடிக்கைகளும் ஒருங்கே சேர்ந்து ஆபிரிக்காவில் எயிட்ஸ் தொடர்பான சமூக அபிப்பிராயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கு வழிவகுத்தது.

கொசிக்கு 5 வயதாகியபோது அவனை ஜோஹென்னஸ் பேர்க்கில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் சேர்க்க விண்ணப்பித்தார் திருமதி ஜோன்ஸன். பாடசாலை நிருவாகம் முதலில் இவரது விண்ணப்பத்தை நிராகரித்தது. அங்கு கல்வி பயிலும் ஏனைய மாணாக்கரின் பெற்றோர் கொசி இந்தப் பாடசாலையில் இணைவதை விரும்பவில்லை என காரணம் கூறப்பட்டது. ஆனால் அந்த சிறுவன் இறுதியில் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

திருமதி. ஜோன்சனின் இல்லத்தில் கொசி அனுமதிக்கப்பட்டபோதிலும் அவரது குடும்பத்தினர் அவன் மீது அன்பு செலுத்தத் தொடங்கியபோதிலும், அவனது கறுப்பு தோல் அவனை ஒரு வெள்ளை இனப் பெண்ணின் கறுப்பு சுவீகார புத்திரனாகவே வெளிப்படுத்தியது.

இவனுக்கு தனது பிறப்பு மொழியான ஸூலு மொழியை பேசத்தெரியாத காரணத்தினால் அவனது கறுப்பு இன மக்களுடன் அவன் இணைய முடியாமல் போனது.

கொசியைப் போல் எயிட்சினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் அவர்களது தாய்மாருக்கும் பராமரிப்பு இல்லங்களை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு தேவையான நிதி சேகரிப்பு மேடைகளில் கொசியைப் பயன்படுத்திய திருமதி ஜோன்சன் மீண்டும் பிரச்சனைகளைச் சந்திக்க நேர்ந்தது.

கொசியின் கறுப்பு இன உறவினர்கள் இதனால் விசனம் அடைந்தனர். நிதிலாபத்துக்காக கொசியை திருமதி ஜோன்சன் துஷ்பிரயோகம் செய்கிறார் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

இந்த நிதி சேகரிப்பு நடவடிக்கைகளுக்காக இவர்கள் இருவரும் நியூயோர்க் போனபோது, உலகின் கவனம் முழுமையாக இவர்கள்மீது திரும்பியது.

டேர்பன் நகரில் நடைபெற்ற சர்வதேச எயிட்ஸ் மாநாட்டில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட இந்த சிறுவன் ஆற்றிய உரையும் உலக பிரசித்தமானது.

உலகில் மிகவும் வேகமாக எயிட்ஸ் நோய் பரவும் நாடான தென்னாபிரிக்காவின் அரசாங்கத்தை கொசி இந்த மாநாட்டில் நேரடியாகவே தாக்கிப்பேசினான்..

பார்வையாளர்கள் மத்தியில் சென்ற கொசி, அங்கு கூடியிருந்தவர்களையும் உலகெங்கும் உள்ள மக்களையும் பார்த்து "எயிட்ஸ் நோயாளிகளை அங்கீகரியுங்கள்" என்று கோரிக்கை விடுத்தான்...

தென்னாபிரிக்காவில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்களுக்கு எயிட்ஸ் எதிர்ப்பு மாத்திரைகளை வழங்குவதற்காக தென்னாபிரிக்க ஜனாதிபதி தாபோ எம்பெக்கியை அவன் விமர்சித்தான்...

அவனது உரை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஜனாதிபதி தாபோ மாநாட்டில் இருந்து வெளிநடப்பு செய்தார். ஆனால் கூட்டம் அவனது பேச்சுக்கே முக்கியத்துவம் கொடுத்தது.

"எனது தாயார் திருமதி ஜோன்சன் அனுமதித்தால் நான் வளர்ந்த பிறகு இந்த விடயம் தொடர்பாக மேலும் மேலும்விரிவுரைகளை வழங்குவேன்"

"இது தொடர்பாக பயம் கொள்வதை தடுப்பதற்கும் எயிட்ஸ் நோயாளிகளை பராமரிப்பதற்கும் அவர்களுக்கு மரியாதை வழங்குவதற்கும் கற்றுத் தரவேண்டும். கைகுலுக்குவதன் மூலமோ, முத்தமிடுவதன் மூலமோ, இருமுவதன் மூலமோ எயிட்ஸ் நோய் தொற்றாது. நாங்களும் மனிதர்களே" என்று கொசி கூறினான்.

"எங்களால் நடக்க முடியும், எங்களால் பேச முடியும், எங்களுக்கும் கைகளுண்டு, ஏனையவர்கள் மாதிரி எங்களுக்கும் கால்களுண்டு, நாம் எல்லாரும் ஒன்றே" என்றான்.

ஆனால் அவனால் வளர முடியவில்லை. 6 மாதங்களின் பின்னர் மூளையில் ஏற்பட்ட பாதிப்புகளால் அவன் செயற்பட முடியாமல் போனான்.

அவன் இறந்தபோது அவனது வீட்டுக்கு அஞ்சலி செலுத்த வந்தவர்களில் தென்னாபிரிக்க உதைபந்தாட்டக் குழுத் தலைவர் லூகாஸ் ரடீபும் ஒருவர்.

தென்னாபிரிக்க ஜனாதிபதி பெறியும் அவனது இறுதியஞ்சலிக்கு செல்ல வேண்டும் என தொடர்பு சாதனங்கள் வலியுறுத்தின. இறுதியில் அவர் தனது மனைவி ஷலீலாவை அஞ்சலிக்கு அனுப்பி வைத்தார்.

இந்த அப்பாவி சிறுவனின் மரணம் எவரும் எதிர்பாராத அளவுக்கு எயிட்ஸ் நோய்க்கு எதிராக தென்னாபிரிக்கர்களை இணைத்துள்ளது.

# எஸ்.டி.எஸ். தொடர் 64

# முந்திவந்தோரும் பிந்திவந்தோரும்....!

## இரா.பத்மநாதன்

தந்தை செல்வாவின் தலைமையில் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்திலும், வட மாகாணத்திலுள்ள வேறுபல பகுதிகளிலும் கடும் எதிர்ப்பையே ஆரம்பத்தில் சந்தித்தது. திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களுக்கு அப்போதிருந்த செல்வாக்கு தமிழரசுக்கட்சியை வளர வொட்டாமல் தடுத்தது.

வவுனியாவில் திரு.சி.சுந்தரலிங்கம் தனது செல்வாக்கைப் பிரயோகித்து, தமிழரசுக் கட்சியைத் தலையெடுக்க விடாமல் பார்த்துக் கொண்டார். இருப்பினும் பல இளைஞர்கள் கட்சியின் கொள்கைகளில் பற்றுக் கொண்டு, பல இன்னல்கள் மத்தியில் கட்சியை வளர்த்தனர். திருகோணமலையிலும் இதே நிலைதான். இருப்பினும் அங்கு சிங்கள ஆதிக்கம் தலையெடுக்க ஆரம்பித்தமையினால், அதன் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு அனுசரணையாக இருந்தனர்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை, திரு.இராசதுரையை வைத்தே தமிழரசுக் கட்சியை வளர்த்தெடுக்க தந்தை செல்வா எடுத்த முடிவு பலனளிக்கவே செய்தது. ஆனால் இதிலும் எண்ணற்ற இடையூறுகள் தோன்றவே செய்தன.


மட்டக்களப்பில் தொழில் ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் வந்து குடியேறிய யாழ்ப்பாணத்தவர்கள் மட்டக்களப்பாரை 'தங்கள் இனத்தவர்களே' என்று கருதவே இல்லை. காணி, தோட்டம், துரவு, வீடு, வயல் ஆகிய வசதிகளைத் தேடி வசதியாக வாழ்ந்த யாழ்ப்பாணத்தவர்கள் தங்கள் குடும்பத்தில் வரன் தேடுவதற்கும் யாழ்ப்பாணத்துக்கே முன்னுரிமை கொடுத்தனர்.

அரச பணியில் உயர் பதவியிலிருப்பவர்கள் தங்கள் பிரிவில் சாதாரண ஒரு தொழிலுக்கு தற்காலிகமாக ஒருவரை நியமிக்கவேண்டிய நிலை ஏற்பட்டாலும், அதனையும் மட்டக்களப்பில் பிறந்த ஒருவருக்குக் கொடுக்க மாட்டார்கள். அப்பணிக்கும் எப்படியாவது ஒரு யாழ்ப்பாணத்தவரைத் தேடிப்பிடித்து விடுவார்கள்.

வர்த்தகத்திலீடுபட்ட யாழ்ப்பாணத்தவர்கள் தங்கள் கடைகளில் விற்பனை உதவியாளர் பதவியாக இருந்தாலும், அதற்கென ஒரு யாழ்ப்பாணத்து இளைஞரைத் தருவித்துக் கொடுத்துவிடுவார்கள்.

மட்டக்களப்பில் விமான நிலையம் அமைக்கப்பட்ட சமயத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவம் பற்றி இங்கு குறிப்பிடுவது மேற்படி கூற்றுக்கு ஓர் எடுத்துக் காட்டாகவேயிருக்கும்.

மட்டக்களப்பில் இருந்த தொழிற் திணைக்களத்திலும் உயர் பதவிகளிலும் லிகிதர் பதவிகளிலும் யாழ்ப்பாணத்தவர்களே இருந்தனர். விமான நிலையத்துடன் தொடர்புடைய ஒரு சாதாரண பியோன் வேலை காலியாக இருந்தது. மட்டக்களப்பைச் சேர்ந்த பல இளைஞர்களும் விண்ணப்பித்திருந்தனர்.



திரு.எஸ்.சுப்பிரமணியம் (மணி)

இத்தகைய வேலைகளுக்கு தொழிற் திணைக்களம் தான் உரிய விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை வைத்து தெரிவு செய்ய வேண்டும். விண்ணப்பதாரிகள் தாங்கள் வசிக்குமிடத்தில் வீட்டில் வசிப்பதற்கான பதிவின் பிரதி இணைப்பது அவசியம்.

அப்போதெல்லாம் உணவுப் பங்கீட்டுக்காக கூப்பன் வழங்கப்படுவதுண்டு. இதற்காகவே ஒவ்வொரு வீட்டில் வசிப்பவரும் கட்டாயம் அதற்குரிய பதிவேட்டில் பதிந்திருக்க வேண்டும். தொழில் திணைக்களத்துக்கு வேலைக்கு விண்ணப்பிப்பவர்கள் வதிவிடப் பதிவின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

மட்டக்களப்பு பிரதான வீதியில் இருந்த ஒரு கடையில் யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் ஓரிரு வருடங்களுக்கு முன்னர் சமையற்காரராக யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவரப்பட்டு பதியப்பட்டிருந்தார்.

விமான நிலைய சிப்பந்திக்கான விண்ணப்பப் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றபோது, மட்டக்களப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுடன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்த இளைஞரும் அழைக்கப்பட்டிருந்தார். நேர்முகப் பரீட்சை முடிவடைந்ததும் யாழ்ப்பாண இளைஞரே அந்தப் பதவிக்கு நியமனம் பெற்றார்.

இந்தச் சம்பவம் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. ஒரு சாதாரண சிறிய வேலைக்குக்கூட மட்டக்களப்பு இளைஞர் ஒருவர் நியமிக்கப்படவில்லையே என்ற கூக்குரல் பல வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பியது. இதனைத் தொடர்ந்து அந்தப் பதவி மட்டக்களப்பு இளைஞர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது.

மட்டக்களப்பில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு எதிரான கோஷம் தலையெடுப்பதற்கு இவைபோன்ற சில சம்பவங்களே காரணமாக இருந்தன.

***மேற்படி சம்பவத்தையெல்லாம் இப்போது ஏன் நினைவு படுத்த வேண்டும். அணைந்து போய்விட்ட நெருப்புக்கு கட்டுரை ஆசிரியர் எண்ணெய் ஊற்ற முனைகிறாரே என்று தயவு செய்து எவரும் குற்றம் சுமத்தாதீர்கள். நடந்து முடிந்த சில சம்பவங்களை அறியாதவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவற்றை வெளிப்படுத்த நினைதேன்; அவ்வளவுதான்.***

இவைபோன்ற பல சம்பவங்கள் தான் மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சி தலையெடுப்பதற்கு இடையூறாக அமைந்தன.

மட்டக்களப்பில் பலதரப்பட்ட தொழில்களில் இருந்த யாழ்ப்பாணத்தவர்கள் பலர் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்வந்து குடியேறியவர்களின் வாரிசுகளாக இருந்தனர். நல்ல வசதி படைத்தவர்களாகவும் வாழ்ந்தனர். இவர்கள் தங்களை பொதுவாக மட்டக்களப்பார் என்று வெளியே கூறிக் கொள்வார்கள்.

இவர்களைத் தொடர்ந்து வர்த்தக ரீதியில் வந்து குடியேறியவர்களும் உள்ளனர். சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் முன்பு வந்து குடியேறி குடியும் குடித்தனமுமாக வாழ்ந்து வந்தவர்கள், பிந்தி வந்தவர்களைப் பார்த்து, "யாழ்ப்பாணத்தான்" என்று கூறாமல் கூறுவது வழக்கமாக இருந்து வந்தது.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியை வளர்க்கும் பொறுப்பை இராசதுரை அவர்களிடம் தந்தை செல்வா ஒப்படைத்த போதும், கட்சியிலுள்ள வேறுபல தலைவர்கள் இதற்கு முழுமனதுடன் ஒப்புதல் அளிக்க வில்லை.



**கலைவாணர் என்.எஸ்.கே.தனது நாடகக் குழுவினருடன் இலங்கை வந்திருந்தபோது கலைவாணர், திருமதி ரி.கே.மதுரம் ஆகியோருடன் என்னையும் கொழும்பிலிருந்து மலையகம் முழுவதும் தனது சொந்த பியூத் மோட்டார் வாகனத்தில் அழைத்துச் சென்ற பதுளையைச் சேர்ந்த பிரமுகர் சான்ஸி இராஜரத்தினம் அவர்கள். இப்படத்தை அனுப்பி உதவிய அன்பர் தங்கராசா அவர்களுக்கு நன்றி.**

இராசதுரை ஓர் இளைஞர். அப்போதுதான் பாடசாலையை விட்டு வெளியேறி வந்தவர் போன்ற தோற்றம். உயர் குடியில் பிறக்காத சாதாரண பாமரன். பண வசதியோ பொது மக்களிடம் செல்வாக்கோ அவரிடம் கிடையாது. படிப்பைப் பொறுத்த வரையிலும் அவர் ஒரு பட்டதாரியோ, அல்லது சட்டத்துறையைச் சேர்ந்தவரோ அல்ல. 'கனவான்' என்று பிறர் கணிப்பிடக்கூடிய அந்தஸ்தும் கிடையாது. "இந்தப் பெடியனை நம்பி தமிழரசுக் கட்சியின் பாரிய பொறுப்பினை ஒப்படைக்கலாமா?" என்று பலரும் பகிரங்கமாகவே கேட்டனர்.

தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனம் இதிலும் பொய்க்கவில்லை. இதற்குச் சான்றாக 1952ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான முஸ்தீபுகள் தலையெடுத்தன. அக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி சரியாக அறிமுகமாகவில்லை, இருப்பினும் கட்சியின் சார்பில் மட்டக்களப்புத் தொகுதியில் ஒரு வேட்பாளரை நிறுத்த கட்சி தலைமைப்பீடம் எத்தனித்தது. ஆனால் எவரும் தோதாக அமையவில்லை. "யாழ்ப்பாணத்தானுடைய கட்சியை யார் ஆதரிக்க முடியும்?" என்று ஓலம் எழுந்தது.

இறுதியில் திரு.ஆர்.பி.கதிராமர் வேட்பாளராக முன்வந்தார். தமிழரசுக் கட்சி திரு.கதிர்ராமரை கட்சியின் முழு வேட்பாளராக நிறுத்த முடியவில்லை. கட்சியின் ஆதரவு பெற்ற வேட்பாளராகவே அவர் போட்டியிட்டார்.

இக்கால கட்டத்தில்தான் மட்டக்களப்பு மைதானத்தில் திரு.கதிராமரை ஆதரித்து நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டத்தில் இராசதுரை அவர்களின் அரசியல் கன்னிப் பேச்சினை மட்டக்களப்பு மக்கள் கேட்டனர். ஏககாலத்தில் அக்கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த அனைவரும் புத்தம்புதுத் தமிழ்முதத்தைப் பருகினர். அது மட்டுமல்லாமல், திரு.இராசதுரை அவர்கள் திரு.கதிராமரையே ஆதரிக்க வேண்டும் என்பதற்கான மறுக்க முடியாத காரணங்களையும் பொதுமக்கள் முன் எடுத்துரைத்தார்.

இராசதுரை அவர்களின் அன்றையப் பேச்சு மட்டக்களப்பு மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்தது. இதனைத் தொடர்ந்தே கட்சியின் கொள்கைகளை மட்டக்களப்பு மக்கள் பூரணமாக அறியவும் பின்பற்றவும் தொடங்கினர்.

திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்களால் தொடங்கப்பட்ட பகுத்தறிவு இயக்கத்தில் இணைந்திருந்த இளைஞர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியை ஏற்றுக் கொண்டனர்.

இராசதுரை அவர்கள் அரசடிப் பாடசாலையில் படிக்கும் காலத்தில் அவர் பயனியர் ரோடின் தென்கிழக்கு மூலையிலிருந்த மோர்சாப்பிட்டியில், சோனகர் வீதியில் வாழ்ந்து வந்தார். மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் ஆரம்பத்தைப்பற்றி ஏற்கனவே குறிப்பிடும்போது திரு.பீமாக்குட்டி என்பவரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்ததை வாசகர்கள் நினைவில் கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு.பீமாக்குட்டி என்பவர் சாதாரணமாகக் கூறுவதானால், ஒருசண்டியன் எனலாம். அவர் எதிரே நின்று உரையாட எவரும் துணிய மாட்டார்கள். அவருடைய முறுக்கு மீசையும் அகன்ற ஆழமான கண்களும் அழுத பிள்ளையை வாய் மூடவைத்து விடும்.

இராசதுரை அவர்களின் மட்டக்களப்பு மைதானத்தில் உரையைக் கேட்ட மாத்திரத்தில் அந்தத் தமிழுக்கு அடிமையானவர்கள் பலப்பலர். இவர்களில் திரு.பீமாக்குட்டி அவர்களும் ஒருவர் என்றால் மிகையாகாது.

மட்டக்களப்பில் தமிழகத்தில் கட்சியை வளர்த்தெடுப்பதில் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்த இளைஞர் பட்டாளத்துடன் வேறு பலரும் அடங்குவர்.

இவ்வாறு திரண்ட பலரை நான் நினைக்கிறேன். காலவெள்ளத்தின் மறதி



திரு.முருகேசு

யால் அவர்களுடைய பெயர்களை நினைவு படுத்த முடியாதிருக்கிறது. இருப்பினும் முக்கிய மான பலரை இங்கு பெயர் சொல்லி அழைப்பது பொருத்தமாக இருக்கும்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாச் சாலையில் உதவி அதிபராக விளங்கிய திரு.ஏ.எம்.ஏ.அஸீஸ். பெரியபிள்ளை அக்கா, சிதம்பரப்பிள்ளை வைத்தியர், திரு.முருகேசு அமிர்தகழியில் தேனீர்க்கடை வைத்திருந்த திரு.இராசதுரை, காலஞ்சென்ற முகிலமூகன் கந்தசாமி, ஓவியர் திலகம் (தற்போது பிரபலமான மருத்துவராக விளங்கும்) டாக்டர். மா.பி.குமார், திரு.மத்தியூஸ், திரு.ஆரோக்கியம்; பிரபல எழுத்தாளர் காலஞ்சென்ற கே.எம்.ஷா (பித்தன்), ஏறாவூர் வேலுப்பிள்ளை, பிரபல படப்பிடிப்பாளர் எஸ்.நடராஜா, தட்சணாமூர்த்தி, முன்னாள் மாநகரசபை உறுப்பினர் எஸ்.கணேஷமூர்த்தி, காலஞ்சென்ற ஆரோக்கியநாதன், பிரபல இசைக்கலைஞர் காலஞ்சென்ற பாலா என்ற ஜிபாலசுப்பிரமணியம், வித்துவான் எஸ்.இ.கமலநாதன் ஆகியோரை மட்டும் இப்போது குறிப்பிடுகிறேன். இவர்களைப்போன்ற எண்ணற்ற தன்னலம் கருதாத தொண்டர்களை அடுத்தடுத்த அங்கங்களில் குறிப்பிடுகிறேன்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு கால வரலாறு கொண்ட சம்பவங்களை நினைவு கூருவது சற்றுக் கடினமானதுதான். எவரையும் வேண்டுமென்றே தவிர்ப்பதோ இருட்டடிப்புச் செய்வதோ எமது எண்ணமல்ல. இக்கால கட்ட நிகழ்வுகளை நினைவில் வைத்திருக்கும் வாசகர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு அறியத்தந்தால் இனிமேல் இடம்பெறும் தொடர்ச்சிகளில் இணைத்துக் கொள்வேன் என்பதை உறுதியாகக் கூறுகிறேன். **(வளரும்)**

---

# வாரம் ஒரு வார்த்தை!

## தென்கச்சி - கோ. சுவாமிநாதன்

**29. நன்றி**

சார்!

'இன்று ஒரு தகவலை தொடர்ந்து கேட்டுக்கிட்டு வந்ததாலே, இப்ப நீங்க என்ன நிலைமையிலே இருக்கீங்கன்னு எனக்கு ஒண்ணும் தகவல் தெரியலே!'

தகவலை சொல்லிக்கிட்டு வந்ததாலே நான் என்ன நிலைமையிலே இருக்கேங்கறதும் உங்களுக்குத் தெரியாது! ஏன்னா.. என் முகத்தை உங்களாலே பார்க்க முடியலே! உங்க முகத்தையும் என்னாலே பாக்க முடியலே! பார்த்தாலும்... பாராட்டறீங்களா? பல்லைக் கடிக்கறீங்களா?ன்னு கண்டுபிடிக்கறது ரொம்ப கஷ்டம்!

நீங்க பாட்டுக்கு 'கம்'முன்னு கேட்டுக்கிட்டு இருக்கறதுனாலே நான் பாட்டுக்கு பேசிக்கிட்டே போறதும் நல்லா இல்லை! மௌனம் சம்மதத்துக்கு அறிகுறின்னு சொல்லுவாங்க! இருந்தாலும் எல்லா மௌனத்துக்கும் அப்படி அர்த்தம் பண்ணிக்க முடியாது!

என்னமோ... நான் சொல்றதுக்குலாம் நீங்க தலையை ஆட்டிக்கிட்டே இருக்கிறதுனாலே எல்லாத்தையும் ஒத்துக்கிட்டீங்கன்னு நினைச்சுட முடியாது... எதுக்கு இவ்வளவு தூரம் சொல்றேன்னா... 'ஹிட்லர்' இருந்தாரே அவருகூட என்ன சொன்னாலும் எல்லாரும் தலையை ஆட்டிக்கிட்டுத்தான் இருந்தாங்க! அவரு கிட்டே வேலை செஞ்சவங்க அவரு கிழிச்ச கோட்டை தாண்டினதே இல்லை! என்ன சொன்னாலும்-ஏன்? எதுக்கு?ன்னு கேக்காமே அதை செஞ்சிக்கிட்டிருந்தாங்க!

ஓர் ஆங்கிலேய அரசியல்வாதி ஹிட்லரைப் பாக்கறதுக்காக போனார். அப்போ



ஹிட்லர் ஒரு கப்பலலே மேல் தளத்துலே நின்னுகிட்டுப் பேசிக்கிட்டிருக்கார். "நல்ல வேளை நீங்க பின்வாங்கினது நல்லதாப் போச்சி! இல்லேன்னா நான் உங்களை அடியோட அழிச்சிருப்பேன்! உங்களுக்குத் தெரியுமா? என்னோட ஆட்களைப் பத்தி! நான் சொல்றதை அப்படியே செய்வாங்க! ஏன் எதுக்குன்னு கேக்க மாட்டாங்க!"ன்னு பெருமையா! சொன்னார் ஹிட்லர்.

ஆங்கிலேய அரசியல்வாதிக்கு ரொம்பவும் ஆச்சரியம்! "அப்படியா?"ன்னார். உடனே ஹிட்லர், "என்ன இப்படி கேக்கறீங்க? இப்ப நான் அதை நேரிலேயே நிரூபிச்சிக் காட்டுறேன் பாருங்க!"ன்னு ஆரம்பிச்சார்.

உடனே கையைத்தட்டி ஒருத்தனை கூப்பிட்டார். ஒரு வீரன் கம்பீரமா வந்து முன்னாடி நின்னான். ஹிட்லர் அவனைப் பார்த்து "கடல்லே குதி"ன்னார். அடுத்த வினாடி அவன் பொத்துன்னு கடல்லே குதிச்சான், செத்துப் போனான்.

ஹிட்லர் மறுபடியும் கையைத் தட்டினார். இன்னொருத்தன் வந்து நின்னான், "குதி"ன்னார். ஏன் எதுக்குன்னு கேக்கலே! மறுவார்த்தை பேசாமே அவனும் குதிச்சி கடல்லே மூழ்கி போயிட்டான்.

அரசியல்வாதிக்கு ஆச்சரியம் தாங்கலே.. அவரு ஆச்சரியத்தை இன்னமும் அதிகப்படுத் தறதுக்காக ஹிட்லர் மறுபடியும் கையைத் தட்டினார்.

மூணாவது ஆள் வந்து நின்னான்! "குதி"ன்னார்! குதிக்கப்போனான்!

உடனே இந்த ஆங்கிலேய அரசியல்வாதி ஓடிப் போய் அவன் கையைப் பிடிச்சிக்கிட்டார். பிடிச்சிக்கிட்டு சொன்னார்: "உனக்கு என்ன பைத்தியமா? அவரு சொல்றாருங்கறதுக்காக இப்படி குதிச்சி உயிரை விடறதா?"ன்னு கேட்டார். அதுக்கு அந்த ஆளு,

"அடபோய்யா! இந்த மனுஷன்கிட்டே வேலை பாக்றதை விட கடல்லே விழுந்து செத்துப்போறது எவ்வளவோ மேல்! என்னை வுடுய்யா!" அப்படின்னு சொல்லிகிட்டு கையை பிடுங்கிக்கிட்டு கடல்லே குதிச்சுட்டான்! அதனாலே -எல்லா மௌனமும் சம்மதத்துக்கு அறிகுறின்னு எடுத்துக்க முடியாது!

உங்க மௌனத்தை நான் அப்படி நினைக்கலே! இருந்தாலும் அதை நினைக்கிறப்போ இந்த நினைப்பும் வந்துடுது! என்ன பண்றது? இவ்வளவும் எதுக்குச் சொல்றேன்னா..

இன்னைக்கு நான் உங்ககிட்டே விடைபெற்றுக்கிறேன். மறுபடியும் சமயம் கிடைக்கும் நாம சந்திக்கலாம்.

இந்த புத்தகத்தை ஆரம்பிக்கறப்போ வணக்கம்ன்னு சொல்லி ஆரம்பிச்சோம்.. எந்தெந்த ஊர்லே எப்படி எப்படி வணக்கம் சொல்றாங்கன்னு சொன்னோம். ஏதோ ஓர் ஊர் பாணியிலே உங்களுக்கு வணக்கம் சொன்னேன். இப்ப நான் நம்ம ஊர் பாணியிலே 'நன்றி' சொல்லலாம்ன்னு நினைக்கிறேன்! நம்ம ஊர் பாணியிலே நன்றி சொல்றதுன்னா... மூணு 'நன்றி' போட்டு ஆச்சரியக்குறி போட்டு போஸ்டர் அடிச்சி உங்க வீட்டு சுவத்துலேயெல்லாம் கொண்டாந்து ஒட்டணும்! செலவு அதிகமாகும்...

அதனாலே சிக்கனமா.. நோட்டீஸ் அடிக்கறதுக்குப் பதிலா நேரிலேயே நன்றி சொல்லிபுடறேன்! ஆச்சரியக் குறி நீங்களா போட்டுக்குங்க! என்ன சொல்லவா?

நன்றி! நன்றி! நன்றி!

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## டெண்டுல்கர்-கங்குலி மோதல்?



**இ**ந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கருக்கும் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலிக்கு மிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கங்குலியின் மாநிலமான மேற்கு வங்காளத்தில் உள்ள பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

கப்டன் பதவி தனக்குத் தேவையில்லை என்று ஒருசமயம் டெண்டுல்கர் உதறித் தள்ளியதால்தான், கங்குலி எதுவித சிரமமுமின்றி இந்திய அணிக்குக் கப்டனாகத் தெரிவு செய்யப்பட்டார்.



அண்மையில் ஸிம்பாப்வேயில் நடந்த முத்தரப்புப் போட்டித் தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்பதாக டெண்டுல்கர் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்திருந்தார். அதில் அவர்,

"கப்டன் பதவிக்கு நான் ஆசைப்படவில்லை. ஆனால் வேண்டாம் என்று நினைக்கவுமில்லை. கப்டனாக நான் இருந்தபோது எனது ஆட்டம் பாதிக்கப்பட்டது என்பதை ஏற்கமுடியாது" என்று தெரிவித்தார்.

'கப்டன் பதவி வந்தால் உடனே ஏற்கத் தயார்' என்று அப்பேட்டியில் அவர் சொல்லாமல் சொல்லியிருந்தார்.

இதையடுத்து மேற்கிந்தியத் தீவுகளுடனான இறுதிப் போட்டியில் இந்தியா தோற்றது. இதில் டெண்டுல்கர் 'டக்-அவுட்'ஆனார். ஏனைய வீரர்கள் எவ்வளவோ முயன்றும் அவர்களால் கோப்பையை வெல்ல முடியவில்லை.

இதன் பின் டெண்டுல்கர் இல்லாமல் இலங்கை வந்தது இந்தியா.

"டெண்டுல்கர் இல்லாவிட்டாலும், இந்திய அணி சிறப்பாக விளையாடி வெற்றி பெறும். நான் எடுத்த செஞ்சுரிகள் இந்தியாவுக்கு வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளன" என்று தெரிவித்திருந்தார் கங்குலி.

ஆனால் இலங்கையில் இந்திய அணி ஒருநாள் தொடரில் படுதோல்விகளைச் சந்தித்தது.

இதனால் தனது கப்டன் பதவி பறிபோய் விடுமோ என்ற பயம் கங்குலிக்கு ஏற்பட்டுள்ளது.

இவையெல்லாம் போக டெண்டுல்கருக்கும் கங்குலிக்குமிடையே மோதல்கள் பெரிதாகிக் கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. முதலில் இலங்கையில் நடந்த முத்தரப்புப் போட்டியின் இறுதிப் போட்டிகளில் கலந்து கொள்ள டெண்டுல்கர் வருவார் எனக் கூறப்பட்டது. பின் டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

டெண்டுல்கர் இலங்கைச் சுற்றுப் பயணத்தில் இடம் பெறாதது பல ஊகங்களுக்கு வழிவகுத்துள்ளது.

"எனக்கும் டெண்டுல்கருக்கும் எந்த மோதலும் இல்லை" என்று மறுத்து வருகிறார் கங்குலி. கிரிக்கெட் அணிக்குள் வீரர்களிடையே மோதல்கள், கருத்து வேறுபாடுகள் இருப்பது ஒன்றும் புதிதல்ல. ஒரு காலத்தில் இந்திய அணிக்குள் சிறந்த வீரர்களான கவாஸ்கருக்கும் கபில் தேவுக்குமிடையில்கூட மோதல்கள் ஏற்பட்டன.

எது எப்படியோ மேற்கிந்தியத் தீவுகளில் தொடக்க ஆட்டக்காரர்களான டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ்-கோர்டன் கிறீனிட்ஜுக்குப் பின் சிறப்பான துவக்க ஜோடி எனக் கருதப்படும் டெண்டுல்கர்-கங்குலி ஜோடி கசப்புக்களை மறந்து விட்டுக் களம் இறங்கினால் ஆட்டம் களை கட்டும். ■

## தலைவராக வெஸ் ஹோல்

**மே**ற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைத் தலைவராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வெஸ் ஹோல் நியமிக்கப்பட்டுள்ளார். ஹோல் பாங்க்ஸ் சபையின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1996ம் ஆண்டு முதல் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்த ரௌஸியும் துணைத்தலைவராக இருந்த ஜோசப்பும் சமீபத்தில் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் மேலாளராக இருந்த ரிக்கி ஸ்கெரிட்டை நீக்கும் முடிவை கிரிக்கெட் சபை மாற்றியதை ஆட்சேபித்தே இருவரும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தனர். ■

## 3 நாடுகள் போட்டியில் இந்தியாவும் கலந்து கொள்கிறது

**இ**ங்கிலாந்தில் அந்நாட்டு அணியுடன் இலங்கை, இந்திய அணிகள் பங்கேற்கும் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டிகள் வரும் வருடம் ஜூன் மாதம் நடைபெறவுள்ளன.

இத்தகவலை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைச் செயலர் ஜெயவந்த் லேலே தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி இந்தப் போட்டிகளில் கலந்து கொள்கிறது.

மூன்று நாடுகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித் தொடர் முடிவடைந்ததும் 4 டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்துடன் இந்தியா மோதுகிறது.

இந்தியாவில் இங்கிலாந்துச் சுற்றுப் பயணத்திற்கு முன்பதாக இலங்கை அணி, இங்கிலாந்துடன் டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

மூன்று நாடுகள் போட்டி மொத்தம் 10 ஆட்டங்களைக் கொண்டிருக்கும். இறுதிப் போட்டி ஜூலை 13ம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் நடக்கிறது.

இதற்கு முன்பதாக இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையே 3 டெஸ்ட் போட்டிகள் நடைபெறுகின்றன. ■

## பாகிஸ்தானுடன் விளையாட அனுமதி கோரல்

**ஆ**சிய டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன் போட்டிகள் வருகின்ற மாதம் பாகிஸ்தானின் லாகூரில் தொடங்கவுள்ளன.

இப்போட்டித் தொடரின் தொடக்க ஆட்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் பங்கேற்பதாக போட்டி அட்டவணையில் உள்ளது.

இப்போட்டிக்கு இந்திய அணியை பாகிஸ்தானுக்கு அனுப்புவது குறித்து, இந்திய மத்திய அரசிடம் அனுமதி கோரவிருப்பதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பொருளாளர் கிஷோர் ருங்டா தெரிவித்துள்ளார்.

## ஒப்பந்த முறையை வரவேற்கிறார் ஸ்ரீநாத்



**இ**ந்திய கிரிக்கெட்டில் வீரர்களுடன் ஒப்பந்தம் செய்யும் முறையை வரவேற்பதாக இந்திய வேகப் பந்து வீச்சாளர் ஜவகல் ஸ்ரீநாத் கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அண்மையில், வீரர்களுடன் ஒப்பந்தம் செய்யும் முறையை அமுல்படுத்த உத்தேசித்துள்ளது.

"ஒப்பந்த முறையை அமுல்படுத்த வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை. கிரிக்கெட் சபை தானாகவே இம்முடிவுக்கு வந்துள்ளமை பாராட்டத்தக்கது.

கிரிக்கெட் விளையாட்டில் முன்னணியில் இருக்கும் நாடுகளில் இந்த ஒப்பந்த முறை இருந்துவருகிறது," என்று கூறியுள்ளார் ஸ்ரீநாத். தற்போதுள்ள நிலைமையின்படி, காயம் காரணமாக வீரர்கள் போட்டிகளில் விளையாடவில்லை என்றால் அவர்களுக்கு ஊதியம் கிடைக்காது.

இந்த ஒப்பந்த முறை அமுலானால் ஊதியத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. ■

# பாடும் முட்கள்

## வித்தியாச விருந்து

இளவேனிற் காலத்தில் பூக்கள்
மட்டுமல்ல முட்களும் முளைக்கின்றன.

மலர், முள் என்ற வேறுபாடு
நமக்குத்தான். இளவேனிலுக்கு
இல்லை.

மலரைப் போலவே முள்ளும்
இளவேனில் தாய்க்குப் பிள்ளைதான்.

இரண்டின் பிறப்புக்கும் அவசியம்
இருக்கிறது.

இயற்கை தன் ஒவ்வொரு
படைப்புக்கும் ஒரு வரம் தருகிறது.

மலருக்கு அழகைக் கொடுத்த
இயற்கை முள்ளுக்கு உறுதியைக்
கொடுத்தது.

அழகு மென்மையானது.
அதனாலேயே அது சீக்கிரம் வாடி
உதிர்ந்துவிடுகிறது.

முள் உறுதியானது. அதனாலேயே
அது அதிக நாள் வாழ்கிறது.

மனிதர்களிலும் மலர்கள் உண்டு;
முட்கள் உண்டு.

மென்மை, வன்மை இரண்டும்
வாழ்க்கைக்குத் தேவை.

அழகான மலர் மகிழ்ச்சியைத்
தருகிறது.

உறுதியான முள் பாதுகாப்பைத்
தருகிறது.

வாழ்க்கையில் நமக்கு எது
கிடைக்கிறதோ அதைக் கொண்டு
மகிழ்ச்சியடைய வேண்டும்.

ஆனால் மனிதர்கள் எது கிடைக்க
வில்லையோ அதை நினைத்து
வருந்துகிறார்கள்.

மலருக்கு அழகு கிடைத்திருக்கிறது.
ஆனால் அதற்கோ தனக்கு நீண்ட
ஆயுள் கிடைக்கவில்லையே என்று
அழுகிறது.



### -கவிக்கோ அப்துல் ரகுமான்-

முள்ளோ தனக்கு அழகு
கிடைக்கவில்லையே என்று
வருந்தவில்லை. மாறாக நீண்ட
ஆயுள் கிடைத்திருக்கிறதே என்று
மகிழ்கிறது.

மனிதர்களே! மலரைப் போலப்
புலம்பாதீர்கள். முள்ளைப் போல
இருங்கள். வாழ்க்கையைக்
கொண்டாடுங்கள்.

பாகிஸ்தான் கவிஞர் ஹாமித் எழுதிய
வரிகள் இவை:

**இளவேனிலைப் புகழ்ந்து**
**பாடிக்கொண்டிருந்தன முட்கள்**
**பூக்களைப் பார்த்தேன்**
**புலம்பிக் கொண்டிருந்தன.**

# சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா பயத்தைப் போக்க என்ன செய்யலாம்?**

என்.கோபால், நாவலப்பிட்டி.

எதைக் கண்டு பயப்படுகிறீர்களோ, அதைச் செய்யத் துவங்குங்கள். பயம் செத்துப் போவதைக் காண்பீர்கள். இதை நான் சொல்லவில்லை எமர்சன் என்ற அறிஞர் சொல்லியிருக்கிறார்.

✲✲

**★ காதலித்துத் திருமணம் செய்த பெற்றோர்கள் சிலர், தம் பிள்ளைகளின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்களே?**

எஸ்.சத்தியகலா, கொச்சிக்கடை.

அவர்கள் உண்மைக் காதலின் அர்த்தம் தெரியாதவர்கள் போலும்.


✲✲

**★ காதலிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமா சிந்தியா?**

எஸ்.ஜெயசீலன், நீர்கொழும்பு.

எனக்குத் தெரிந்து தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா நகரத்தில் லியோ கிரேகர் என்பவர் முத்தம் கொடுப்பது எப்படி? என்று கற்றுக் கொடுக்கிறார். அதுவும் தபால் மூலமாக.

✲✲



பூவெல்லாம் உன்வாசம் படத்தில் யுக்தா முகி

**★ காதலுக்கும் காமத்திற்கும் இடையே என்ன வித்தியாசம்?**

கவிதா கிருஷ்ணபிள்ளை, பூண்டுலோயா.

காதலைத் தனிமையில் இருந்து கூட இரசிக்கலாம்.

✲✲

**★ கையெழுத்துக்கும் தலையெழுத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?**

வி.யோகேஸ்வரி, நிலாவெளி-திருமலை.

ஏன் இல்லாமல், இரண்டிலும் எழுத்து என்ற சொல் பொதுவாக இருக்கிறதே.

✲✲

**★ 'நச்' என்று நெத்தியடி அடிப்பது என்றால் என்ன?**

எச்.கமால்டீன், சம்மாந்துறை.

ஒருமுறை கிருபானந்தவாரியார் 'கொல்லாமை'யைப் பற்றி உபதேசம் செய்து கொண்டிருந்தார். "ஜீவராசிகளான ஆடு, கோழி இவற்றைக் கொல்லக்கூடாது. அது உயிர்க்கொலை. தாவர உணவைத்தான் சாப்பிட வேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒருவர் எழுந்து, "சுவாமி! உயிர்க்கொலை செய்வது பாவம் என்றால் காய்கறிகளை உணவில் சேர்ப்பது கூட உயிர்ப்பலிதான்.

தாவரங்களான செடி கொடிகளுக்கும் உயிர் உண்டு என்று விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. உயிர் இருப்பதால்தான் அவை வளர்கின்றன, பூக்கின்றன,காய்க்கின்றன" என்றார்.

அறிவுபூர்வமான இந்தக் கேள்விக்கு வாரியார் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று கூட்டம் ஆவலோடு பார்த்தது.

வாரியார் சிறிதும் தயங்காமல்,

"ஒரு முருங்கை மரத்தின் கிளையை வெட்டி நான்கு துண்டுகள் செய்து நான்கு இடங்களில் நட்டால், மரங்களாகி விடும். அதுபோல் ஓர் ஆட்டின் காலை நான்காகத் துண்டித்து, நான்கு இடங்களில் நட்டால், நான்கு ஆடுகளாகுமா?" என்று 'நச்' என்று ஒரு போடு போட்டார்.

கூட்டத்திலே ஒரே ஆரவாரம்.

✲✲

**★ தலைக்கனம் உள்ளோரை எதற்கு ஒப்பிடலாம் சிந்தியா?**

ஆர்.காயத்ரி, வெள்ளவத்தை.

தீக்குச்சிக்குத் தலைக்கனத்தால் தானே தனக்கு அழிவைத் தேடிக் கொள்கிறது தீக்குச்சி.

✲✲



**★ சிந்தியா மறைந்த நடிகர் திலகம் சிவாஜியிடம் உங்களுக்குப் பிடித்த குணம் என்ன?**

கே.எம்.அனீஸ், காத்தான்குடி-06.

மிகச் சிறந்த நடிகர், தொழில்பக்தி, நேரந்தவறாமை என்று பலரும் கூறுவார்கள். இவை எல்லாவற்றையும் விட சிவாஜி கணேசன் அவர்கள் ஒரு சிறந்த பண்பாளர்.

✲✲

**★ 'சிட்டிசன்' படத்தில் வித்தியாசமாக நடித்து அசத்திய அஜித் நடித்து அடுத்து வரவிருக்கும் படம் எது?**

ரிஸ்மிலா, அக்குறணை.

'பூவெல்லாம் உன்வாசம்'.

✲✲

**★ அன்பின் சிந்தியா! ஏதேனும் அதிரடியான விஷயம் இருக்கிறதா?**

கே.டினேஷ், அக்கரப்பத்தனை.

காதலியோடு ஒருவன் ஹொட்டலுக்குப் போனான். ஓர் இரவு தங்கினான். அடுத்த நாள் அறையைக் காலி செய்தபோது, "பில் தொகை 50 டொலர்" என்று சொன்னார் ஹொட்டல் முதலாளி.

"இந்த ஹொட்டல் வாடகை 25 டொலர் தானே. எதுக்கு 50 டொலர்!" என்று கேட்டான் அவன்.

"இங்கே சாப்பிடும் வசதியும் உண்டு. அதற்கு 25 டொலர். நீங்கள் சாப்பிடவில்லை. அதற்கு நான் பொறுப்பில்லை" என்றார் ஹொட்டல் முதலாளி.

அந்த இளைஞன் கொஞ்ச நேரம் யோசித்து விட்டு,

"சரி நான் 50 டொலர் தர்றேன். ஆனா, நீங்கள் என் காதலியை நேற்று இரவு அனுபவித்ததற்காக எனக்கு 50 டொலர் தரவேண்டும்" என்றான்.

"ஐயையோ நான் அப்பிடி எதுவும் செய்யவில்லையே" என்றார் முதலாளி.

"என் காதலி அதற்குத் தயாராகத்தான் இருந்தார். நீங்க அனுபவிக்காததற்கு நான் பொறுப்பில்லை" என்று ஒரு போடு போட்டான் அந்த இளைஞன்.

✲✲ ■

# மன்னாதி மன்னன்

71

## ரஸக் கிணற்றின் மர்மம்

மதுராபுரி மன்னன் மகேந்திரன் அங்கு தளபதியாக வந்து சேர்ந்த ஆதித்தன் என்ற பெயரில் உலவிய விக்கிரமாதித்தனை எப்படியாவது ஒழித்துக் கட்டிவிட்டு, அவருடைய இரண்டு மனைவியர்களான இரத்தினமாலையையும், முத்து நகையையும் தான் எப்படியாவது அடைந்தே தீரவேண்டுமென்று மந்திரியுடன் சேர்ந்து திட்டம் தீட்டினான். விலையயர்ந்த முத்துக்களைக் கொண்டுவந்து சேர்க்கும்படி ஆதித்தனை அனுப்பினர். விக்கிரமாதித்தனோ முத்துக்களையும் முத்துநகை என்ற பேரழகியையும் கொண்டு வந்து சேர்த்து விட்டார்.

விலையுயர்ந்த இரத்தினங்களைக் கொண்டு வந்து சேர்க்கும்படி ஆதித்தனை அனுப்பிய போது இரத்தினங்களுடன் மேலும் ஐந்து அழகிகளை அழைத்துக் கொண்டு வந்து சேர்த்தார். மிகக் கடுமையான பணிகளையும் குறித்த காலக்கெடுவக்குள் ஆதித்தன் முடித்து விடுவதனால், அவரை ஒழித்துக் கட்டுவது முடியாத காரியமென்று மன்னன் கருதினான். ஆதித்தன் இரத்தினங்களுடன் வந்து சேர்ந்த அன்றைய தினம் மாலையானதும்,. அரண்மனையிலிருந்து ஆதித்தனுடன் சென்ற கார்க்கோலகனும், கோடிகனும், ஆதித்தன், மேலும் ஐந்து பேரழகிகளை அழைத்து வந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தனர். உடனடியாக மன்னரிடம் சென்று தாங்கள் கண்ட பேரழகிகளான ஐந்து பெண்களைப் பற்றியும் வர்ணித்தனர்.

மெய்காப்பாளர்கள் கூறிய அந்த அழகிய பெண்கள் ஐவரையும் தான் உடனே பார்க்க வேண்டுமென்று மன்னன் மகேந்திரன் ஆசைப்பட்டான். அடுத்த நாள் மாலையில் கார்க்கோடகன், மன்னனுக்கு கோடிகனின் ஆடைகளை அணிவித்து தன்னுடன் அழைத்துக்கொண்டு விக்கிரமாதித்தனின் மாளிகைக்குச் சென்றான்.

மன்னன் மகேந்திரனும் மெய்காப்பாளர் கார்க்கோடகனும் சேர்ந்து தீட்டிய சதித் திட்டத்தை முன்னதாகவே அறிந்து கொண்ட அனந்தன், விக்கிரமாதித்தன் மாளிகையின் முன்புற வாயிலில் தனது வாயை அகலமாக விரித்துக்கொண்டு படுத்திருந்தான். கார்க்கோடகனும் மன்னனும் அனந்தன் வாயைத் திறந்து கொண்டு படுத்திருப்பதைக் கவனிக்



காமல் முன் மண்டபத்துள் நுழைந்தனர். அப் போது அனந்தனின் கொடிய விஷப்பல் அவர்கள் இருவருடைய கால்களிலும் பட்டு விட்டது. உடனடியாக இருவரும் விஷம் ஏறி மயங்கிக் கீழே விழுந்து விட்டனர்.

மன்னருக்கும் கார்க்கோடகனுக்கும் ஏற்பட்ட கதியையிட்டு அனந்தன் உள்ளே சென்று விக்கிரமாதித்தனிடம் நடந்தவற்றைக் கூறினான். விக்கிரமாதித்தன் சிரித்துவிட்டு,"அனந்தா நீ செய்தது சரியே. ஆனால் அவர்களது உயிர் பிரியாமல் பார்த்துக் கொள். இன்னும் சில காலம் மன்னன் மகேந்திரனிடம் நாம் உறவு கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருப்பதனால் அவர்களுடைய விஷத்தை கீழே இறக்கி ஒவ்வொரு காலிலும் நிறுத்தி வைத்து விடு!" என்று கூறினார். இதனை ஏற்றுக் கொண்ட அனந்தன் அரசனுடைய கணுக்காலிலும் கார்க்கோடகனுடைய முழங்காலிலும் விஷத்தை இறக்கி விட்டான்.

மயக்கம் தெளிந்த கார்க்கோடகன் வேதனை தாங்காமல் ஒரு காலை இழுத்துக் காண்டு மன்னரிடம் வந்து அவரை எழுப்பினான். ஆனால் மன்னரால் எழுந்திருக்க முடியவில்லை. அரசனைத் தூக்கித் தன் தோளில் சுமந்து கொண்டு கார்க்கோடகன் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டான். அரண்மனை வைத்தியர்கள் சிகிச்சையளித்து அரசனின் மயக்கத்தைத் தெளிவித்தனர்.

இத்தனை ஆன பின்னரும்கூட மன்னனால் ஆதித்தன் மாளிகையில் தான் கண்ட பேரழகிகளை மறக்க முடியாமல் போய் விட்டது. உடனடியாக மந்திரியை தன்னிடம் வருமாறு அழைப்பித்தார். மந்திரிக்கு கார்க்கோடகனின் புத்தியைக் கேட்டு மன்னர் துன்பத்தை வரவழைத்துக் கொண்டதைக் கண்டு வேதனை ஏற்பட்டது.

அன்றிரவு முழுவதும் மந்திரியை எங்குமே போக விடாமல் தன் படுக்கையறையிலேயே வைத்து மன்னர் சதா தான் கண்ட அழகிகளைப் பற்றியே வர்ணித்துக் கொண்டிருந்தார். எப்படியாவது அந்த ஏழு அழகிகளையும் தான் அடைவதற்கு வழி சொல்லுமாறு மந்திரியிடம் கேட்டுக் கொண்டேயிருந்தார்.

அப்போதுதான் தளபதி ஆதித்தனை ஒரேயடியாக ஒழித்துக்கட்டி விடுவதற்கு இருக்கும் ஒரேயொரு மார்க்கத்தைப் பற்றி மன்னரிடம் மந்திரி இரகசியமாக ஒரு திட்டத்தைச் சொன்னார்.

மந்திரி கூறிய அந்த உபாயம் அரசனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அரசன், "மந்திரி, ஆதித்தன் ஓர் அசகாய சூரனாக இருக்கிறான். எத்தகைய காரியத்தையும் தவறாமல் செய்து முடிக்கிறான். அவனைக் கட்டாயம் ஒழித்துக் கட்டியேயாக வேண்டும். அதற்கு நீர்தெரிவித்த உபாயம் மட்டுமே வழிவகுக்கும்," என்று கூறி மந்திரியை வழியனுப்பிவிட்டு ஆதித்தன் அரண்மனையில் தான் பார்த்த ஒவ்வொரு

## இராஜகுமாரன்

அழகியையும் பற்றிய கனவில், விடியும்வரை சுகித்திருந்தான்.

பொழுது புலர்ந்ததும் தளபதி ஆதித்தனை தன்னிடம் உடனே அழைத்து வரும்படி பணித்தான். ஆதித்தன் வந்து சேர்ந்ததும் அவரை வரவேற்று மன்னன் பலமாக உபசரித்தான்.

"தளபதியாரே! நமது நகரத்தில் மேற்கு மூலையில் ஓர் அதிசயக் கிணறு இருக்கிறதாம். அதனை இதுவரை நான் போய்ப் பார்த்ததே இல்லை. எவரையும் உடன் அழைத்துச் செல்லாமல் நாம் இருவர் மட்டும் அக் கிணற்றினைப் போய்ப் பார்த்துவிட்டு வருவோம். வருகின்றீரா?" என்று ஆதித்தனிடம் அரசன் கேட்டான். அதற்குச் சம்மதமளித்த ஆதித்தன் "அடுத்த நாள் காலையிலேயே புறப்பட்டுச் செல்வோம்" என்று கூறினார்.

அரசனுடைய இந்தக் கோரிக்கையில் ஏதோ மர்மம் புதைந்திருக்கிறது என்று கருதிய விக்கிரமாதித்தன் தனது மாளிகைக்கு வந்ததும் வேதாளத்தை அழைத்து அரசன் கூறிய ரஸக்கிணறு பற்றிய விபரங்களைக் கூறுமாறு கேட்டார். வேதாளம் தனது ஞான திருஷ்டியால் அந்த ரஸக் கிணற்றின் மர்மத்தை விளக்கிக் கூறியது.

வேதாளம், "அரசே மன்னன் மகேந்திரன் பெண்ணாசை பிடித்தவன். அவனுக்கு ஏற்றாற் போல் தூபம் போடுபவன் கார்க்கோடகன். அவன் மூலமாகத்தான் தங்கள் மனைவியர்களை மாறு வேடத்தில் வந்துப் பார்த்துப் பார்த்து அரசன் மதி மயங்குகிறான். அவர்களை அடைய மார்க்கம் கூறுமாறு மந்திரியைப் பணிக்கிறான். விலையுயர்ந்த முத்துக்களைக் கொண்டு வருமாறு கேட்டதும், இரத்தினங்கள் வேண்டுமென்று கோரியதும், இக்காரியங்களைத் தங்களால் முடிக்க முடியாமல் தாங்கள் உயிர்துறந்து விடுவீர்கள் என்று கருதியே தங்களை அனுப்பி வைத்தான். தாங்கள் உயிரோடு திரும்பி வந்து விட்டீர்கள். இப்பொழுது ரஸக் கிணறுக்கு தங்களை அழைத்துக் கொண்டு செல்லுமாறு மந்திரி தான் ஆலோசனை கூறியிருக்கிறான்.

"ரஸக் கிணறு உண்மையில் ஒரு பயங்கரமான பொறி. அந்தக் கிணற்றின் ஆழம் எவருக்குமே தெரியாது. பலதரப்பட்ட விஷ ஊற்றுக்கள் இந்தக் கிணற்றுள் பொங்கிய வண்ணமிருக்கின்றன. இந்த நகரத்தின் கொடிய குற்றங்களைப் புரியும் குற்றவாளிகளை தூக்கிலிடவோ, கழுவிலேற்றவோ, வாளால் சிரச்சேதம் செய்யவோ மாட்டார்கள். அவனைக் கிணற்றடிக்குக் கொண்டுபோய் கிணற்றில் தள்ளி விடுவார்கள். இதே போல் அந்தக் கிணற்றடிக்குச் சென்றதும், அரசன் தன்னுடைய முத்திரை மோதிரத்தை கிணற்றினுள் நழுவ விட்டுவிடுவான். அதனை அக் கிணற்றினுள் இறங்கி எப்படியாவது எடுத்துத் தந்து விடும்படி மன்னன் தங்களைக் கோருவான்.

"எக்காரணம் கொண்டும் தாங்கள் அக்கிணற்றினுள் முழுமையாக இறங்கிவிட வேண்டாம். முன்னதாகவே அனந்தனை கிணற்றினுள் இறங்கியிருக்கும் படி கேட்டுக் கொள்ளுங்கள். அரசன் போடும் மோதிரத்தை அனந்தன் விழுங்கிவிடட்டும். தாங்கள் கிணற்றினுள் இறங்கப்போவதாக பாசாங்கு செய்துவிட்டு, கிணற்றினுள் இறங்கும் படி வழியே சிறிது தூரம் இறங்கி அனந்தனிடம் மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்துவிடலாம்," என்று வேதாளம் கூறியது.

இத்தனை விவரமாக வேதாளம் கூறியதைக்கேட்ட விக்கிரமாதித்தன் மகிழ்ச்சியுடன் வேதாளத்தைப் பாராட்டினார்.

அடுத்த நாள் காலை அரண்மனையின் முன்புறவாயிலில் இரு குதிரைகள் காணப்பட்டன. அவ்விடத்திற்கு விக்கிரமாதித்தன் வந்து சேர்ந்ததும் அரசனும் அரண்மனையிலிருந்து அவ்விடம் வந்தான். இருவரும் இரு குதிரைகளிலும் ஏறிக் கொண்டு நகரத்தின் மேற்குப் புறமாகச் செல்லும் வீதியில் வேகமாகச் சென்று இரு நாழிகைகளில் ரஸக் கிணற்றடிக்குப் போய்ச் சேர்ந்தனர்.

விக்கிரமாதித்தன் வேதாளம் கூறிய கதைகளை நினைத்தவராக மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். கிணற்றடிக்கு வந்ததும் அரசன் முன்னதாகவே குதிரையை விட்டிறங்கி அக்கிணற்றைச் சுற்றிச் சுற்றி நடந்து வந்தான். விக்கிரமாதித்தனும் அரசன் பின்புறமாக நடந்து சென்றார். அவ்வாறு செல்லும் போதே ஏற்கனவே தான் பணித்திருந்தபடி அனந்தன் கிணற்றுள் இருக்கிறானா என்பதைப் பார்த்துத் தெரிந்து கொண்டார்.

இந்த வேளையில் அரசன் தனது முத்திரை மோதிரத்தை மெதுவாக விரலிலிருந்து கழற்றி கிணற்றினுள் போடுவதையும் கண்டார். அரசனுக்குத் தெரியாமல் அம் மோதிரத்தை பாம்புருவில் வாயைத் திறந்து கொண்டிருந்த அனந்தன் விழுங்குவதையும் பார்த்துக் கொண்டார்.

*(மன்னன் வருவான்..)*


# காதில பூ கந்தசாமி

*கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.*

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:.................... ஒப்பம்:...............




***அபிமான வாசகர் போட்டியில் ஏழாவது: தமிழ் அரசியல்வாதிகளில் புளுகர் மன்னரென்று முடிசூடக்கூடிய புளுகரொருவரையும் அவர் கூறிய அதி பெரும் புளுகையும் எழுதுக. முடிவுத் திகதி ஆகஸ்ட் 31.***

அதெண்டாப் பாருங்கோ தமிழ்ச் சினிமா உலகத்துக்கு எங்கட சிவாஜியிண்ட சேவை பெருஞ்சேவைதான். நோ டவுட், அன்ட் நோ அதர் குவர்ஷன். அந்தாள் ஒரு இமயம்பாருங்கோ. நடிப்புக்கு வரைவிலக்கணம் குடுத்த மனிஷன். தமிழ்ச் சினிமாவில வசன நடிப்பை அறிமுகம் செய்த மனிஷன். அது மட்டுமில்லை, எங்களுக்குத் தெரியாத வரலாற்றுக் கதாபாத்திரங்களுக்கு வடிவம் கொடுத்தவரும் அவர்தான். அதுக்கும் அங்கால புராண பாத்திரங்களுக்கும் தெய்வ உருவங்களுக்கும் உயிர் குடுத்ததும் அவர்தான். அந்தாள் செத்ததில எல்லாரையும் விடக் கவலைப் படுற மனிஷன் யாரெண்டால் அது இந்தக் காதில பூவத் தவிர வேற யாரா இருக்க ஏலும்பாருங்கோ?

ஏனெண்டால் பாருங்கோ, எனக்கும் சிவாஜிக்குமிருந்த நட்பெண்டிறது எந்தளவு ஆழமானது, அகலமானது, நீளமானது, உயரமானதெண்டதெல்லாம் எவருக்கும் புரியாது. அது ஏனெண்டால் நான் மற்றவயலப்போல எங்கட நட்ப ஒரு விளம்பரமாப் பகிரங்கப் படுத்தினதில்லை. இண்டைக்கு எத்தினயோபேர் சிவாஜி செத்த உடன, சிவாஜியப் பற்றி எழுத வெளிக்கிட்டிருக்கினம். ஆனால் அவை சிவாஜிய அங்க உண்மையா எழுதேல்ல. சிவாஜியச் சொல்லிறதாக் காட்டிக்கொண்டு தங்களப் பற்றித்தான் பறைதட்டிக்கொள்ளப் பாக்கினம். சிவாஜி என்னோட பேசக்க, இதச் சொன்னார், அதைச் சொன்னார், சிவாஜி என்னைக் கட்டித் தழுவினார், எனக்குக் கைகுடுத்தார், கால் குடுத்தார், கொஞ்சினார், கிள்ளினார், நுள்ளினார், கிச்சம்காட்டினாரெண்டெல்லாம் எழுதித் தள்ளுறாங்கள். இப்பிடியெல்லாம் அந்தப் பெரிய கலாமேதையிண்ட சாவில குளிர்காயப் பாக்கிறது அசிங்கமான காரியமெண்டு நான் சொல்லிவைக்க விரும்பிறன் கண்டியலோ.

இதப்பற்றி சிவாஜி எனக்கு முன்னமே சொல்லியிருந்தார். இங்க பாரும் காதிலபூ, நான் ஒருவேளை செத்துப்போனால் இவங்கள் எவரும் என்னப்பற்றி எழுத மாட்டாங்கள். என்ர பெயரைப் பாவிச்சுத் தங்களப் பற்றித்தான் எழுதிறதுக்கு முன்னுக்கு நிப்பாங்கள். இந்த நேரத்தில நீர்தான் என்னைப்பற்றின பெருமைகள உள்ளபடி வெளிக்கொணர வேணுமெண்டு என்ர கையப்பிடிச்சுச் சொல்லியிருந்தவர். நான் சொன்னன், "டோண்ட் வொரி, சிவாஜி, உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பெண்டு வள்ளுவர் சொன்ன வாக்கியத்தை நான் அரைகுறையாப் பாடமாக்கி வைச்சிருக்கிறதே உமக்கேதும் பிரச்சினை வந்தால் சொல்லாமலே வந்து உதவுறதுக்கெண்டுதான். நான் பாத்துக்கொள்ளுறன். ஆனால் ஒரேயொரு கெண்டிஷன் எண்டன்.

சிவாஜி, ஒரு 'ராஜராஜசோழன்' சிரிப்புச் சிரிச்சிட்டுக் கேட்டார், "அடே சிலோன்காரா, கெண்டிஷன் போட்டே பேச்சை மாத்திறதில கில்லாடிகள் நீங்களெண்டது எனக்குத் தெரியும். பரவாயில்லை, சொல், கேக்கிற"னெண்டார். நான் சொன்னன், "அதொண்டுமில்லை, நீங்கள் செத்தால் உங்கட பெருமையள நான் வெளிக்கொண்டுவாற மாதிரி, தற்சமயம் நான் முன்னால செத்துக்கித்துப் போனால் என்ர பெருமையள நீங்கள்தான் வெளியுலகத்துக்குச் சொல்ல வேணுமெண்டன். சிவாஜியிண்ட கண்ணில அந்த நேரம் திரண்ட கண்ணீரை நீங்கள் பாத்திருக்க மாட்டியல். உணர்ச்சி பொங்கித் தளதளத்துப் போனார். "போயிடுவாயா, என்னை விட்டுட்டு முன்னால போயிடுவாயா நீ! ராஸ்க்கல்" எண்டிட்டு விட்டாரே ஒரு குத்து! அந்த வலி, இன்ப வலி, இன்னும் இனிச்சுக்கொண்டுதான் இருக்குது என்ர நெஞ்சில. பிறகு வானத்தப் பாத்தபடி சொன்னார், "அப்பிடி ஏதும் ஒரு துர்ப்பாக்கியம் நடந்தால்.... வானத்தில நட்சத்திரங்களும் இருக்காது, தமிழில வார்த்தைகளும் இருக்காது. நட்சத்திரங்களையெல்லாம் பறித்துவந்து உன் இறுதிக் கிரியைக்குத் தோரணமாகத் தொங்கவிட்டிருப்பேன். தமிழ் வார்த்தைகளெல்லாவற்றையும் அள்ளியெடுத்துவந்து உன்னைப்பற்றியே பேசித் தீர்த்திருப்பேன்" எண்டார். புல்லரிச்சுப் போனன் பாருங்கோ.

ஆனால்பாருங்கோ, துர்ப்பாக்கியம் எனக்குத்தான். நானிருக்க அவர் செத்துப் போனார். அவருக்கு எத்தினயோ பேர் எத்தினயோ விதத்தில தங்கட அஞ்சலியச் செலுத்திக் காட்டியிருக்கினம். நான் என்ர காதில இருக்கிற பூவை எடுத்து அவற்ற படத்தில சொருகி வைச்சுக் கும்பிடுறன். ஒருநாளும் காதால எடுக்காத பூவச் சிவாஜி எண்ட சிம்மத்துக்காக எடுத்திருக்கிறன்.

நான் சிவாஜிக்கு வாக்குக் குடுத்த மாதிரி அவரைப்பற்றிய அருமை பெருமைகளையெல்லாம் வெளியுலகத்துக்கு தெரியப் படுத்த 'காதிலபூ கண்ட சிவாஜி' எண்டு ஒரு புத்தகத்தை வெளியிட யோசிச்சிருக்கிறன். அதில சிவாஜி எனக்கு மட்டுமே சொன்ன இதுவரை தெரியாத சில சுவையான விடயங்களையும், நான் சிவாஜிக்குச் சொன்ன எனக்கு மட்டுமே தெரிஞ்ச பல விடயங்களையும் வெளிக்கொணரப்போகிறன். அது, நீங்கள் நிதியுதவி தந்து உதவுவதிலேதான் தங்கியிருக்கு. எனவே சிவாஜிக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு உங்களைச் சார்ந்தது. இந் நூல் முயற்சியின் வெற்றியைப் பொறுத்து அடுத்த திட்டமும் உண்டு. சிவாஜி எனக்குத் தந்த செருப்பு முதற்கொண்டு அத்தனை அன்பளிப்புகளையும் வைச்சு ஒரு எக்ஸிபிஷன் நடத்தினால்கூட சிவாஜிக்கு நான் பட்டிருக்கிற நன்றிக் கடனையும் அடைச்சு, நான் வெளியால பட்டிருக்கிற வட்டிக் கடனையும் அடைக்க கொஞ்சம் பணம் தேட உதவும். அது சக்ஸசாய் முடிஞ்சால் எனக்கு சிவாஜி தந்த ஞாபகப் பொருட்களையும் நான் சிவாஜிக்கு குடுக்க நினைத்திருந்த பொருட்களையும் ஏலத்தில் விட்டு அந்தப் பணத்தில் சிவாஜி ஞாபகமாகவே ஒரு வீட்டை வாங்கி அதற்கு 'சிவாஜி இல்லம்' என்று பெயர் வைத்து அதில் குடியிருக்க எண்ணியுள்ளேன். எல்லாம் சிவாஜிக்காகவே. வாழ்க சிவாஜி நாமம். உங்கள் ஆதரவை அள்ளித் தாருங்கள்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்பின்னிப்பிணைகின்றன.
கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# குஷியான குதியல்






SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
326651


## சதுரங்க நடுவிலே

ஜெர்மனியின் முன்னாள் நாஸி இயக்கத் தலைவர்களுள் ஒருவரான ருடொல்ப்ஹெஸ் சர்வாதிகாரி ஹிட்லரின் பிரதான உதவியாளராகப் பதவி வகித்தவர். சதுரங்க விளையாட்டில் பயன் படுத்தப்படும் காய்கள் பலதரப்பட்ட இரண்டாம் உலக மகாயுத்த வீரர்களைப் பிரதிபலிப்பதாக வடிவமைக்கப்பட்டிருந்தமை பற்றி ஏற்கனவே முரசின் இதே பக்கத்தில் படமொன்று பிரசுரித்திருந்தோம்.

இப்படத்தில் சதுரங்க ஆட்டக்காய்கள் நாஸி இயக்கத் தலைவர்கள் சிலரை மாடலாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளதை காண்கிறீர்கள். இவற்றுள் ருடொல்ப் ஹெஸ்ஸின் மாதிரி தோற்றமுடைய ஒன்று அண்மையில் இடம்பெற்ற ஏல விற்பனையின்போது 3376 ஸ்ரேலிங் பவுணுக்கு விற்பனையானது.





## ஆஹா... அபூர்வம்

உறொயெட்ஸர் என்பது படத்தில் காணப்படும் இந்த வயலின் வாத்தியத்துக்குரியது. என்டோனியோ ஸ்ராடிவாறி என்ற கலைஞர் 1727ம் ஆண்டு வடிவமைத்தார்.

இந்த அபூர்வமான வயலின் இலண்டன் மாநகரிலுள்ள கிறிஸ்டியின் ஏலக் கூடத்தில் 1998ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதி ஏலத்தில் விடப்பட்டபோது, 947,500 ஸ்ரேலிங் பவுணுக்கு விற்பனை செய்யப்பட்டது.

அதிவுயரமான இடத்திலிருந்து கால்களில் அல்லது இடுப்பில் இறப்பர் நாலிழை இணைந்த கயிறுகளால் கட்டிக்கொண்டு பூமியை நோக்கி பாயும்போது அப்படி பாய்பவர் தலைகீழாக வேகமாக வந்து தரையுடன் முட்டி மோதி உயிர் விடப் போகிறார் என்றுதான் எல்லோரும் நினைப்பார்கள். ஆனால் அவ்வாறு கீழ்நோக்கி வருபவர் மீண்டும் அதே வேகத்தில் மேல் நோக்கிச் சென்றுவிடுவார். மேலே காணப்படும் படம் ஜெர்மன் முனிச் நகரில் இடம்பெற்ற விளையாட்டுகளுள் மக்களை வெகுவாகக் கவர்ந்தது இந்த குஷியான பங்கி பாய்தல்தான்.

1997ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதியன்று இடம்பெற்ற இந்த விளையாட்டில் 16 பெண்கள் தங்கள் ஒற்றைக் கால்களில் கயிறுகளைக் கட்டிக் கொண்டு 52 மீற்றர் உயரமுள்ள மேடையிலிருந்து ஒன்றாகக் குதித்து சாதனையை நிலைநாட்டினார்கள்.

## 1 வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி அபிஷா சந்திரமோகன்**

**06.08.2001**

ஜெர்மனியில் வசிக்கும் சந்திரமோகன்-தயாளினி தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிஷா தனது 1வது பிறந்த நாளை (06.08.2001) 18.08.2001ல் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அபிஷாவை அன்பு அப்பா, அம்மா இந்தியாவில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், முகுந்தன் சித்தப்பா (லண்டன்) சிவாமாமா, விஜி அத்தை (பிரான்ஸ்) உதயன் சித்தப்பா, வாணிச் சித்தி (சுவிஸ்) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென மனமார வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: சிவம் பெரியப்பா (கொழும்பு)



## ஆச்சரியம்

ஜெர்மன் நகரமான உல்மில் காணப்படும் இந்தத் தேவாலயம், உலகிலுள்ள மிகப்பழமை வாய்ந்த தேவாலயங்களுள் ஒன்றாகும். இந்த ஆலய கோபுரத்தின் மேலுள்ள கூர்மையான கலசத்தின் உயரம் மட்டும் 160.9 மீற்றர் (528 அடி) உயரமுடையது. இந்தத் தேவாலயம் 1377ம் ஆண்டில் கட்டத் தொடங்கப்பட்டது. ஆனால் 573 ஆண்டுகள் கட்டடப் பணிகள் நடைபெற்று 1890ம் ஆண்டு முழுமையாக முடிவடைந்தது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜெர்மனியில் மட்டுமல்லாமல் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பழமை வாய்ந்த எல்லா தேவாலயங்களும் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டன. ஆனால் இந்தத் தேவாலயத்துக்கு மட்டும் எந்தவிதமான தீங்கும் ஏற்படவில்லை.


வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின்
முன்னணி அரசியல் சக்தியான ஈ.பி.டி.பி.யின் இணையத்தளம்
http://www.epdpnews.com/
WELCOM TO EPDPNEWS.COM
சமாதானம் — ஜனநாயகம் — சமூகமுன்னேற்றம்




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஆக.19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.